# திருமகளும் கலைமகளும்

# திருமகளும் கலைமகளும்

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS

கல்கி

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI

UNIVERSITY EXTENSION LIBRARY
16 DEC 1957
MADURAI

பாரதி பதிப்பகம்

தியாகராயநகரம் :: சென்னை - 17

*Univ. Grants Commission.*

முதற் பதிப்பு 20-12-'56

விலை ரூ. 2-8-0

1303

மாருதி பிரஸ், ராயப்பேட்டை, சென்னை-14

# பதிப்புரை

நம் நாடு பலகாலம் அந்நியருக்கு அடிமைப்பட்டுக் கிடந்ததைப் போல, நமது கல்வி முறையும் அந்நியச் சூழ்நிலையில் சிக்கி நலிவுற்று இருளடைந்தது. கல்வித் துறையில் இருளா, நலிவா எனப் பலருக்கு வியப்பாகத் தோன்றலாம். ஆம். உண்மைதான்! இத் தொகுதியி லுள்ள கட்டுரைகளைப் படிப்பவர்களுக்கு அதன் உண்மை தெரியவரும்.

1946-ம் ஆண்டு பேராசிரியர் கல்கி அவர்களின் கருத்தில் ஓர் புத் துணர்ச்சி ஏற்பட்டு, 'கல்கி' இதழ்களில் தொடர்ந்து கட்டுரைகளாகப் பரிணமித்தன. அவற்றைப் பதினாயிரக் கணக்கானவர்கள் படித்து விட்டு, நமது கல்விக் கூடங்களும் பாடப் புத்தகங்களும் இவ்வளவு மடமையிலா இருந்து வந்திருக்கின்றன என்று பிரமித்தார்கள். வருந்தி னார்கள்; இதற்கு விமோசனம் இல்லையா என ஏங்கினார்கள். ஏனெனில், பாடப் புத்தகங்களிலுள்ள குற்றங்குறைகளையும், பரீட்சை முறையி லுள்ள அசம்பாவிதங்களையும், மாணவர் குலத்தின் மன வேதனைகளையும் அணு அணுவாக ஆராய்ந்து கூறும் துணிவும் ஆற்றலும் அதுவரை யாருக்கும் உண்டாகவில்லை.

தமிழ் நாடு செய்த தவப்பயனாய் பேராசிரியர் கல்கி அவர்கள், கல்வித் துறையைப் பற்றியிருந்த இருளுக்குத் தமது கட்டுரைகள் மூலம் ஒளி உண்டாக்க முன் வந்தார். மேற்படி கட்டுரைகள் தொடர்ந்து வெளிவந்த போது மாணவர்கள், பெற்றோர்கள், உபாத்தியாயர்கள், பாடப் புத்தகம் எழுதும் ஆசிரியர்கள், கல்வி இலாகா அதிகாரிகள் உள்பட அத்தனை பேரையும் திகைக்க வைத்துவிட்டது.

இலக்கணம், பூகோளம், சரித்திரம், ஆங்கிலம் இப்படி பகுதி பகுதி யாக ஒவ்வொன்றையும் எடுத்து ஆராய்ந்து, அவற்றிலுள்ள குறைகளை ஆதார பூர்வமாக எடுத்துக் காட்டினார். அதோடு அவர் நின்றுவிட வில்லை. நம் நாட்டுக்கு எத்தகைய கல்வி முறை தேவை என்பதையும் அறிஞர்களின் கருத்துக்களோடு ஒப்பிட்டு தெளிவாக விளக்கினார்.

மேற்படி கருத்துப்படி அமைந்ததுதான் ராஜாஜியின் புதிய கல்வித்திட்டம். அதன் விளைவாக, குழந்தைக் குலத்துக்கு விடுதலை கிடைக்கும்; கல்வியறிவோடு தொழில் அறிவும் ஏற்படும்; வேலையில் லாத் திண்டாட்டம் ஒழியும்; படிக்கும் மாணவர்கள் தொகை அதிகரிக் கும்; கல்விக் கூடங்களில் இடம் இல்லை என்ற கூப்பாடு ஒழியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. துரதிர்ஷ்டவசமாக, ராஜாஜியின் புதிய கல்வித் திட்டத்தை ஏற்கும் பாக்கியம் தமிழ் நாட்டுக்கு இல்லாமல் போய்விட்டது. அந்த பாக்கியம் எப்பொழுது ஏற்படுமோ?

கல்கி அவர்களின் ஆராய்ச்சி நிறைந்த கட்டுரைகளைத் திரட்டி நமது 'கல்வி முறையின் நினைவா'க இத் தொகுதியை வெளியிடுகிறோம். இதன் மூலம் மாணவர் குலமும் மற்றவர்களும் கல்கி அவர்களின் சேவைக்கு என்றென்றும் நன்றி செலுத்துவார்கள் என்பது திண்ணம்.

சென்னை-17
20—12—'56

பழ. சிதம்பரன்
உரிமையாளர்: பாரதி பதிப்பகம்

# கல்கியின் நூல்கள்

★

| | | |
|---|---|---|
| அலை ஓசை பரிசு பெற்ற நூல்: | 12 | 8 |
| பார்த்திபன் கனவு | 7 | 8 |
| அபலையின் கண்ணீர் | 1 | 4 |
| பொய்மான் கரடு | 3 | 0 |
| ஏட்டிக்குப் போட்டி | 3 | 0 |
| சாரதையின் தந்திரம் | 3 | 4 |
| மாடத்தேவன் சுனை | 2 | 8 |
| மோகினித் தீவு | 1 | 12 |
| ஒற்றை ரோஜா | 1 | 12 |
| தேவகியின் கணவன் | 1 | 8 |
| நாட்டுக்கொரு புதல்வர் | 1 | 12 |
| நம் தந்தையர் செய்த விந்தைகள் | 1 | 8 |
| பாரதி பிறந்தார் | 3 | 0 |
| ஜமீன்தார் மகன் | 1 | 8 |
| தாகூர் தரிசனம் | 1 | 8 |
| இலங்கையில் ஒருவாரம் | 1 | 8 |
| மூன்று மாதக் கடுங்காவல் | 2 | 0 |
| புன்னைவனத்துப் புலி | 1 | 0 |
| பாங்கர் விநாயகராவ் | 1 | 4 |
| இலங்கைப் பிரயாணம் | 1 | 12 |
| காரிருளில் ஒரு மின்னல் | 1 | 12 |
| திருவழுந்தூர் சிவக்கொழுந்து | 1 | 12 |
| தெய்வ தரிசனம் | 1 | 0 |
| தரம் குறையுமா? | 4 | 0 |
| திருமகளும் கலைமகளும் | 2 | 8 |
| மகாத்மாவும் மகாகவியும் | 1 | 8 |
| குமரியும் குன்றமும் | 2 | 0 |
| கண்கொள்ளாக் காட்சி | 2 | 0 |
| யார் இந்த மனிதர்கள்? | 2 | 12 |
| தமிழ் வளர்த்த கல்கி | 2 | 8 |
| பேராசிரியர் கல்கி | 2 | 12 |
| வர்ணனைகள் | 1 | 8 |
| நகைச்சுவை | 1 | 8 |
| இசை விருந்து | 2 | 0 |
| கலைச் செல்வம் | 2 | 0 |
| அமரதாரா | 18 | 12 |
| அமரவாழ்வு | 2 | 4 |
| மகுடபதி | 3 | 8 |
| வீணை பவானி | 2 | 12 |

UNIVERSITY ... LIBRARY
MADURAI

# திருமகளும் கலைமகளும்

இந்தக் கலி காலத்தில் என்னவெல்லாமோ அதிசயங்கள் நடக்கின்றன. வரவர மாமியார்கள் மிகமிக நல்லவர்களாகிக் கொண்டு வருகிறார்கள். மாட்டுப் பெண்களை மாடுகள் என்று எண்ணி நடத்தாமல் வீட்டுப் பெண்களாகவே நடத்துகிறார்கள். புத்தகமும் பத்திரிகையும் வாங்கிக் கொடுத்து நாட்டுப் பெண்களைப் படிக்கச் சொல்கிறார்கள்! சங்கீதமும் பரதநாட்டியமும்கூடக் கற்கச் சொல்கிறார்கள்! நாட்டுப்பெண் படித்தாலும், பாடினாலும் குடித்தனம் குட்டிச் சுவராகும் என்று நினைப்பதில்லை. நாட்டுப் பெண்களும் மாமியார்களிடம் அதிக மரியாதை வைக்கிறார்கள்; அன்பாகவும் நடந்து கொள்கிறார்கள்.

மேலே சொன்னவையெல்லாம் திருமகளுக்கும் கலைமகளுக்கும்கூட இந்தக் காலத்தில் பொருந்தமாக இருக்கிறது. மாமியார் லக்ஷ்மியும் மருமகள் சரஸ்வதியும் ஓரிடத்தில் வசிக்க மாட்டார்கள் என்னும் வசனம் பொய்யாகிவிட்டது. லக்ஷ்மி இருக்குமிடத்தில்தான்

சரஸ்வதி ; சரஸ்வதி இருக்குமிடத்தில்தான் லக்ஷ்மி என்று ஏற்பட்டு வருகிறது.

கல்வியிலும் கலைவளத்திலும் சிறந்திருக்கும் தேசந் தான் இந்த நாட்களில் பொருள் வளத்திலும் சிறந்ததா கிறது ; அத்தகைய தேசத்துக்கே அகில உலகத்தின் தலைமைப் பதவி போய்ச் சேருகிறது.

கல்வி, கலை என்று நாம் சொல்லும்போது நல்ல முறையில் கற்பிக்கப்படும் கல்வியையும், தக்க முறையில் வளர்க்கப்படும் கலையையுமே குறிப்பிடுகிறோம். நமது இந்தியா தேசத்தில் இது வரையில், கற்பிக்கப்பட்டு வரும் கல்வி பெயரளவிலேயேதான் ‘ கல்வி ’ யாகும். உண்மை யான கல்வி அல்ல. நமது கலாசாலைகளும் சர்வகலா சாலைகளும் அவற்றின் பெயரிலே மட்டுந்தான் ‘ கலை ’யை வைத்துக் கொண்டிருக்கின்றன. மற்றப்படி கலைகளின் வளர்ச்சிக்கு அவை எந்தவிதமான உதவியும் செய்வதே இல்லை.

தற்போது நடைபெறும் இந்திய தேசிய சர்க்காரில்* உள்ள நமது மாபெரும் காங்கிரஸ் தலைவர்களுக்கு இவை யெல்லாம் தெரிந்த விஷயந்தான். ஒரு பக்கத்தில் இந்தியா பூர்ண சுதந்திரமடையும் மார்க்கத்தைத் தேடிக்கொண்டும் பிரிட்டிஷாராலும் முஸ்லிம் லீக்கினாலும் ஏற்படும் முட்டுக் கட்டைகளைச் சமாளித்துக் கொண்டும் இருக்கையில் மற்றொரு பக்கத்தில் அவர்கள் தேசப் புனருத்தாரணத்தி லும் கவனம் செலுத்தி வருகிறார்கள். தேசப் புனருத் தாரண முயற்சிகளுக்கெல்லாம் அஸ்திவாரம் தக்க முறையில் கல்வி அளிப்பதே என்பதை உணர்ந்திருக் கிறார்கள்.

*இடைக்கால சர்க்கார் நடைபெற்றபோது எழுதப்பட்ட கட்டுரை இது.

புது வருஷத்தில் கல்வி—கலை சம்பந்தமான இரண்டு முக்கிய நிகழ்ச்சிகள் இந்தியாவில் நடைபெற்றிருக்கின்றன. அவற்றில் ஒன்று புது டில்லியில் நடந்த 34 வது இந்திய விஞ்ஞானிகள் மகாநாடாகும்.

இந்தியாவில் வருஷந்தோறும் விஞ்ஞானிகளின் மகா நாடு நடைபெறுகிறது என்பதோ, இது வரையில் 33 மகா நாடுகள் நடந்திருக்கின்றன என்பதோ பெரும்பாலோருக்குத் தெரிந்தே யிராது. இந்தியாவில் இடைக்கால தேசிய சர்க்கார் ஏற்பட்டு, மேற்படி சர்க்காரின் உப தலைவர் ஜவாஹர்லால்ஜி 34வது இந்திய விஞ்ஞானிகள் மகாநாட்டைத் திறந்து வைத்த பிறகுதான் மேற்படி விஷயங்கள் பிரபலமாயின.

நமது கலாசாலைகளில் இன்றுவரை போதிக்கப்பட்டு வரும் விஞ்ஞானம் வெறும் ஏட்டுச் சுரைக்காய் விஞ்ஞானமாகவே இருந்து வருகிறது. விஞ்ஞான பாடப் புத்தகங்களைப் பொட்டை நெட்டுருச்செய்து பரீட்சையில் எழுதிப் பாஸ்செய்வதுதான் விஞ்ஞானப் படிப்பின் நோக்கமாகவும் முடிவாகவும் இருந்து வருகின்றன. சொந்தமாக மூளையைச் செலுத்தி ஆராய்ச்சியும் சோதனைகளும் செய்து விஞ்ஞான அறிவை வளர்ப்பதற்கான வசதிகள் இந்த நாட்டுக் கலாசாலைகளில் இல்லை. டாடா முதலிய தனிப்பட்ட பரோபகாரிகளால் விஞ்ஞான வளர்ச்சிக்குச் சொற்ப வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. அவற்றிலும் எத்தனையோ நிர்வாக சங்கடங்களை அதிகார வர்க்க சர்க்கார் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

இவ்வளவு பிரதிகூலமான நிலைமையிலும் நமது பாரத நாட்டுப் புராதன மேதாவிகளின் வம்சத்திலே பிறந்தவர்களில் சிலர், ஸர். சி. வி. ராமன், ஸர். பி. சி. ராய் முதலியவர்கள், தங்கள் சூழ்நிலையை மீறி அரும்பெரும்

ஆராய்ச்சிகளைச் செய்து இந்தியாவுக்குப் புகழைத் தந்தார்கள். வெளிதேசத்து விஞ்ஞானிகள் இந்தியாவைத் தேடிவரும் நிலைமையையும் உண்டு பண்ணினார்கள்.

அதற்குப் பிறகாவது, அதிகாரவர்க்க சர்க்கார் இந்திய விஞ்ஞான வளர்ச்சிக்கு வசதிகள் அளிக்கவோ, இந்திய விஞ்ஞானிகளின் ஆராய்ச்சியைத் தேச முன்னேற்றத்திற்கு பயன்படுத்திக் கொள்ளவோ முன்வந்தார்களா என்றால், அதுதான் கிடையாது. பிரபலமடைந்த விஞ்ஞானிகள் தலையில் 'ஸர்' பட்டத்தையும், நெற்றியில் அசட்டுப் பட்டத்தையும் சேர்த்துக் கட்டிவிட்டுப் பழைய வழியிலேயே போய்க்கொண்டிருந்தார்கள் !

மேற்படி நிலைமை கூடிய சீக்கிரம் மாறலாம் என்ற நம்பிக்கை நமக்கு இப்போது ஏற்படுகிறது. இந்திய விஞ்ஞானிகளின் மகாநாட்டைத் திறந்து வைத்தபோது பண்டித ஜவாஹர்லால் நேரு செய்த பிரசங்கம் அத்தகைய நம்பிக்கையை நமக்கு உண்டுபண்ணுகிறது. "இந்தியாவின் முன்னேற்றம் இந்திய விஞ்ஞானிகளாகிய உங்கள் கையிலேதான் இருக்கிறது!" என்று கூறி நமது விஞ்ஞானிகளை உற்சாகப்படுத்திய ஜவாஹர்லால்ஜி, "விஞ்ஞான வளர்ச்சிக்கு அவசியமான எல்லா உதவிகளையும் செய்யத்தயாராகயிருக்கிறோம் !" என்று தேசீய சர்க்காரின் சார்பாக வாக்களித்திருக்கிறார்.

மேற்படி இந்திய விஞ்ஞான மகாநாட்டுக்கு பிரிட்டனிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் ருஷியாவிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். அவர்களில் ருஷியப் பிரதிநிதிகளை வரவேற்று ஜவாஹர்லால்ஜி பேசிய விஷயம் மிகவும் முக்கியமானது. "உங்களுடைய தேசம் ஒரு சில வருஷங்களில் மகத்தான முன்னேற்றம் அடைந்திருப்

பதற்குக் காரணம் விஞ்ஞானிகளாகிய உங்களுடைய முயற்சிதான். ருஷியாவில் நீங்கள் கடைப்பிடித்த வழிகளை உங்களிடம் தெரிந்து கொண்டு நாங்களும் அதே வழிகளில் முன்னேற விரும்புகிறோம்" என்று சொன்னார். அக்ஷரலக்ஷம் பெறும்படியான வார்த்தைகள். நடை உடை பாவனை, நாகரிகம், பண்பாடு, சிற்பம், சங்கீதம் கவிதை முதலிய இன்பக் கலைகள், — இவற்றிலே யெல்லாம் 'சுதேசியம்' அவசியம். ஆனால் விஞ்ஞான ஆராய்ச்சி விஷயத்தில் சுதேசக்கொள்கை அபத்தமானது. உலகத்தில் எந்தமூலையில் ஒரு விஞ்ஞான உண்மை கண்டு பிடிக்கப்பட்டாலும் அது உலகத்துக்கே பொதுவானது. ரயிலும் மோட்டாரும், தந்தியும், டெலிபோனும், ரேடியோவும், ரோட்டரியும், டிராக்டரும் எந்த தேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டதானாலும் நாமும் எடுத்துக் கொள்ள வேண்டியதுதான். ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட விஞ்ஞான உண்மைகளையும் இயந்திர சாதனங்களையும் மறுபடியும் அடியிலிருந்து நாம் கண்டுபிடிக்கவேண்டும் என்பது சுத்த அசட்டுத்தனம்.

* * *

ஜவாஹர்லால்ஜி விஞ்ஞான மகாநாட்டில் வெளியிட்ட கருத்துக்கள் எல்லாம் மிகச்சிறந்தவை. ஆனால், அவை காரியத்தில் நிறைவேற வேண்டுமானால், நமது நாட்டில் இப்போது அமுலில் உள்ள கல்வி முறையை அடியோடு மாற்றி அமைப்பது அவசியமாகும். கல்வி முறை மாறினால்தான் விஞ்ஞானம் வளரும். விஞ்ஞானம் வளர்ந்தால்தான் தேசத்தில் தொழில்கள் செழித்தோங்கும். மேற்படி விஷயத்தைப் பம்பாயில் சென்ற வாரத்தில் கூடிய அகில இந்தியக் கல்வி மகாநாட்டில் ராஜாஜி தெளிவாக வெளியிட்டார்.

" தேசத்தில் தொழில்கள் செழித்துப் பொருள் உற்பத்தி பெருக வேண்டியது தற்போது மிகவும் அவசியம். ஆனால், எல்லாத் தொழிலாளிகளுக்கும் அடிப்படையான தொழில், கல்விதான். கல்வித் தொழில்சரிவர நடந்தால் மட்டுமே மற்ற எல்லாத் தொழில்களும் அபிவிருத்தி யடையும் " என்று ராஜாஜி கூறினர்.

கல்வித் தொழில் சரியாக நடக்க வேண்டுமென்ருல், தற்போதுள்ள கல்வி முறையும் பாட திட்டமும் அடியோடு மாற்றி அமைக்கப்படவேண்டும்.

தற்சமயம் நமது நாட்டுக் கலாசாலைகளிலும் பள்ளிக் கூடங்களிலும் அளிக்கப்படும் கல்வி பெரும்பாலும் ஏட்டுச் சுரைக்காய் வகையைச் சேர்ந்தது. பிற்கால வாழ்க்கையில் சிறிதும் பயன்பட முடியாத உபயோகமற்ற குப்பை கூளங்கள் நமது சின்னஞ் சிறு குழந்தைகளின் மூளையிலும், இளம் பிராய வாலிபர்களின் மூளையிலும் திணிக்கப்படுகின்றன. இதனல் 100-க்கு 99 குழந்தைகளின் மூளைகள் வற்றி வறண்டு போகின்றன. சுயமாக ஆராய்ச்சி செய்யும் சக்தியையும் கற்பன சக்தியையும் இழந்து விடுகிருர்கள். சர்க்கார் காரியாலயங்களிலும் வர்த்தகக் கம்பெனிகளிலும் குமாஸ்தா வேலை செய்வதற்கே லாயக்காக வெளி வருகின்றனர்.

நமது கல்வி முறையில் 'கர்ரிகுலம்' என்னும் பாட திட்டம் எவ்வளவு மோசமாயிருக்கிற தென்பதைப் பார்க்கலாம். கணக்குப் பாடத்திலிருந்து சில உதாரணங்களை இங்கே எடுத்துக் காட்டுகிருேம் :—

" ஒரு வியாபாரி மூட்டை ரூ. *A*. அடக்கமுள்ள ஒருவகை அரிசியையும் ரூ. *B*. அடக்கமுள்ள மற்ருெரு வகை அரிசியையும் *X* : *Y* ரீதியில் கலந்து அதை மூட்டை

ரூ. $C$ வீதம் விற்ருல் அவனுடைய லாபம் என்ன? $G$ சதவீத லாப மடைந்தால் $A, B, Y, G$ களுக்குள் சம்பந்தம் என்ன?''

பதின்மூன்று அல்லது பதினுன்காவது வயதுக் குழந்தைகள் படிக்கும் நாலாவது பார கணக்குப் புத்த கத்தில் மேலே குறிப்பிட்ட கணக்கு இருக்கிறது. ஒரு தடவை படித்துவிட்டு உடனே கண்ணை முடிக் கொண்டு "படித்தது என்ன?'' என்று யோசித்துப் பாருங்கள். மனதில் $A, B, X, Y$ என்னும் குழப்பத்தைத் தவிர வேறு ஏதாவது பதிந்திருக்கிறதா?

அதே புத்தகத்திலிருந்து இன்னும் ஒரு அற்புதமான கணக்கு :—

"$X$ கஜ தூரமுள்ள ஒரு வட்டமான பாதையில் ஒரே இடத்திலிருந்து சேர்ந்தாற்போல் இருவர் புறப்பட்டு எதிர்த் திசையில் நிமிஷத்திற்கு $A$ கஜ வீதமும், $B$ கஜ வீதமும் சவாரி செய்கிருர்கள். அவர்கள் எங்கு எப்பொழுது சந்திப்பார்கள்?"

இந்தக் கணக்கைப் படித்ததும், "கூடிய சீக்கிரத்தில் அவர்கள் யமலோகத்திலோ, பைத்தியக்கார ஆஸ்பத் திரியிலோதான் சந்திப்பார்கள்!'' என்று பதில் சொல்லத் தோன்றுகிறதா, இல்லையா?

"சின்னங்கள் (*Symbol*) மூலமாகக் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பது சரியான முறையல்ல. முதலில் பொருளை காட்டியும், விஷயங்களை நேர்முகமாய்ச் சொல்லியும் கல்வி போதிப்பதுதான் சரியான போதனு முறை'' என்று ராஜாஜி கூறினர்.

மிகச் சிறு குழந்தைகளுக்கு எழுத்துக்களைக் கற்பித்துப் புத்தகம் வாசிக்கச் சொல்வது பற்றியே

ராஜாஜி அவ்விதம் சொன்னார். அப்படியானால், மேலே காட்டியிருக்கும் உதாரணங்களில் 'சின்னங்கள்' எவ்வளவு மோசமாக உபயோகப் பட்டிருக்கின்றன என்று சொல்ல வேண்டியதில்லை.

இப்படியெல்லாம் அபத்தமான பாடத் திட்டங்களினால் நமது செல்வக் குழந்தைகளின் மூளைகளை வற்றச் செய்து விடுவதால்தான், பள்ளிக்கூடங்களிலிருந்தும், கலாசாலைகளிலிருந்தும் வருஷந்தோறும் வெளிவரும் லட்சக்கணக்கான பிள்ளைகளில் மிகப் பெரும்பாலோர் அறிவுத்திறனும், கற்பனா சக்தியும் தேவையாயுள்ள காரியங்கள் எதற்கும் லாயக்கின்றி இயந்திரம்போல் வேலை செய்வதற்கே தகுதியாக வெளிவருகிறார்கள்.

கொஞ்ச நஞ்சம் குழந்தைகளின் மூளையில் மீதமுள்ள ஈரத்தையும் பரீட்சை என்னும் பீதி வறட்டி விடுகிறது.

இத்தகைய பயனற்ற படிப்பினாலும் பரீட்சைப் பீதியினாலும் அறிவின் முழு சக்தியை இழந்து வெளிவருகிறவர்கள்தான் ஆசிரியர்களாகிறார்கள். அதிலும், வேறு நல்ல சர்க்கார் உத்தியோகமோ, கம்பெனி உத்தியோகமோ கிடைக்காமல் ஏமாற்றமடைந்து வாழ்க்கையிலேயே உற்சாக மிழந்தவர்கள்தான், வேண்டா வெறுப்பாக ஆசிரியர் வேலைக்கு வருகிறார்கள். சொற்ப சம்பளமுள்ள ஆசிரியர் வேலையில் அவர்கள் நீடித்து இருக்க இருக்க மேலும் மேலும் உற்சாகம் குறைந்துகொண்டு வருகிறது. வாழ்க்கையில் வெறுப்போடு உபாத்தியாயர் தொழிலிலும் வெறுப்பு ஏற்படுகிறது. இதன் பயனெல்லாம் குழந்தைகளின் தலையிலே வந்து விழுகின்றன.

ஆகவேதான் "நல்ல முறையில் கல்வி கற்பிக்க வேண்டுமானால் நல்ல ஆசிரியர்கள் வேண்டும். நல்ல ஆசிரியர்களை உண்டாக்குவதற்குத் தகுந்த போதனை

முறை ஆசிரியர்கள் வேண்டும். அத்தகைய ஆசிரியர் களுக்கு எங்கே போவது ? எப்படித் தயாரிப்பது?" என்ற கவலையை வெளியிட்டார்.

நிலைமை மிகவும் கவலைக்கிடமானதுதான் ; சந்தேக மில்லை. ஆயினும், அதைச் சமாளித்தாக வேண்டும். நல்ல ஆசிரியர்கள் அற்ப சொற்பமாகக் கிடைத்தால் போதுமா ? "மொத்தம் இருபத்தைந்து லட்சம் ஆசிரியர்கள் தேவை !" என்று மேற்படி மகாநாட்டி லேயே ஸார்ஜெண்ட் திட்டத்தின் மூல புருஷரான ஸர். ஜான் ஸார்ஜெண்ட் வெளியிட்டார்.

ஆசிரியர்மார்களுக்குச் சம்பளம் உயர்த்தவேண்டும் என்ற கிளர்ச்சி நாடெங்கும் நடந்து வருகிறது. அதை நாம் மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம். எல்லாக் கல்விச் சீர்திருத்தத்துக்கும் அதுவே அடிப்படை என்றும் கருது கிறோம். ஆனால் ஒரு விஷயம் சொல்லவேண்டும். ஆசிரியர் சம்பளத்தைப் பிடிவாதமாக உயர்த்தாமலிருந்து நாடெங்குமுள்ள ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய் தார்களானால்—வேலை நிறுத்தம் ஒரு வருஷம் நீடித்த தானால்—அதனால் நாட்டுக்கு எவ்வளவோ நன்மை உண்டாகும். பழைய குழி விழுந்த பள்ள வழியிலேயே நெடுநாளாகப் பிரயாணம் செய்து கறடு தட்டிப்போன ஆசிரியர்கள் ஒரு வருஷம் கட்டாய விடுமுறை எடுத்துக் கொண்டால் பிறகு புதிய முறைக் கல்வித் திட்டத்தை அமுல் நடத்த அவர்கள் ஆற்றல் உள்ளவர்களாயிருப் பார்கள். பரீட்சை, பிரம்படி, பெஞ்சிமேல் நிறுத்துதல், மண்டையில் குட்டுதல் முதலிய காட்டுமிராண்டி சாத னங்களின் உதவியில்லாமல், அன்பின் உதவியினாலேயே பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிப்பது அவர்களுக்குச் சாத்திய மாகும். "பாடதிட்டங்களை இன்னின்ன மாதிரி மாற்ற

வேண்டும். இன்னின்னபடி மாற்றினால் குழந்தைகளின் அறிவும் கற்பனா சக்தியும் வறண்டு போவதற்குப் பதிலாக வளர்ந்து பெருகும்; வாழ்க்கைக்கு உபயோகமாகவும், தேசத்துக்கு நன்மையாகவும் இருக்கும்" என்றுசொல்லக்கூடிய சக்தி அப்போது ஆசிரியர்களுக்கு ஏற்படும்.

* * *

வாழ்க்கையிலே சந்தோஷமாக இருப்பதுதான் கல்விப் பயிற்சியின் தலைசிறந்த நோக்கமாயிருக்க வேண்டுமென்றும், இதற்காக எல்லாப் பிள்ளைகளுக்கும் சங்கீதம், நடனம் முதலிய ஆனந்தக் கலைகளைக் கற்பிக்க வேண்டும் என்றும் ராஜாஜி கூறியது மிக முக்கியமான விஷயம். ஆனால், பம்பாயில் ராஜாஜி கூறிய யோசனைகளில் எல்லாம் மிகச் சிறந்தது அவர் முடிவுரைப் பிரசங்கத்தில் கூறியதே யாகும். யுனிவர்ஸிடியின் சட்ட திட்டங்களும் சர்க்கார் கட்டுப்பாடுகளும் இல்லாமல், நாட்டிலேயுள்ள சிறந்த அறிவாளிகளுக்கு அவர்களுடைய இஷ்டம்போல் கல்வி முறையில் பரிசோதனைகள் செய்வதற்குச் சுதந்திரம் அளிக்க வேண்டும் என்று ராஜாஜி கூறியதை நிறைவேற்றினால், அதைக் காட்டிலும் நாட்டுக்கு நன்மை பயப்பது வேறொன்றும் கிடையாது. உதாரணமாக அறிஞர் ஒருவர் குழந்தைகளுக்குப் பத்து வயது வரையில் எழுத்துக் கற்பிக்காமலும் புத்தகம் படிக்கச் சொல்லாமலும் வாய்மொழியாகவோ, பொருள்களைக் காட்டியோ கைத்தொழில்கள் மூலமாகவோ கல்வி கற்பித்துப் பரிசோதனை செய்ய விரும்பினால் அதற்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். உலகப் பிரசித்தி பெற்ற மோண்டிசாரி அம்மை முதலியவர்கள் இம்மாதிரி சோதனைகள் செய்துதான் மனித குலத்துக்கே பரமோபகாரம் செய்திருக்கிறார்கள்.

சுருங்கச் சொன்னால், ராஜாஜியின் மேற்கண்ட யோசனையானது கலைமகளின் கைவிலங்கையும், கால் தளையையும் வெட்டி, அத்தேவிக்கு விடுதலை அளிக்கும் யோசனையாகும்.

அத்தகைய விடுதலை இந்நாட்டில் கலைமகளுக்குச் சீக்கிரமே சித்தியாகும் என்று எதிர்பார்ப்போமாக.

அந்த ஆனந்தகரமான சம்பவம் நடக்கும்போது இந்தப் புண்ணிய பூமியில் கலைமகளும், திருமகளும் அத்தியந்த சிநேகபாவத்துடன் கூடிக் குலாவுவார்கள் என்பதில் ஐயமில்லை.

## என்ன பாவம் செய்தன ?

**பா**கவத புராணத்தில் கம்ஸன் என்னும் மனித உருக்கொண்ட அரக்க மன்னனைப் பற்றிப் படித்திருக்கிறோம். தன்னுடைய ராஜ்யத்தில் பிறக்கும் குழந்தைகளையெல்லாம் கொன்றுவிடும்படியாக அந்தப் பொல்லாத ராட்சதன் கட்டளையிட்டான். அவனுடைய ராஜ்யத்துக்கு அப்பால் வேறு நாடுகளிலே பிறக்கும் குழந்தைகளையும் கொல்வதற்கு மாயாவிகளான பூதகி முதலிய ராட்சஸிகளையும், சகடாசுரன், திருணாவர்த்தன் முதலிய ராட்சஸர்களையும் ஏவினான்.

அப்பேர்ப்பட்ட கம்ஸனையும் அவனுடைய கட்டளையை நிறைவேற்றிய தூதர்களையும் தோற்கடிக்கும்படியான காரியத்தைச் செய்யும் சிலர் இந்தக் காலத்திலே இருக்கிறார்கள். சின்னஞ்சிறு குழந்தைகளை அந்த மகான்கள் கொல்லுவதில்லை — இல்லை, ஒரு வழியாகக் கொன்று விடுவதில்லை. குழந்தைகளை உயிரோடு வைத்துச் சித்திரவதைதான் செய்கிறார்கள் !

கம்ஸனுக்குக் குழந்தைகள் மீது துவேஷம் ஏற்படுவதற்கும், குழந்தைகளையெல்லாம் கொன்று விடுமாறு

அவன் கட்டளை போடுவதற்கும் ஏதோ ஒரு காரணம் இருந்தது. அவனைக் கொல்லப் பிறந்த குழந்தை எப்படியோ அவனுடைய கட்டுக் காவலிலிருந்து தப்பிச் சென்று விட்டபடியால் எல்லாக் குழந்தைகளையும் அவன் வேலை தீர்த்துவிட விரும்பினான் !

ஆனால் இந்தக் காலத்துக் கம்ஸர்களுக்கும் அவர்களுடைய தூதர்களுக்கும் அத்தகைய காரணம் எதுவுமே இல்லை.

அவர்கள் யார் என்று கேட்டால், பள்ளிக்கூடங்களிலே படிக்கும் குழந்தைகளுக்காகப் பாடதிட்டங்களை வகுப்பவர்களும், வகுத்த பாடதிட்டங்களுக்கு ஏற்பப் புத்தகங்களை எழுதுகிறவர்களுந்தான் !

தமிழ் நாட்டிலே பிறந்து வளர்ந்து பள்ளிக்கூடங்களுக்குப் போகும் துர்ப்பாக்கியத்தைப் பெற்ற குழந்தைகள் மேற்படியார்களுக்கு யாதொருவிதமான தீங்கும் செய்யவில்லை. குழந்தைகளின் மேல் அவர்களுக்குத் துவேஷம் உண்டாவதற்கு யாதொரு காரணமும் கிடையாது. ஆனாலும் குழந்தைகளின் ஜன்ம விரோதிகளைப் போல் அவர்கள் பாட திட்டங்களை வகுத்திருக்கிறார்கள்; பாடப் புத்தகங்களை எழுதியிருக்கிறார்கள். அத்தகைய பாடப் புத்தகங்களை வைத்துக் கொண்டு போதிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியிருக்கும் ஏழை உபாத்தியாயர்கள் என்ன செய்வார்கள் ? அவர்கள் தங்களையும் வதைத்துக் கொண்டு, தங்களிடம் வந்து சிக்கிக்கொள்ளும் குழந்தைகளையும் வதைக்கிறார்கள் !

இப்படிக் குழந்தைகளைச் சித்திரவதை செய்வதற்கென்றே ஏற்பட்ட பயங்கரக் கருவிகளில் இலக்கணம் என்பது ஒன்று.

## இலக்கண அரக்கன் !

சில வருஷத்துக்கு முன்னால் நமது கல்வி இலாகாத் தலைவர்களுக்கு ஏதோ கொஞ்சம் நல்ல புத்தி உதயமாகி—குழந்தைகளிடம் ஏதோ சிறிது கருணை பிறந்தது—பாஷைப் பயிற்சியில் இலக்கணம் முக்கியமில்லை என்று ஏற்படுத்தி யிருந்தார்கள். யார் செய்த பாவமோ என்னமோ, எந்த ராட்சஸ மூளையில் மறுபடியும் தோன்றிற்றோ என்னமோ, இலக்கண அரக்கன் மறுபடியும் பாட திட்டங்களில் புகுந்துகொண்டு விட்டான்! பள்ளிக்கூடத்துக்குப் போகும் சின்னஞ் சிறு குழந்தைகளை—பால் மணம் மாறாத பாலர்களை—அந்தப் பாதகன் பயங்கரமாகச் சித்திரவதை செய்யத் தொடங்கியிருக்கிறான்!

நாம் ஏதோ மிகைப்படுத்திச் சொல்கிறோம்—அளவுக்கு மீறிய கடும் மொழிகளை உபயோகிக்கிறோம் என்று சில நேயர்களுக்குத் தோன்றலாம். நல்லது; இரண்டொரு உதாரணம் சொல்கிறோம் கேளுங்கள். கேட்ட பிறகு நாம் அதிகக் கடுமையான வார்த்தைகளை உபயோகித்து விட்டோமா என்று தீர்ப்புக் கூறுங்கள்.

'புதுமுறை இலக்கணச் சுருக்கம்' என்பதாக ஒரு பாட புத்தகம் இருக்கிறது. இது பாடசாலைகளில் முதல் பாரம் முதல், மூன்றாம் பாரம் வரையில் படிக்கும் மாணாக்கர்களுக்காக ஏற்பட்டது. அதாவது சுமார் 11 வயது முதல் 13 வயது வரை உள்ள குழந்தைகள் படிப்பதற்காக ஏற்பட்டது சென்னை சர்க்காரின் டெக்ஸ்ட் புக் கமிட்டியினால் அங்கீகரிக்கப் பெற்றது. இந்தப் புத்தகத்தின் தலைப்பிலே,

"தமிழ் இலக்கணம் என்பது, தமிழ் மொழியைப் பிழையில்லாமல் பேசவும் எழுதவும் கற்பிக்கும் நூலாகும் !" என்று இருக்கிறது.

(ஆம்; 'கற்பிக்கும்' என்றுதான் புத்தகத்தில் இருக்கிறது. சந்தேகம் உள்ளவர்கள் நமது காரியாலயத்துக்கு வந்து புத்தகத்தைப் பார்த்துவிட்டுப் போகலாம்.)

இப்பேர்ப்பட்ட இலக்கண நூலில், அதாவது சின்னஞ் சிறு குழந்தைகளுக்குத் தமிழ் மொழியைப் பிழையில்லாமல், பேசவும் எழுதவும் 'கற்பிக்கும்' நூலில் 36-ம் பக்கத்தில் பின்வரும் விதி காணப்படுகிறது:

"108. விகாரப் புணர்ச்சியாவது நிலை மொழிக்கும் வரும் மொழிக்கும் இடையில் எழுத்தாவது சாரியையாவது தோன்றுதலும், நிலை மொழியின் ஈற்றெழுத்தாவது வருமொழியின் முதலெழுத்தாவது அவ்விரண்டுமாவது திரிதலும் கெடுதலும் அடைய அவ்விரு மொழியும் கூடுவது."

அதே நூலில் 45-ம் பக்கத்தில் பின்வரும் விதிகள் காணப்படுகின்றன:

"9. முன்னே ஒரு நெட்டெழுத்தும் பின்னே ஒரு குற்றெழுத்துமாகிய இரண்டெழுத்தாலாகிய மொழியின் இறுதியிலேனும் இரண்டின் மிக்க எழுத்துக்களாலாகிய மொழியின் இறுதியிலேனும் க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறு வல்லின மெய்களுள் ஒன்றைச் சேர்ந்துவரும் உகரம் தன் ஓசையிற் குறையும். அவ்வுகரம் குற்றியலுகரம் என்பதாகும்."

"10. உகரம் ஒரு குற்றெழுத்தாலும், இரண்டு குற்றெழுத்தாலுமாகிய மொழிகளின் இறுதியில் வல்லின மெய்யை ஊர்ந்துவரினும், மொழி முதல் இடையிலும் உள்ள வல்லின மெய்யை ஊர்ந்துவரினும் மொழி முதல் இடைகடைகளில் மெல்லின இடையின மெய்களை ஊர்ந்து வரினும் தனக்கு இயல்பாயுள்ள ஓசையிற்

குறையாது ; ஆதலின், அது குற்றியலுகரமாகாது. முற்றிய லுகரம் எனப்படும்."

மேற்படி இலக்கண விதிகளைப் படிக்கும்படியான தலைவிதியுள்ள சின்னஞ்சிறு குழந்தைகளின் கதியைத் தயவு செய்து எண்ணிப் பாருங்கள். குழந்தைகளைப் பெற்ற தாய்தந்தைமார்களே ! தயவு செய்து கொஞ்சம் கவனியுங்கள்.

இத்தகைய இலக்கணப் பாடப்புத்தகங்களைப் படிக்க வேண்டியிருந்தும் நம்முடைய குழந்தைகள் அறிவுத் தெளிவோடு இருக்கின்றன—மூளை கலங்கிப்போய் பைத்திய மருத்துவ சாலைக்குப் போகாமலிருக்கின்றன என்றால்—அதற்குக் காரணம், மிகப் பெரும்பாலான குழந்தைகள் இம்மாதிரியான பயங்கர இலக்கண விதிகளைப் படிக்காமல் விட்டுவிடுவதுதான். " இலக்கணத்துக்குள்ள மார்க் தொலைந்து போகட்டும்! மற்றப் பாடங்களுக்கு வரும் மார்க் வந்தால் போதும் " என்று குழந்தைகள் பெரும்பாலும் இலக்கணத்தை விட்டுத் தொலைப்பதினாலேயே மூளை குழம்பாமல் தப்பிப் பிழைக்கின்றன. இத்தகைய இலக்கண விதிகளைப் படித்துப் புரிந்துகொண்டு பரீட்சையில் எழுதவேண்டுமென்று முயலும் குழந்தைகளின் கதி அதோகதிதான் !

" புது முறை இலக்கணச் சுருக்கம் " எழுதிய புண்ணியவானை நாம் குறைகூறவில்லை. ஏதோ அவருடைய தலைவிதியை நினைத்து ஜீவனோபாயத்தை உத்தேசித்துப் புத்தகம் எழுதியிருக்கிறார்.

நாம் குற்றம் கூறுவதெல்லாம் குழந்தைகளுக்கு பாடதிட்டம் வகுத்த புண்ணியவான்களையே யாகும் ! சின்னஞ்சிறு குழந்தைகளை இத்தகைய சித்திரவதைக்கு உள்ளாக்கத் துணிந்த அந்த மகான்கள் இகத்திலும்

பரத்திலும் என்ன கதியை அடையப்போகிறார்களோ என்று எண்ணும்போது அவர்கள் மீது நமக்கு இரக்கமும் உண்டாகிறது.

அம்மாதிரியே "பூந்தமிழ் இலக்கணம்" என்னும் நூலை எழுதிய செந்தமிழ்ப் பண்டித மணியின் மீதும் நாம் எள்ளளவும் குற்றங்கூறவில்லை.

இந்த நூலுக்குப் "பூந்தமிழ் இலக்கணம்" என்று பெயர் கொடுத்தபோது தெரிந்தோ தெரியாமலோ அப் பெரியார் இடக்கரடக்கல், மங்கலம் எனப்படும் தகுதி வழக்கு இலக்கணத்தை யொட்டியே பெயர் கொடுத் திருக்க வேண்டும்!

அருவருப்பு உண்டாக்கும் விஷயத்தை மறைமுக மாய்ச் சொல்வதற்கு 'இடக்கரடக்கல்' என்றும், மங்கல மல்லாத விஷயத்தை மறைமுகமாக மங்கலச் சொல்லால் குறிப்பிடுவதற்கு 'மங்கலம்' என்றும் இலக்கணத்தில் வழங்குகின்றன. 'மங்கலம்' என்பதற்கு உதாரணம், 'தாலி அறுந்தது!' என்று சொல்வதற்குப் பதிலாகத் 'தாலி பெருகிற்று' என்று சொல்லுவது. தமிழ்ப் பத்திரிகை நடை வழக்கில், 'மகா பாவிகள்' என்று சொல்லவேண்டிய இடத்தில் 'புண்ணியவான்கள்' என்றும் 'மகாமூடர்கள்' என்று சொல்லவேண்டிய சந்தர்ப்பத்தில் 'மகா மேதாவிகள்' என்றும் எழுதப் படுவதை மேற்படி இலக்கணத்துக்கு உதாரணமாகச் சொல்லலாம்!

மேற்படி "பூந்தமிழ் இலக்கணம்" என்னும் நூலின் முகவுரையில் ஆசிரியர், இந்த நூலானது, 'அரசிய லார் புதியதாய் வகுத்த பாடதிட்ட முறைப்படியே 4-5, 6-ம் பார மாணவர்களுக்கென்று சிறந்த முறையில் எழுதப் பெற்றது என்றும், 'அரசியலார் 1942-ம் ஆண்டில் மிக

2

முக்கிய மெனக் குறிப்பிட்ட 63 நன்னூல் சூத்திரங்களையும் இந்தப் புத்தகத்தில் சேர்த்திருப்பதாகவும் சொல்லியிருக்கிருர்.

1942-ம் ஆண்டில் அரசியலார் தேசத்தில் எத்தனையோ கொடுமைகளை இழைத்தனர் என்பதை எல்லாரும் அறிவார்கள். அவற்றுளெல்லாம் பெருங்கொடுமை, ஹைஸ்கூல் மாணுக்கர்களின் பாடதிட்டத்தில் தமிழ் இலக்கணத்தைப் புதிதாகச் சேர்த்ததுதான் என்று நாம் கருதுகிருேம் !

"பூந்தமிழ் இலக்கணத்"தின் மூன்ரும் பக்கத்தில் எடுத்துப் போடப்பட்டிருக்கும் 'அரசியலார் மிக முக்கிய மெனக் குறிப்பிட்ட நன்னூல் சூத்திரம்' இதுவாகும் :—

*"உயிர்மெய் ஆய்தம் உயிரளவு ஒற்றளவு*
*அஃகிய இ உ ஐ ஔமஃகான்*
*தனிநிலை பத்தும் சார்பெழுத்தாகும்"*

செந்தமிழ் மொழியைப் பிழையில்லாமல் எழுதவும் பேசவும் மேற்படி பல்லுடைக்கும் சூத்திரம் தெரிந்திருக்க வேண்டியது அவசியந்தாஞ என்று கேட்கிருேம்.

இன்னும் இந்த நூலின் 65-ம் பக்கத்தில் உள்ள, "நிலைமொழி மகரவீற்றுச் சொற்களின் முன் உயிர், வல்லினம், மெல்லினம், இடையினம் என்னும் நான்கு வகையில் எதுவரினும், ஈற்று மகரமெய் கெட்டு உயிரீற்றின் முன் உயிரும் வல்லினமும் மெல்லினமும் இடையினமும் புணர்வது போலப் புணரும். சில விடங்களில் வல்லினம் வரின் மகரமெய் கெடாமல் வந்த வல்லினத்திற்கு இனமாகத்திரியும்" என்னும் பயங்கரமான மகரவீற்றுப் புணர்ச்சி விதியைப் படித்து நமது பச்சிளங் குழந்தைகள் புரிந்து கொள்ளாவிட்டால், தமிழைப் பிழையின்றி எழுதமுடியாதா என்று கேட்கிருேம்.

அப்படியானால் நமது அருமைச் செந்தமிழ் நாட்டுக் குழந்தைகள் தமிழை எவ்வளவு பிழைகளுடனே வேண்டுமானாலும் எழுதட்டும், இந்தக் கொடூரமான சித்திர வதைக்கு மட்டும் ஆளாக வேண்டாம் என்று சொல்கிறோம்.

தமிழ் மொழியைப் பிழை இல்லாமல் எழுதவும், பேசவும் கற்றுக்கொள்வதற்கு இலக்கணம் படித்தல் அவசியமே இல்லை. இதை ஆயிரம் கோயில்களிலே சத்தியம் செய்துசொல்லத் தயாராயிருக்கிறோம்.

இலக்கணம் கற்றுக்கொண்டு இந்த விதிகளின்படி பேசவோ, எழுதவோ ஆரம்பித்தால் பேசவும் வராது, எழுதவும் வராது.

பிழையில்லாமல் தமிழ் எழுதவும் பேசவும் கற்றுக் கொள்வதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அது, பிழை இல்லாமல் எழுதப்பட்ட புத்தகங்களைப் படிப்பதுதான்.

அவ்வப்போது மாணுக்கர்கள் எழுதுவதிலும் பேசுவதிலும் பிழை இருந்தால் ஆசிரியர் திருத்திக் கொடுக்கலாம். இது கூடக் குழந்தைகள் விஷயத்தில் செய்யக்கூடாது. முதலிலே இஷ்டம்போல் பேசவும் எழுதவும் விட வேண்டும். பிற்பாடு, அதாவது ஏழாவது எட்டாவது பாரத்துக்குப் பிறகுபிழைகளை எடுத்துக் காட்டவேண்டும்.

காலேஜு வகுப்புகளிலேதான் இலக்கணம் சொல்லிக் கொடுக்கவேண்டும். அதிலும் மொழி ஆராய்ச்சியையே முக்கிய பாடமாக எடுத்துக் கொள்கிறவர்களுக்கே இலக்கண விதிகளைச் சாங்கோபாங்கமாகக் கற்பித்தல் முறை. சுருங்கச் சொன்னால், தமிழ் வித்வான் பரீட்சைக்கோ, தமிழ் எம். ஏ, பரீட்சைக்கோ போகிறவர்களுக்குத்தான் இலக்கணப் பயிற்சி தேவை. மற்றவர்

களுக்கு அவசியமில்லை. நாலாவது பாரத்திலிருந்து ஆருவது பாரம் வரையில் படிக்கும் மாணவர்களுக்கு ஒருமை, பன்மை, ஆண்பால் பெண்பால், வேற்றுமை விதிகளை நடைமுறைக்கு அவசியமான அளவில் சொல்லிக் கொடுத்தால் போதும். முதல் பாரத்திலிருந்து மூன்ருவது பாரம் வரையில் இலக்கண விதிகளைச் சொல்லிக் கொடுப்பது குழந்தைகளைச் சித்திரவதை செய்வதைத் தவிர வேருென்றும் இல்லை.

**பூகோள ராட்சதன்!**

பள்ளிக்கூடங்களில் குழந்தைகளைச் சித்திரவதை செய்யும் மற்ருெரு பயங்கர ராட்சதன் பூகோள ராட்சதன்.

பூகோள சாஸ்திரம் மிகவும் ரஸமான விஷயம். குழந்தைகளுடைய மனத்தைக் கவர்ந்து மேலும் மேலும் தெரிந்துகொள்ளவேண்டும் என்னும் ஆசையை ஊட்டக் கூடியது.

பூகோள சாஸ்திரம் கற்பிப்பதற்குச் சாதாரணமாய்ப் புத்தகமே தேவையில்லை. சொல்லிக் கொடுக்கும் உபாத்தியாயருக்குத்தான் அவ்வப்போது ஞாபகப் படுத்திக் கொள்ளப் புத்தகம் தேவை. தேசப் படங்களையும், பூகோள உருண்டைகளையும் வைத்துக்கொண்டே குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கலாம். "பூகோளப் பாடம் எப்போது வரும்?" என்ற ஆசை உண்டாகும்படி சொல்லிக் கொடுக்கலாம். அப்படிப்பட்ட விஷயத்தைப்பற்றி எழுதப்பட்டிருக்கும் பாடப் புத்தகங்களைப் பார்த்தால் "ஐயோ! நமது நாட்டுக் குழந்தைகள் என்ன பாவத்தைச் செய்தன இப்படிப்பட்ட கொடுமையை அனுபவிக்க!" என்றுதான் தோன்றும்.

"பூவர்ணனை" என்னும் பொதுத் தலைப்போடு முதற் புத்தகம், இரண்டாம் புத்தகம், மூன்றும் புத்தகம் வெளியாகி யிருக்கிறது. இவையும் சென்னைக் கல்வி இலாகா வெளியிட்டுள்ள பாடத் திட்டத்திற்கு இணங்க எழுதப்பட்டவை. முதல், இரண்டாவது, மூன்றுவது பாரத்துக் குழந்தைகளுக்காக ஏற்பட்டவை.

இவற்றில் முதல் பாரத்திற்குரிய புத்தகத்தில், அதாவது பதினேரு வயதுக் குழந்தை படிக்கவேண்டிய புத்தகத்தில் ஆப்பிரிக்காக் கண்டம், ஆஸ்திரேலியாக் கண்டம் தென் அமெரிக்காக் கண்டம் ஆகிய தேசங்களைப்பற்றிச் சுமார் 80 பக்கங்கள் வர்ணனை செய்யப் பட்டிருக்கிறது.

இந்தப் புத்தகத்தின் 80, 81-ம் பக்கங்களிலிருந்து இரண்டு பாராக்களை அவசியம் நேயர்கள் படிக்க வேண்டும்.

"தென் ஆப்பிரிக்காவின் முக்கிய துறைமுகமாகிய கேப்டவுனிலிருந்து வடக்கு நோக்கிப் போகும் முக்கிய இருப்புப்பாதை, தென் ரொடீஷியாவிலுள்ள புலவாயோ நகரத்திற்குப் பிறகு விக்டோரியா நீர்வீழ்ச்சிக் கருகில் ஜாம்பஸி நதியின் குறுகிய இடுக்கைக் கடந்து வட கரையிலுள்ள வட ரொடீஷியாவின் முக்கிய பட்டண மாகிய லிவிங்ஸ்டனுக்குப் போகிறது."

தென் கடற்கரையிலுள்ள சிறிய கர்ரு, பெரிய கர்ரு, பர்க் என்கிற படிகளைப் போலிருக்கும் பிரதேசத்தைத் தாண்டிப் பீடபூமியைச் சேரலாம். பீடபூமியின் தென் கிழக்கு விளிம்பு ஒரு மலைபோல் உபர்ந்தும் அங்கிருந்து மேற்காகச் செல்லச் சல்ல* பீடபூமிப் பிரதேசம் கொஞ்சம்

* அச்சுப்பிழைகள் நம்முடையன அல்ல.

தாழ்ந்தும் இருக்கிறது. டிரோன்ஸ்பர்க் என்ற பெயருள்ள இந்த உயர்த்த விளிம்பில் உற்பத்தியாகி ஆரெஞ்சு நதி மேற்கு நோக்கியும், ரொடீஷியாவிற்கும் தென்னுப்பிரிக்கா ஐக்கிய நாட்டிற்கும் மத்தியில் எல்லையாக லிம்போயோ என்னும் நதி கிழக்கு நோக்கியும் ஓடுகின்றன. இவ்விரண்டு நதிகளும் நைல்காங்கோ நதிகளைப் போல் அவ்வளவு முக்கியமானவை யல்ல.''

அவ்வளவு "முக்கியமானவை'' யல்ல; ஆனபோதிலும் நமது தமிழ் நாட்டில் பிறக்கும் துரதிர்ஷ்டத்தைச் செய்த குழந்தைகளுக்குப் பதின்ரு வயதில் மூளையிலே திணிக்கும் அளவுக்கு முக்கியமானவை!

இன்னும் இரண்டு வருஷம் தாண்டி மூன்ருவது பாரத்தில் படிக்கும் 13 வயதுக் குழந்தைகளுக்குப் பாடமாய் வைத்திருக்கும் "பூவர்ணனை'' மூன்ரும் புத்தகத்தையும் கொஞ்சம் பார்ப்போம். இதில் ஐரோப்பா கண்டத்தைப்பற்றி ஏறக்குறைய 70 பக்கமும், பிரிட்டிஷ் தீவுகளைப்பற்றி 30 பக்கமும் வர்ணனை நிறைந்திருக்கிறது. வர்ணனை என்ருல் எப்பேர்ப்பட்ட வர்ணனை! தயவு செய்து சில உதாரணங்களைப் படியுங்கள். தலையிலே கையை வைத்துக்கொண்டாவது பொறுமையுடன் படித்துப் பாருங்கள் :—

"60 வட அக்ஷரத்திற்கு வடக்கிலும் ஸ்காண்டினேவியா தீபகற்பத்தைக் காட்டிலும் இன்னும் கிழக்கிலும் அமைந்திருப்பதால் இங்கு வாயுநிலை மிகக் குளிராக இருப்பதோடு பல மாதங்கள் தரை பனி மூடியிருக்கும்.''

"அங்குள்ள புல் வெளிகளில் நடைபெறும் பாற் பண்ணைகளில் மாடுகளையும் பன்றிகளையும் கோழிகளையும் வளர்க்கிருர்கள்!''

"ஸ்யூரிக்பர்ஸல், ஸெயிஸ்ங்கால் முதலிய நகரங்களில் நெசவு வேலை, மின்சார யந்திரங்களைச் செய்தல் ஆகிய தொழில்கள் நடக்கின்றன."

"எஸ்ஸன், டஸல்டார்ப் என்னும் இரண்டு நகரங்களில் இரும்பு எஃகு வேலைகளும், ஸோலிங்கன் நகரத்தில் கத்தி வகைகளும், பார்மன்—எல்வர்பீட் இரட்டைப் பட்டணத்தில் நெசவு வேலையும் நடைபெறுகின்றன."

"பாரிஸுக்குக் கிழக்கிலுள்ள ஷாம்பேன், தென் மேற்கிலுள்ள ஆக்விடெயின், தென் கிழக்கிலுள்ள ஸோன்ரோன் பள்ளத்தாக்கு ஆகிய பிரதேசங்கள் முக்கியமாகத் திராட்சை பயிரிடும் இடங்கள்."

"அலெக்ஸாண்டிரியாவில் இருந்து தெற்கு நோக்கி கெய்ரோ, கார்ட்டும், கிஸுமு, மொம்பாஸா, டாரெஸ் ஸாம் நகரங்களின் வழியாகச் செல்லும் ஒரு முக்கிய மார்க்கம் கேப்டௌனில் முடிவு பெறுகிறது."

"மேற்கில் லங்காஷயர், கம்பர்லாந்து ஆகிய இடங்களிலும் கிழக்கில் நார்த்தம்பர்லாந்து, யார்க்ஷயர், நாட்டிங்காம்ஷயர் ஆகிய இடங்களிலும், தெற்கில் வட ஸ்டாப்பர்ட்ஷயர், தென் ஸ்டாப்பர்ட்ஷயர் ஆகிய இடங்களிலும் இருக்கும் நிலக்கரிக் களங்களெல்லாம் பென்னைன் பிரதேசத்தைச் சேர்ந்தவைகளே."

"லாம்பர்டிச் சமவெளியின் கிழக்குப் பாகத்தில், போ நதியின் டெல்டாவிலிருந்து விலகி, ஏட்ரியாடிக் கடலின் தலைப்பில் ஒரு கழியில் ஏற்பட்ட வெனிஸ் நகரம்......"

மாணுக்கர்களின் மூளையில் நன்ருய்ப் பதிய வேண்டுமென்பதற்காக ஆசிரியர் கருணை கூர்ந்து முக்கிய நகரங்கள், பிரதேசங்கள், நதிகள், முதலியவற்றின பெயர்களைப் பெரிய எழுத்தில் அச்சிட்டிருக்கிருர்.

அப்படிக் குழந்தைகளின் மனதில் ஆழ்ந்து பதிய வேண்டிய பிரதேசங்கள், நகரங்கள் ஆகியவற்றின் பெயர்கள் இந்த ஒரு புத்தகத்தில் மட்டும் குறைந்த பட்சம் ஆயிரம் இருக்கின்றன !

மேலே எடுத்துக் காட்டியிருக்கும் பாராக்களைப் பத்துத் தடவை படித்த பிறகு எத்தனை பெயர்கள் உங்களுக்கு நினைவிருக்கின்றன என்று பாருங்கள்.

ஆயிரம் பெயர்களை நினைவு வைத்துக்கொள்ளக் குழந்தைகள் எத்தனை தடவை படிக்க வேண்டியிருக்கும். அதற்குள்ளே குழந்தைகளின் மூளை எவ்வளவு தூரம் வறளும் என்று யோசியுங்கள்.

மேற்படி "பூவர்ணனை"ப் புத்தகங்களைக் கையிலே வைத்துக்கொண்டு கேள்வி கேட்டால், நமது பதின்மூன்று மந்திரிகளையும், பதினாலு பார்லிமெண்டரி காரிய தரிசிகளையும், சென்னை மாகாணத்திலுள்ள எல்லா பி. ஏ. பி. எல்.களையும், அத்தனை ஐ. சி. எஸ். காரர்களையும் திணற அடிக்கலாம்.

பி. ஏ. எல். டி.கள் அவ்வளவு பேரையும் பேந்தப் பேந்த விழிக்கும்படி செய்யலாம்.

இந்தப் புத்தகம் எழுதிய ஆசிரியரையே பதில் சொல்ல முடியாமல் திணறித் திண்டாடும்படியாகச் செய்யலாம் !

ஆயினும் சின்னஞ் சிறு குழந்தைகளுக்கு இத்தகைய புத்தகங்களைப் பாடமாக வைத்திருக்கிறார்கள் ! இத்தகைய விஷயங்களைப் போதிக்க வேண்டுமென்று பாட திட்டம் வகுத்திருக்கிறார்கள் !

நமது குழந்தைகளை முட்டாள்களாக அடிப்பதற்கும் அவர்களுடைய மூளைகளை வறண்டுபோகச் செய்வதற்குமே சதி செய்த காரியமாகத் தோன்றுகிறதா, இல்லையா ?

இலக்கணத்தையும், பூகோளத்தையும் இந்தக் கட்டுரையில் உதாரணங்களாகக் கையாண்டிருக்கிறோம். மற்ற எல்லாப் பாடங்களையும் ஏறக்குறைய இவ்வளவு லட்சணமாகத்தான் வகுத்திருக்கிறார்கள்.

இத்தகைய குப்பை கூளங்கள், கூழாங்கற்கள், இரும்பாணிகள், நெறிஞ்சிமுட்கள் ஆகியவற்றைக் குழந்தைகளின் மூளையில் திணிக்க வேண்டியதில்லை யென்றால் பள்ளிக்கூடங்களில் மூன்று மணிநேர போதனை போதுமா, போதாதா ?

* * *

குழந்தைகளிடம் கருணையுள்ள மனிதர்கள், புத்தியுள்ள மனிதர்கள் உண்மைக் கல்வி படைத்த மனிதர்கள் கல்வி இலாகாவுடன் எவ்வித சம்பந்தமும் இல்லாத மனிதர்கள்—ஆகியவர்களைக் கொண்டு, உடனே நமது பள்ளிக்கூடங்களின் பாட திட்டங்களைப் பரிசீலனை செய்யும்படி சொல்லவேண்டும். படிப்பு என்ற பெயரால் குழந்தைகளைச் சித்திரவதை செய்யும் பயங்கரக் கொடுமையை உடனே நிறுத்தவேண்டும். கல்விச் சீர்திருத்தங்களுக்கெல்லாம் அடிப்படையான காரியம் இது. இதைச் செய்யாத வரையில் மற்ற எந்தச் சீர்திருத்தமும் எந்த விதமான பயனையும் அளியாது.

# எத்தனை நாள் இக்கொடுமை ?

ஆசிரியர்கள், பேராசிரியர்கள், தமிழ் ஆசிரியர்கள், வித்வான்கள், சிரோன்மணிகள், வெறும் உபாத்தியாயர்கள் ஆகிய இவ்வளவு பேரும் உள்ள இடத்தையெல்லாம் எண்ணித் தண்டம் சமர்ப்பித்துவிட்டு, "தயவு செய்து மன்னிக்கவும்" என்று முன்னதாகவே கேட்டுக் கொண்டு, ஒரே ஒரு விஷயத்தை எடுத்துக் காட்டி, விண்ணப்பித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காங்கிரஸ் மந்திரிசபை ஏற்பட்ட நாளிலிருந்து ஆசிரியர்களும் உபாத்தியாயர்களும் வித்வான்களும் பண்டிதர்களும் "சம்பளம் போதவில்லை!" என்று பெருங் கூக்குரல் போட்டு வந்தார்கள். அவர்களுடைய கோரிக்கையைப் பொதுமக்களாகிய நாம் எப்பொழுதும் ஆதரித்தோம்.

"இத்தனை நாள் அன்னிய ஆட்சியிலே நாங்கள் குறைவாகச் சம்பளம் வாங்கிக்கொண்டு கஷ்டப்பட்டோம். சுதந்திரம் வந்த பிறகாவது எங்கள் சம்பளமும் அந்தஸ்தும் உயரவேண்டாமா ?" என்றார்கள்.

"ஆமாம். உயர வேண்டியதுதான்?" என்று ஆமோதித்தோம்.

"சம்பளத்தை உயர்த்தாவிட்டால் வேலை நிறுத்தம் செய்வோம்" என்றார்கள்.

"ஏழை ஆசிரியர்களை அந்த அளவுக்குப் போகும்படி விட வேண்டாம்! சம்பளத்தை உடனே உயர்த்துங்கள்" என்று காங்கிரஸ் மந்திரிகளை மன்றாடிக் கேட்டுக் கொண்டோம்.

இந்தியா சுதந்திரம் பெற்றதனால் தங்களுக்குச் சம்பளமும் அந்தஸ்தும் உயரவேண்டும் என்று சொன்ன ஆசிரியர்கள் வேறு ஒரு விஷயத்தில் மட்டும் மௌனம் சாதித்து வந்தது நமக்குப் பெருவியப்பை அளித்தது; இன்னமும் அளித்து வருகிறது.

"இந்தியா சுதந்திரம் அடைந்துவிட்டது; ஆகையால், நமது கல்வி முறை மாறவேண்டும்; பாடத் திட்டங்கள் மாறவேண்டும்" என்று ஆசிரியர்களும் உபாத்தியாயர்களும் சொல்லவில்லை; கூட்டம் போட்டு வற்புறுத்தவில்லை.

"இந்த மாதிரி பாடங்களை இனிமேல் சொல்லிக் கொடுக்க மாட்டோம்; பாட திட்டம் மாறாவிட்டால் வேலை நிறுத்தம் செய்வோம்" என்று எந்த ஆசிரியர் சங்கமாவது தீர்மானம் நிறைவேற்றியதா என்றால் கிடையவே கிடையாது.

இது ஏன்?—அயல் நாட்டார் ஏற்படுத்திய கல்வி முறையைப் பயின்று அதிலேயே உழன்று வந்ததினால் நமது ஆசிரியர்—உபாத்தியாயர் கூட்டத்துக்கு அதில் உள்ள குறைகளைத் தெரிந்துகொள்ள முடியாமலே போய் விட்டதா? அல்லது குறைகள் உள்ள அந்தக் கல்வி

முறையைத் தங்களுடைய சுயநலத்துக்கு உகந்தது என்று நினைக்கிறார்களா? அல்லது அதைப் பற்றிச் சிந்திப்பதற்கோ முயற்சி எடுப்பதற்கோ வேண்டிய ஊக்கமும் மனோதிடமும் அற்றுச் சோர்வடைந்து போனார்களா?—அவர்கள்தான் சொல்லவேண்டும்.

* * *

டாக்டர் ரவீந்திரநாத டாகூர் கல்வியைப் பற்றி ஒரு கட்டுரையில் கூறியிருக்கிறார்: "நம்முடைய கல்வி முறையில் உள்ள தீங்கு நம்மைப் பாதித்ததோடு போகாது. நம்முடைய புதல்வர்களை அதிகமாகப் பாதிக்கும்; நம்முடைய பேரப் பிள்ளைகளை இன்னும் அதிகமாகப் பாதிக்கும். தலைமுறைக்குத் தலைமுறை அதன் தீய பலன்கள் வளர்ந்துகொண்டே போகும்."

இந்த மகாகவி வாக்கில் அடங்கிய உண்மையைச் சமீபத்தில் நான் பிரத்யட்சமாகக் காணும்படி நேர்ந்தது.

இருபத்தெட்டு வருஷத்துக்கு முன்னால் நான் பள்ளிக்கூடத்துக்குப் போய்க்கொண்டிருந்தேன். அப்போதும் கெட்டிக்காரப் பிள்ளைகளுக்குப் பரிசு வழங்கும் விழாக்கள் பள்ளிக்கூடங்களில் நடப்பதுண்டு. பரிசு பெறும் பிள்ளைகள் அவ்வளவு திடகாத்திரமாயிருக்க மாட்டார்கள்; சுமாராகத்தானிருப்பார்கள். பரீட்சையில் 'கோட்' அடித்துக்கொண்டு விளையாட்டில் பரிசு பெறுகிற பிள்ளைகள் மட்டும் கொஞ்சம் தேக வலிமையுடன் இருப்பார்கள்.

சென்ற 1947-ம் வருஷத்தில் ஒரு ஹைஸ்கூலில் நடந்த பரிசு வழங்கும் வைபவத்துக்குப் போயிருந்தேன். ஒவ்வொரு வகுப்பிலும் முதலாவதாகவும் இரண்டாவதாகவும் தேறிய பிள்ளைகளைப் பெயர் சொல்லி அழைத்

தார்கள். பிள்ளைகள் ஒவ்வொருவராய் மேடைக்கு வந்து பரிசு பெற்றுக்கொண்டு போனார்கள். அவர்களைப் பார்த்த போது எனக்கு ஒரு குரல் அழலாம் என்று தோன்றியது. இருபத்தெட்டு வருஷத்துக்கு முன்னால் நான் பார்த்த பரிசு பெறும் பிள்ளைகளைக் காட்டிலும் இவர்கள் மகா மோசமா யிருந்தார்கள். காற்று அடித்தால் கீழே விழுந்துவிடக் கூடிய அவ்வளவு திடகாத்திரம்! உருவத்தைப்பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. "கல்லிவர்ஸ் ட்ராவல் என்னும் புத்தகத்தில் வரும் "லில்லிப்புட்டு"கள்போல அங்குஷ்டப் பிரமாணமாயிருந்தார்கள். "ஐயோ! இந்தப் புத்திசாலிப் பிள்ளைகள்,—பரிசு வாங்கும் பிள்ளைகள்—இப்படிப்பட்ட தேகத்தை வைத்துக்கொண்டு வாழ்க் கையில் என்ன காரியத்தைச் சாதிக்கப் போகிறார்கள்?" என்று நினைத்து என் நெஞ்சம் குமுறியது.

பரிசு பெற்ற சுமார் முப்பது பிள்ளைகளில் ஒரே ஒரு பையன் ஆஜானுபாகுவாயும் திடமானவனாயும் இருந் தான். அவனுடைய பெயர் "அபு பக்கர்" என்று சொன் னார்கள். அந்தப் பையனுடைய தகப்பனாரும் பாட்ட னாரும் இங்கிலீஷ் பள்ளிக்கூடத்தில் படித்ததில்லை. அதனால் அவன் அப்படி இருந்தான்! மற்றப் பிள்ளைகள் எல்லாரும் படித்த நடுத்தர வகுப்பு குடும்பத்தைச் சேர்ந் தவர்கள். அதாவது என். ஜி. ஓக்கள், வக்கீல்கள், உபாத்தியாயர்கள் முதலியோரின் பிள்ளைகள். அதனால் அப்படி க்ஷீணித்திருந்தார்கள். இதே கல்வி முறை நீடித் திருக்குமானால் அபுபக்கரின் பேரப் பிள்ளைகளும் க்ஷீணித்துச் சோனிகளாகி விடுவார்கள் என்பதில் சந்தேக மில்லை.

இப்போதுள்ள கல்வி முறையானது அப்படி மக்களின் ஜீவ சக்தியை உறிஞ்சி விடுகிறது. அதை

அறிந்து கொள்ளும் சக்திகூட இல்லாதவண்ணம் மூளை யையும் பலவீனப் படுத்தி விடுகிறது போலும்!

* * *

ஐம்பது அறுபது வருஷத்துக்கு முன்னால் தென் னாட்டில் ஆங்கிலக் கல்வியின் விளைவாகச் சில தீர புருஷர்களும் மேதாவிகளும் தோன்றினார்கள். உருவத் தோற்றத்திலும் அவர்கள் கம்பீரமாக இருந்தார்கள். ஸர். டி. முத்துசாமி ஐயர், ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயர், ஸர். வி. பாஷ்யமய்யங்கார், ஸர். வி. கிருஷ்ணசாமி ஐயர், ஸ்ரீ சி. விஜயராகவாச்சாரியார் முதலியவர்கள் தங்களுடைய மேதையினால் சென்னை மாகாணத்துக்கே கௌரவம் அளித்தார்கள். அப்படிப்பட்டவர் யாரையாவது இந்த நாளில் இந்நாடு பெற்றிருக்கிறதா? இல்லை. ஏன் இல்லை?

நிலத்தை வளப்படுத்துவதற்கு இரண்டு வகை உரங்கள் உண்டு. ஒன்று, இயற்கை அளிக்கும் உரங்கள். மாட்டுச் சாணம், பச்சைத் தழை, பிண்ணாக்கு முதலிய இயற்கை உரங்கள் பூமிக்கு நிரந்தரமான வளத்தை அளித்து தானிய விளைவையும் அதிகப்படுத்துகின்றன.

ஆனால், இன்னொரு வகை உரமான ரசாயன செயற்கை உரம்,—அமோனியம் ஸல்பேட் முதலியவை. பூமியிலுள்ள சத்தையெல்லாம் கொஞ்சம்கூடப் பாக்கி யில்லாமல் ஒரே யடியாக இழுத்துப் பயிருக்குக் கொடுக் கின்றன. அந்த வருஷத்துப் பயிர் நன்றாய் வளர்ந்து நல்ல விளைவையும் கொடுக்கிறது. அடுத்த வருஷம் அதே நிலத்தில் அதே ரகமான வித்தைப் போட்டால் பயிர் செழிப்பதில்லை; செழிப்பதற்குப் பதில் காய்ந்து போய் விடுகிறது.

ஆங்கிலேயர் ஏற்படுத்திய கல்வி முறை இந்திய நாட்டுக்கு ரசாயன உரத்தைப்போல் பயன்பட்டிருக்

கிறது. அந்தக் கல்வி முறை ஏற்பட்ட புதிதில், அதன் பயனாகச் சில மேதாவிகள் தோன்றினார்கள். அவர்களுடைய கல்வியும் அறிவும் நன்கு சோபித்தன.

ஆனால் நாளாக ஆக,;ரசாயன எருவின் தீங்கு வெளியாகத் தொடங்கியது. மேதாவிகள் தோன்றிய இடத்தில் மந்த புத்தியாளர் தோன்றினார்கள். தேக திடத்தைப் பற்றியோ சொல்லவேண்டியதில்லை. அந்தப் பெரியோர்களின் கம்பீரமான தோற்றத்தையும் பி. ஏ. பரீட்சையில் முதல் வகுப்பில் தேறும் பிள்ளைகளின் க்ஷீண தேகத்தையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

முகத்தில் கண் உள்ளவர்கள் எல்லாரும் நன்றாய்ப் பாருங்கள். பார்த்தால் அயல் நாட்டுக் கல்வி முறை நம்முடைய இந்திய ஜாதிக்கு எவ்வளவு மகத்தான தீங்கைச் செய்திருக்கிறது. எப்படி இந்திய ஜாதியின் க்ஷீணத்துக்கே அது காரணமாகி வந்திருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம்.

* * *

பழைய காலத்தில் சரித்திரத்தை விசேஷ பாடமாய் எடுத்துக் கொண்ட மாணவர்கள் இங்கிலாந்து சரித்திரம் வாசிக்க வேண்டியிருந்தது. எந்த இங்கிலீஷ் அரசன் எந்த வருஷத்தில் பிறந்தான் என்று தேதிகளை உருப்போட வேண்டியிருந்தது. வேண்டாத விஷயந்தான். ஆனாலும் பிரிட்டிஷார் இந்தியாவை அரசாண்டு வந்தபடியால், ஆங்கிலேயர் சரித்திரத்தை நாம் படித்துத் தொலைக்க வேண்டியிருந்தது.

ஆனால் சுதந்திரம் வந்த பிறகும் அதே நிலைமை ஏன் நீடித்திருக்க வேண்டும்? இந்த வருஷத்து ஐந்தாவது பாரப் பரீட்சைக் கேள்விகள் சிலவற்றை கேளுங்கள் :—

1. பழைய குடியேற்றக் கொள்கை முறை என்றால் என்ன ?

2. பென்னித் தபால் யாரால் புகுத்தப்பட்டது ?

3. தொழிற் புரட்சியால் ஏற்பட்ட முடிவான விளைவுகள் யாவை ?

4. 1832 ம் வருஷத்தில் செய்த சீர்த்திருத்தச் சட்டத்தின் நிபந்தனைகள் யாவை ?

5. சார்புஸ்டு இயக்கம் என்பது என்ன ?

6. குறிப்பெழுதுக :—

(*a*) கல்விச் சட்டம் (1870)

(*b*) பணம் மசோதா (1911)

(*c*) இயந்திரச் சட்டங்கள்.

(*d*) சக்திச் சமநிலை.

7. பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய பரோபகாரத் தன்மையால் ஏற்பட்ட நல்விளைவுகள் என்ன ?

இந்தக் கேள்விகள் எல்லாம் எந்த நாட்டைக் குறித்தன என்று தெரிகிறதா ? எல்லாம் இங்கிலாந்து நாட்டைப் பற்றியவைதான். ஆனால், அவ்விதம் கேள்விகளில் குறிப்பிடவில்லை ! ஏன் குறிப்பிட வேண்டும் ? தேசத்தின் பெயர் குறிப்பிடாவிட்டால் இங்கிலாந்து தேசம் என்று அறிக !

சாதாரணமாக வேறு நாடுகளில் நாட்டின் பெயர் குறிப்பிடாத ஒரு கேள்வி கேட்கப்பட்டால் அது தாய் நாட்டைப் பற்றியதாயிருக்கும். இந்தியாவில் படித்த வகுப்பாரின் தாய் நாடு இங்கிலாந்துதானே ! அதனாலே தான் பெயர் குறிப்பிடாவிட்டால் ‘ இங்கிலாந்து ’ என்று

தெரிந்து கொள்ளவேண்டும். அதனாலேதான் இங்கிலாந்தின் பழைய குடியேற்ற நாட்டுக்கொள்கை, பென்னித் தபால், தொழிற் புரட்சி, 1832 வருஷத்துச் சீர்த்திருத்தச் சட்டம், 1870ம் வருஷத்துக் கல்விச் சட்டம், 1911ம் வருஷத்துப் பணமசோதா ஆகியவை குறித்து நமது பிள்ளைகள் தெரிந்து கொள்ள வேண்டும். தெரிந்து கொள்ள முடியுமா ? ஒரு நாளும் முடியாது ! பேராசிரியர்களுக்கும் அரசியல் தலைவர்களுக்குமே தெரிந்துகொள்ள முடியாதே ! நம்முடைய பதின்மூன்று வயதுக் குழந்தைகளுக்கு எப்படித் தெரியும் ? ஒரு நாளும் தெரியாது ! ஆகையால் செய்யவேண்டியது என்ன ? ‘மாடர்ன் ஹிஸ்டரி’ என்னும் பெயருடைய அபத்தக் களஞ்சியமான பாடப்புத்தகத்தை நம் குழந்தைகள் நெட்டுருச் செய்ய வேண்டும். சிறுவர்கள் சிறுமிகள் அனைவரும் பக்கம் பக்கமாக நெட்டுருச் செய்ய வேண்டும். நெட்டுருச் செய்து அறிவை மழுங்கச் செய்து கொள்ள வேண்டும். அப்புறம் பரீட்சை எழுதவேண்டும் ; அதாவது பல நாள் மனப்பாடம் செய்ததை மூன்று மணிநேரம் ஒரே மூச்சாக உட்கார்ந்து எழுதவேண்டும். அப்படி எழுதியும் பரீட்சையில் தேறாவிட்டால் மனங்குன்றி அவமானப்பட்டு வேதனையில் மூழ்கவேண்டும் ; இல்லாவிட்டால் தற்கொலை செய்துகொண்டு சாகவேண்டும் !

இந்த மாதிரி பாடங்களைச் சொல்லிக் கொடுக்கும் உபாத்தியாயர்களும் உபாத்தியாயினிகளும் மனித உணர்ச்சி உள்ளவர்கள்தானா அல்லது வெறும் இயந்திரங்களா என்று சந்தேகிக்கத் தோன்றுகிறது.

பாடதிட்டங்களை வகுத்தவர்களைப் பற்றியோ சொல்லவேண்டியதில்லை. அவர்கள் கொலைபாதக ராட்சத இனத்தைச் சேர்ந்தவர்கள் ; குழந்தைக் கொல்லிகள் ;

இந்திய சாதியை க்ஷீணிக்கச் செய்து அடியோடு அழிப்பதற்குச் சூழ்ச்சி செய்தவர்கள்.

இப்படிப்பட்ட கல்வி முறையையும் பாட திட்டத்தையும் இன்னும் வைத்து நடத்துகிறார்களே, அந்த மகானுபாவர்கள் விஷயத்தில் கடவுள்தான் கருணை செய்யவேண்டும்.

தாதாபாய் நௌரோஜி முதல், காந்தி மகாத்மா வரையில், "தேசீயக் கல்வி, தேசீயக் கல்வி" என்று கதறினார்கள். அந்த மாபெரும் தலைவர்கள், தேசபக்த உத்தமர்கள், தியாக மூர்த்திகளின் ஆவிகள் எல்லாம் வானவெளியிலே அதோ சோகம் ததும்பும் முகத்துடனே நிற்கின்றன ; நின்று கண்ணீர் வடிக்கின்றன !

## 2

சென்ற முப்பது வருஷத்திற்குள்ளே நம்முடைய ஹைஸ்கூல் கல்விமுறையானது மேலும் மேலும் கடினமாகவும் குழந்தைகளின் மூளையை வறட்டுவதாகவும் மாறிப்போயிருக்கிறது என்பதைச் சமீபத்தில் நான் பார்த்துத் திடுக்கிட்டேன்.

முன்னெல்லாம் ஹைஸ்கூல் வகுப்புகளில் ஏ குரூப் பி குரூப், சி குரூப் என்று பிரித்திருந்தார்கள். பி குரூப் பாடங்களுக்குப் பரீட்சை கிடையாது. பரீட்சை வைத்தாலும் 'பாஸ்' செய்வதற்கு அந்தப் பாடங்களின் மார்க்குகளைக் கணக்கிடுவதில்லை.

பூகோளம் பி குரூப்பைச் சேர்ந்திருந்தது. அதனால் பிள்ளைகள் கஷ்டமில்லாமல் பூகோளம் படித்தார்கள். சுவையுடனும் படித்தார்கள். அவசியமான முக்கிய விஷயங்களெல்லாம் ஞாபகத்தில் நின்றன. மற்றவை

மறந்து போயின. மறந்து போனதினால் பூகோளத்துக்கும் நஷ்டமில்லை. பிள்ளைகளுக்கும் நஷ்டமில்லை.

இப்போது பூகோள பாடத்தைக் கட்டாயமாகவும் பரீட்சைக்கு உரியதாகவும் ஆக்கியிருக்கிறார்கள். ஒரு பரீட்சைக் கேள்வியையும் அதற்குச் சரியான விடையையும் பாருங்கள் :

கேள்வி :—ஆசியாவின் மடிப்புமலைத் தொடர்களிடையேயுள்ள பீடபூமிகளைக் குறிப்பிடுக.

பதில் :—(1) இமாலயத்திற்கும் க்லென்லென்னுக்கும் இடையே திபேத் பீடபூமி இருக்கிறது. (2) டாரிம்கழிகால்பரப்பு ஆல்டின்னுக்கும் தியான் ஷன்னுக்கும் இடையே யிருக்கிறது. (3) க்லென் பென்னுக்கும் ஆல்டின்னுக்கும் இடையே ஒரு சிறிய அதிக உயரமில்லாத கழிகால் பரப்பு உள்ளது. (4) ஆல்டாய், யாப்ளோனாய் இவற்றின் மத்தியில் கோபி பாலைவனம் உள்ளது. (5) ஈரான் பீடபூமி பாரசீகம் முழுவதும் பரவியுள்ளது. (6) கருங்கடலுக்கும் மத்தியதரைக் கடலுக்கும் இடையே சிறிய ஆசியா பீடபூமி உள்ளது.

தயவு செய்து மேற்படி பதிலை ஒன்பது தடவை படிக்கவும். படித்த பிறகு கண்ணை மூடிக்கொண்டு சொல்லிப் பார்க்கவும். உங்களில் எத்தனை பேரால் சொல்ல முடியுமோ தெரியாது. என்னால் நிச்சயமாக முடியவில்லை.

பின் எப்படி பதில் எழுதினேன் என்று கேட்டால் யாரோ ஒரு மகானுபாவர் 1934 ம் வருஷத்திலிருந்து ஹைஸ்கூல் பரீட்சைகளில் கேட்கப்பட்ட கேள்விகளையும் அவற்றுக்குப் பதில்களையும் "பூகோள சாஸ்திர பரீட்சை வினு விடைகள்" என்ற புத்தகமாக வெளியிட்

டிருக்கிறார். மொத்தம் ஏறக்குறைய 500 கேள்விகளும் பதில்களும் இருக்கின்றன. அந்தப் புத்தகம் எழுதினவரை திடீரென்று இந்தக் கேள்விகளில் ஒன்றைக் கேட்டால் அவரால் சொல்ல முடியாது. கேள்விகளைச் சேர்த்து வைத்துக்கொண்டு பூகோள புத்தகங்களையும் பக்கத்தில் வைத்துக்கொண்டு பதில்களை எழுதியிருக்கிறார்.

பரீட்சைகளில் இதுவரை கேட்கப்பட்ட கேள்விகளைத் தவிர ஐந்தாவது ஆறாவது பார பூகோள பாடத் திட்டத்திலிருந்து இன்னும் ஆயிரம் கேள்விகள் போடலாம்.

ஆகவே, ஐந்தாவது ஆறாவது பாரத்தில் படிக்கும் ஒரு பிள்ளையோ அல்லது பெண்ணோ பூகோள பரீட்சையில் தேறுவதற்கு மேற்கண்டது போன்ற ஆயிரத்தைந்நூறு கேள்விகளுக்குப் பதில் தெரிந்து கொள்ள வேண்டும். அந்தக் குழந்தையின் இளம்மூளை என்னத்துக்கு ஆகும் என்று கேட்கிறேன். அந்த மூளையில் அப்புறம் ஏதாவது கற்பனை தோன்றுமா? அறிவாராய்ச்சிக்கு வேண்டிய தகுதிதான் இருக்குமா?— யோசித்துப்பாருங்கள்.

ஹைஸ்கூல் நாலாவது பாரம் முதல் ஆறாவது பாரம் வரையில் வைத்திருக்கும் பூகோள பாடப் புத்தகங்களிலிருந்து கேள்வி கேட்டால் வைஸ் சான்ஸலர் டாக்டர் லக்ஷ்மணசாமி முதலியாரும், டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் டாக்டர் ஸஹூர் என்பவரும் திணறி திண்டாடிப் போவார்கள். பத்துக்கு ஐந்து கேள்விக்குக்கூட அவர்களால் பதில் சொல்ல முடியாது. வேண்டுமானால் அவர்கள் பந்தயம் போடட்டும். பத்துக்கு ஐந்து கேள்விக்காவது சரியான பதில் சொல்லாவிட்டால் தங்கள் உத்தியோகத்தை ராஜிநாமா செய்து விடுவதாக

ஒப்புக்கொள்ளட்டும். அவர்களை நான் கேள்வி கேட்கத் தயார்.

அவ்வளவு பெரிய மேதாவிகளுக் கெல்லாம் வேண்டாத, அவசியமில்லாத விஷயங்களை நமது சின்னஞ் சிறு குழந்தைகளை ஏன் நெட்டுருச் செய்யப் பண்ண வேண்டுமோ, எதற்காக அவர்களைச் சித்திரவதைக்கு உள்ளாக்க வேண்டுமோ, தெரியவில்லை. பூகோள பரீட்சைக் கேள்விகளில் இன்னும் சிலவற்றைத் தயவு செய்து படித்து வையுங்கள் :—

1 ஐரோப்பாவின் மேற்குப் பாகத்தில் ஜனவரி மாதத்திய 32° சமவெப்பக் கோடு கிழக்கிலிருந்து மேற்காகச் செல்லாமல் தென்வடலாகச் செல்வதேன் ?

2. ஸாம்பர்—மியூஸ் பள்ளத்தாக்கு எங்கே இருக்கிறது ? அது எவ்வாறு முக்கியமானது ?

3. பெல்ஜியத்தை எத்தனை இயற்கை மண்டலங்களாகப் பிரிக்கலாம் ? அவற்றைக் குறிப்பிடுக.

4. ஸாக்ஸனி நிலக்கரிச் சுரங்கப் பிரதேசத்தில் என்னென்ன தொழில்கள் எங்கெங்கே நடக்கிறது ?

5. நார்வேயில் மீன் பிடித்தல் எங்கெங்கே நடக்கிறது ?

6. ஸ்விட்ஸர்லாந்தில், எங்கெங்கெ எவ்வெக் காலங்களில் மாடுகள் மேய்க்கப்படுகின்றன ?

நம் குழந்தைகளுக்கு நம் ஊர் மாடுகள் எங்கே மேய்க்கப் படுகின்றன என்று தெரியாதே ! ஸ்விட்ஸர்லாந்து மாடுகள் எங்கெங்கே எவ்வெக் காலங்களில் மேய்க்கப் படுகின்றன என்று தெரிந்து தீரவேண்டுமா ? நம்முடைய குழந்தைகள் நம் ஊரில் மாடு மேய்த்தால் போதாதா ? பூகோளம் படித்துப் பாஸ் செய்துவிட்டு

ஸ்விட்ஸர்லாந்துக்குப் போய்த் தானு மாடு மேய்க்க வேண்டும் ?

அட பரம முட்டாள்தனமே! உனக்குப் பள்ளிக் கூட பாடத்திட்டம் என்றல்லவா பெயர் கொடுத்திருக் கிருர்கள் !

முப்பது வருஷத்துக்கு முன்ஞல் நம்முடைய பள்ளிக்கூடங்களில் கணக்குக் கற்பித்த முறைக்கும் இப்போது கற்பிக்கும் முறைக்கும் வித்தியாசம் இருக்கிறது.

அந்தக் காலத்திலேயும் வட்டிக் கணக்கு போடப் படுவது உண்டு. உதாரணம் :—

" இராமன், கிருஷ்ணனிடம் வருஷம் ஒன்றுக்கு நூற்றுக்கு பன்னிரண்டு ரூபாய் வட்டி வீதம் மூவாயிரம் ரூபாய் கடன் வாங்கினுன். மூன்று வருஷத்தில் வட்டியும், முதலும் சேர்ந்து எவ்வளவு ஆகும் ?" என்று கேட்பார்கள்.

அல்லது " வட்டியும் முதலும் சேர்ந்து நாலாயிரத்து இருநூறு ரூபாய் ஆனுல், கடன் கொடுத்து எத்தனை வருஷம் ஆகியிருக்கும் ?" என்று கேட்பார்கள்.

இப்போது என்ன மாதிரி கணக்குப் போடுகிருர்கள் தெரியுமா ?

" ஏ. என்பவன் பி என்பவனுக்கு ஸி வட்டி வீதம் டி ரூபாய் கடன் கொடுத்தான். எவ்வருஷத்தில் வட்டியும் முதலும் ஜி ஆனுல், டி எவ்வளவு ?" என்று கேட்கிருர்கள்.

இரண்டாவது பாரத்துக்குரிய கணக்குப் புத்தகத்தில் முதல் அத்தியாயத்தில் முதல் கணக்கைக் கேளுங்கள் :—

"6747315ல் ஏ ஆயிரங்களும் பி பத்துக்களும் சி ஒன்றுகளும் இருக்கின்றன. ஏ, பி, சி, யின் மதிப்பு என்ன ?"

இம்மாதிரிக் கணக்குகளையெல்லாம் போட்டும் நம் குழந்தைகள் மூளை குழம்பிப்போகாமல் இருக்கிறார்கள் என்றால், ஏதோ நம் தமிழ்நாட்டுப் பெரியோர்கள் செய்த புண்ணியந்தான்.

'ஸிம்பல்' மூலமாக ஒரு விஷயத்தை அறிவதோ உணர்வதோ மிகவும் கஷ்டமான விஷயம். அதெல்லாம் வயதும் அறிவும் முதிர்ந்தவர்களுக்கே உரியது. அல்லது மூளை ஒரு பக்கமாக வளர்ச்சியடைந்த கிறுக்குப் பிடித்த குழந்தைகளுக்கு உரியது. சாதாரணக் குழந்தைகளை இப்படியெல்லாம் ஏன் வதைக்க வேண்டுமோ, கடவுளுக்குத்தான் தெரியும்.

* * *

கடைசியாக, பாஷை கற்பிக்கும் முறையைக் கவனிக்கலாம். நான் ஹைஸ்கூலில் படித்த காலத்தில் 'டைரக்ட் மெதட்' என்னும் முறை சிலாக்கியமாகக் கருதப்பட்டது. அதாவது பாஷையைக் கற்பிக்கும் போது நேர்முகமாகப் பாஷையைப் படிக்கவும் பேசவும் எழுதவும் கற்பித்தார்கள். படிக்கச் சொல்லி அதன் பொருளை விளக்கினார்கள். பேசச் சொல்லிப் பழக்கப் படுத்தினார்கள். எழுதச் சொல்லி அதிலுள்ள பிழைகளைத் திருத்தினார்கள்.

பாஷையைக் கற்பதற்கு இலக்கணம் அவசியம் இல்லை என்று கருதப்பட்டது. ஹைஸ்கூல் வகுப்புகளில் பிழையின்றிப் பேசவும் எழுதவும் அவசியமான அளவு இலக்கணம் கற்பித்தால் போதும் என்று அந்த நாளில் இருந்தது.

நான் ஹைஸ்கூலில் படித்தபோது நன்னூல் சூத்திரம் ஒன்றுகூடக் கற்றதில்லை.

இப்போது ஐந்தாவது பாரத்துக்கு ஐம்பத்தாறு நன்னூல் சூத்திரங்கள் பாடமாக வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஒன்றைப் பாருங்கள் :

*" அம் ஆம் என்பன முன்னிலை யாரையும்*
*எம் ஏம் ஓம் இவை படர்க்கை யாரையும்*
*உம் ஊம் கடதற இருபா லாரையும்*
*தன்னொடு படுக்கும் தன்மைப் பன்மை."*

இம்மாதிரி ஒரு வருஷத்தில் ஐம்பத்தாறு சூத்திரங்களை ஒரு பதினொலு வயதுக் குழந்தை மனப்பாடம் செய்ய வேண்டும். அதற்குப் பொருளும் தெரிந்து கொள்ள வேண்டும்! அவ்வளவையும் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருந்து பரீட்சை எழுதவேண்டும். நல்ல வேளையாக நம்முடைய பிள்ளைகளில் மிகப் பெரும் பாலானவர், " பரீட்சையில் இலக்கணத்துக்குரிய மார்க் வேண்டாம் !" என்று தீர்மானித்துப் படிக்காமல் விட்டு விடுகின்றனர். அதனாலேயே அவர்கள் மூளை குழம்பாமல் பிழைத்திருக்கிறார்கள் என்று சொல்லவேண்டும்.

இப்படி நான் சொல்வதிலிருந்து நான் இலக்கணத் துக்குப் பரம விரோதி என்று சில நண்பர்கள் தீர்மானித்து விடக் கூடும். ஆனால் அது உண்மை அன்று.

சில நாளைக்கு முன்பு ஒரு தமிழ்ப் பிரமுகர் என்னிடம் " நீர் இலக்கணமே வேண்டாம் என்று சொல்கிறீராமே ? அது நியாயமா ? இலக்கணம் இல்லாவிட்டால் மொழி வளர்ச்சி என்ன ஆகிறது ?" என்று கேட்டார்.

அந்தப் பெரியாருக்கு நான் சொன்ன பதில் :— " ஐயா ! மன்னிக்க வேண்டும். இந்தக் காலத்தில்

'பாலிய மணம் கூடாது' என்று பலரும் ஒப்புக் கொள்கிறார்கள். குறைந்த பட்சம் பெண்களுக்குப் பதினாறு வயதும் ஆண்களுக்கு இருபது வயதும் அவசியம் ஆகியிருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இதையொட்டி நான் பாலிய மணத்தைக் கண்டித்து ஒரு கட்டுரை எழுதுவதாக வைத்துக் கொள்ளுங்கள். உடனே ஒருவர் என்னிடம் வந்து, 'என்ன, ஐயா! கலியாணமே கூடாது என்று நீர் சொல்கிறீராமே? கலியாணமே கூடாது என்றால் சமூகத்தில் ஒழுக்கம் என்ன ஆவது? எல்லாரும் மிருகங்களைப்போல் வாழ்வதா?' என்று கேட்டால் நான் என்ன பதிலைச் சொல்ல? தாங்கள் இலக்கணத்தைப் பற்றி என்னைக் கேட்பதும் அப்படித்தான் இருக்கிறது நான் மொழிக்கு இலக்கணமே வேண்டாம் என்று சொல்லவில்லை. சின்னஞ்சிறு குழந்தைகளின் மூளையை நன்னூல்சூத்திரங்களை நெட்டுருப் பண்ணி வறண்டுபோகச் செய்ய வேண்டாம் என்றுதான் சொல்கிறேன்" என்றேன்.

மொழி ஆராய்ச்சி மிக அபூர்வமான சுவையுடைய விஷயம். இலக்கணமும் அப்படித்தான். ஆனால் இதெல்லாம் பாஷையில் தேர்ச்சியடைந்த நிபுணர்களுக்குத்தான் சுவையளிக்கும். கலாசாலையில் படிக்கும் மாணாக்கர்களுக்கு—இலக்கியச் சுவை நன்றாய்க் கண்டவர்களுக்கு—ஓரளவு இலக்கணம் கற்பிக்கலாம். மொழி ஆராய்ச்சியையே முக்கிய பாடமாய் எடுத்துக் கொள்கிறவர்கள் இலக்கணத்தை பரிபூரணமாகக் கற்கவேண்டும்.

மற்றவர்களுக்கெல்லாம் மொழியைப் பிழையின்றி எழுதுவதற்கு வேண்டிய இலக்கணம் கற்பித்தால் போதுமல்லவா?—இதற்கு வேண்டிய இலக்கணத்தைப் பிள்ளைகளுக்கு ஒரே மாதத்தில் சுலபமாய்க் கற்றுக் கொடுத்துவிடலாமே?

" மகர இறுதி அஃறிணைப் பெயரின்
னகர மோடுறழா நடப்பன உளவே "

" இடுகுறி காரணமா போடாக்கம்
தொடர்ந்து தொழிலல காலந்தோற்று
வேற்றுமைக் கிடனுய்த் திணைபால் இடத்தொன்று
ஏற்பவும் பொதுவும் ஆவன பெயரே "

என்பன போன்ற நன்னூல் சூத்திரங்களை இளங் குழந்தைகள் நெட்டுருச் செய்து ஒப்புவிக்க வேண்டியது மொழி வளர்ச்சிக்கு அவசியந்தானா ?

உண்மையில், இப்படி நெட்டுருச் செய்யும் குழந்தைகளின் உடல்நலம் வளருமா ? அறிவுதான் வளருமா ?

ஸ்ரீ அவினாசிலிங்கம் அவர்கள் கல்வி மந்திரியாக வந்த பிறகு பள்ளிக்கூடங்களில் தமிழுக்கு முதல் ஸ்தானம் கொடுத்திருக்கிறார் ; ஆங்கிலத்தை இழுத்துக் கீழே மூன்றாவது ஸ்தானத்துக்குத் தள்ளியிருக்கிறார்.

தாய் மொழியை கௌரவித்தல் என்ற முறையில் இது மகிழ்ச்சி தரக்கூடிய காரியம்.

ஆனால் தமிழை முதல் மொழியாகக் கற்பிக்கும் முறை இன்னும் வகுக்கப்படவில்லை. அப்படி வகுக்கப்படும் போது பிள்ளைகள் தமிழின் மேல் — அருமைத் தாய் மொழியின் மேல்,—வெறுப்புக் கொள்ளாத, முறையில் வகுக்கப்பட வேண்டுமே யென்று ஆதிசிவனையும் ஆறுமுகத்தானையும் அகத்திய முனிவரையும் பிரார்த்தனை செய்து கொண்டிருப்போமாக.

தமிழ் முதல் மொழியாகச் செய்யப்பட்ட காரணத்தினால், ஆங்கில பாஷையின் கொடுங்கோன்மையும் கொடூர ஆதிக்கமும் எந்த விதத்திலாவது குறைந்திருக்கிறதா என்று கேட்டால் இன்று வரையில் இல்லை. அன்னிய பாஷையாகிய ஆங்கிலம் சொல்லிக் கொடுப்ப

தற்கு இதுவரை கடைப்பிடிக்கப்பட்ட பரம மௌடீக மான முறை இந்த 1948–மார்ச்சு மாதம் வரையில் அமுலில் இருந்து வருகிறது.

அன்னிய பாஷை சொல்லிக் கொடுப்பதற்குச் சிறந்த வழி என்ன வென்று குழந்தைகளின் கல்வி விஷயத்தில் ஆராய்ச்சி செய்தவர்களைக் கேட்டால் அவர்கள் ஒரு முகமாக, "பிள்ளைகளுக்குத் தெரிந்திருக்கிற விஷயங்களைப் பற்றியும் அவர்கள் பார்த்திருக்கிற கேட்டிருக்கிற பழக்கப் பட்டிருக்கிற விஷயங்களைப் பற்றியும் அன்னிய பாஷையில் சொல்வதுதான் சிறந்த வழி !" என்று அபிப் பிராயம் கூறுவார்கள். பிள்ளைகளுக்குத் தெரியாத விஷயங்களைப் பற்றிச் சொல்லி அன்னிய பாஷை கற்பிக்கும் முறை, அன்னிய பாஷை கற்பதில் உள்ள கஷ்டத்தை 100–க்கு 100 மடங்கு அதிகமாக்கி விடுகிறது என்றும் சொல்லுவார்கள்.

இப்போது ஆங்கிலம் கற்பிக்க அமுலில் இருந்து வரும் முறையைப் பார்க்கலாம்.

கிராமங்களில் உயர்தர எலிமெண்டரி ஸ்கூல்களில் படிக்கும் பிள்ளைகளின் படிப்பு முடிந்ததும் கவர் மெண்ட்டார் ஒரு பரீட்சை நடத்துகிறார்கள். அதற்கு எட்டாவது ஸ்டாண்டர்டு பரீட்சை என்று பெயர். இதில் பாஸ் செய்த பிள்ளைகளைப் பட்டணங்களில் உள்ள ஹைஸ்கூல்களில் மூன்றாவது பாரத்தில் சேர்த்துக் கொள்வார்கள்.

ஆகவே கிராமத்து எட்டாவது ஸ்டாண்டர்டு என்பது பட்டணத்து இரண்டாவது பாரத்துக்குச் சமமாகிறது.

நாளது 1948-ம் மார்ச்சு மாதத்தில் எட்டாவது ஸ்டாண்டர்டுக்குப் பரீட்சை நடந்தது. அதில் ஆங்கிலப் பரீட்சைக் கேள்விகளில் சிலவற்றைக் கேளுங்கள் :—

(1) Narrate an incident in the life of Nelson which shows his sense of honour or honesty.

(2) What do you learn of Napolean's character from his treatment of the British soldier ?

(3) How did the czar show his respect to the dead soldier and what lesson did his people learn from the czar's example ?

முதல் கேள்வி நெல்ஸனைப் பற்றியும் இரண்டாவது கேள்வி நெப்போலியனைப் பற்றியும் மூன்ருவது கேள்வி ஜார் சக்கரவர்த்தியைப் பற்றியும் கேட்டிருக்கிறது !!!

இன்னும் ஸிண்டரல்லாவைப் பற்றியும் கேட்டிருக்கிறது. அவள் *King's Ball*க்குப் போனது பற்றிக் கேட்டிருக்கிறது. ஜார்ஜ் ஙிடிவரைப் பற்றிக் கேட்டிருக்கிறது.

இந்தியப் பிரமுகர், இந்திய சரித்திர புருஷர் திலகர், காந்தி — இவர்களைப் பற்றியெல்லாம் ஆங்கிலத்தில் பாடங்கள் இருக்கக்கூடாதா ? கேள்வி கேட்கக்கூடாதா?

மேற்படி எட்டாவது ஸ்டாண்டர்டு பரீட்சையில் இங்கிலீஷ் பாஷைத் தரம் எவ்வளவு கடினமானது என்பதற்குச் சில உதாரணங்கள் சொல்கிறேன் :—

" Be sure that rifles aim,
Swift choi ce of generous part
Showed in its passing glean
The depths of a brave heart "

மேற்படி செய்யுளுக்குப் பொருள் கேட்டிருக்கிறது. *" To make leeway "* என்பதற்கும் *" To make headway "* என்பதற்கும் வித்தியாசம் கேட்டிருக்கிறது. அப்படியே *" To lose heart "* என்பதற்கும் *" To lose one's heart "* என்பதற்கும் பொருள் வேற்றுமை கேட்டிருக்கிறது. இந்தச் சொற்ருெடர்களை வைத்துக் கொண்டு வாக்கியம் அமைக்கும் படியாகக் கேட்டிருக்கிறது.

இந்தப் பரீட்சைத் தாளிலுள்ள கேள்விகளை நாலாவது, ஐந்தாவது, ஆருவது பாரத்துப் பிள்ளைகள் பலரிடம் நான் கேட்டேன். ஒருவராவது மூன்றில் ஒரு கேள்விக்குக்கூடச் சரியானபடி பதில் சொல்லவில்லை.

" *King's ball* " என்பதற்குப் பத்துப் பிள்ளைகளை அர்த்தம் கேட்டேன். "அரசனுடைய பந்து" என்று தான் அத்தனை பேரும் சொன்ஞர்கள். " *Ball* " என்னும் மேனுட்டின் களியாட்ட நடனத்தைப் பற்றி நம் பிள்ளைகளுக்குத் தெரியுமா ? எலிமெண்டரி ஸ்கூல் ஆசிரியர்களுக்குத்தான் தெரிந்திருக்க முடியுமா ? அல்லது அவசியமாகத் தெரிந்திருக்கத்தான் வேண்டுமா ?

மேற்படி கேள்விகளுக்கு ஆதாரமான ஆங்கில பாட புத்தகத்தைபார்த்தேன் *"The middte school English readers"* என்று பெயர். இது நாலாவது புத்தகம். உள்ளேயும் புரட்டிப் பார்த்தேன். படம் ஒன்றுகூடக் கிடையாது. கடன் இழவுக்காக முதற்பாடம் " *Our mother-land* " என்று இருக்கிறது. பின்னல் வரும் பாடங்கள் அவ்வளவும் ஆங்கிலேயரையும் ஆங்கில நாட்டையும் பற்றியவை. இந்தப் பாடப்புத்தகத்தை அமைத்தவரை மெக்காலேயின் அவதாரம் என்று வணங்குகிறேன் ! பரீட்சைத்தாள் அமைத்தவரைக் கம்ஸனுடைய புனர் ஜன்மம் என்று போற்றுகிறேன் ! வேறு என்ன செய்வது ? ஆனல் இந்தப் புத்தகத்தைப் பாடமாகச் சிபார்சு செய்த கல்வி இலாகா அதிகாரிகளை அழைப்பதற்கு வார்த்தையே இல்லை!

* * *

நாலாவது—ஐந்தாவது பார ஆங்கில பாடபுத்தகங்களை எடுத்துப் புரட்டிப் பார்த்தேன். அவற்றில் இந்தியக் குழந்தைகளுக்கு ஆங்கில பாஷை எளிதில் கற்பிக்கக்

கூடிய முறையில் அமைந்த பாடம் மிகவும் அபூர்வமாக இருக்கிறது.

ஆங்கில நாட்டு மரங்கள், மிருகங்கள், ஆங்கில நகரங்கள், ஆங்கில கிராமங்கள், ஆங்கில மயானங்கள், ஆங்கில உணவு வகைகள், ஆங்கிலேயரின் நடை உடை பாவனைகள் முதலியவற்றைக் கொண்ட பாடங்களே ஆங்கில பாடபுத்தகங்களில் மிகப் பெரும்பாலும் இருக்கின்றன.

ஆங்கில தேசத்துப்பாட புத்தகங்களில் நல்ல வர்ணப் படங்கள் நிறையச் சேர்த்திருப்பார்கள். குழந்தைகளுக்கு அவற்றைப் பார்ப்பதில் ஒரு ஆனந்தம் உண்டாகும். படிக்கும் விஷயமும் அந்தப் படங்களின் உதவியினால் நன்ருக விளங்கும்.

நம்நாட்டு ஆங்கிலப் பாட புத்தகங்களில் படமே கிடையாது; இருந்தால் அவலட்சணக் கிறுக்கல் படம் இரண்டொன்று இருக்கும். மற்றப்படி இங்கிலாந்தில் ஆங்கிலக் குழந்தைகள் படிப்பதற்குரிய விஷயங்களையே இன்னமும் நம்முடைய குழந்தைகள் ஆங்கிலப் பாடப் புத்தகங்களில் படிக்கிருர்கள். "படிக்கிருர்கள்" என்று சொல்வது தவறு. உருப்போட்டு மூளையில் திணித்துக் கொள்ளுகிருர்கள். எதற்காக என்பது கடவுளுக்கும் கல்வி இலாகாவுக்குந்தான் தெரியும்.

ஐந்தாவது பாரத்துக்குரிய பாடப்புத்தகத்தில், "*The tortoise speaks*" (ஆமை பேசுகிறது) என்று ஒரு பாடம் இருக்கிறது. அதில் அந்த ஆமை பின்வரும் செய்யுளைக் குறிப்பிட்டிருக்கிறது.

Timotheus, placed on high,
Amidst the tuneful choir,
With flying fingers,
Touched the lyre.

இன்னும் அந்த ஆமை சொல்லுகிற விஷயத்தைக் கொஞ்சம் கேளுங்கள்:''

" It was in the month of may last, that I resolved to elope from my place of cofinement for my fancy had represented to me that probably many agreeable tortoises of both sexes might inhabit the heights of baker's hill or the extensive plains of the neighbouring meadows, both of which I could discern from the terrace. One sunny morning therefore I watched my opportunity, found the wicket open, eluded the vigilance of Thomas Hoar, and escaped into the St. Foin, which began to be in blooms, and thence into the beans."

*'St. Foin'* என்றால் என்னவென்று சொல்லிவிடுங்கள், பார்க்கலாம்! ஒன்று! இரண்டு! மூன்று! என்ன? "அந்தப் பெயர் கொண்ட ஒரு சர்ச்சாயிருக்கலாம்" என்கிறீர்களா? கிடையாது, ஸார், கிடையாது! அது ஒரு பூண்டு! இங்கிலாந்திலே சிற்சில இடங்களிலே மட்டும் முளைக்கும் ஒரு பூண்டு!! தாவர வர்க்கம்!!

ஆமையாவது தப்பித்துக்கொண்டு எப்படியோ எங்கேயோ போய்ச் சேர்ந்தது. ஆனால், நம்முடைய பிள்ளைகளும் பெண்களும் தாங்கள் பார்த்திராத, பார்க்க முடியாத இடங்களையும் விஷயங்களையும் பற்றி அன்னிய பாஷையில் படிக்கவேண்டியிருக்கும் கொடுமையிலிருந்து தப்பமுடியவில்லை!

ஆசிரியர்களையும் பேராசிரியர்களையும் உபாத்தியாயர்களையும் மறுபடி திக்கு நோக்கித் தண்டம் சமர்ப்பித்துக் கேட்கிறேன். நமது கல்வி முறையையும் பாடத்திட்டத்தையும் பாடப் புத்தகங்களையும் நம் நாட்டுக் குழந்தைகளுக்குத் தக்கவாறு, சுதந்திரமடைந்த இந்தியாவின் முன்னேற்றத்துக்குத் தகுந்தவாறு, மாற்றி அமைக்க வேண்டாமா? அதற்கு அவர்கள் பிரயத்தனம் செய்ய வேண்டாமா?

# பரீட்சை என்னும் பாதகம்

மூன்று வருஷங்களுக்கு முன்னால் நடந்த ஒரு சம்பவம். ஒரு ஊரில் ஒரு கலியாணம் நடந்தது. கலியாணத்துக்கு வந்திருந்த விருந்தாளிகள் ஒரு ஜாகையில் தங்கியிருந்தார்கள். சந்தனம் பூசிக்கொண்டு வெற்றிலை பாக்கு மென்று கொண்டு குஷாலாகப் பேசிக் கொண்டு இரவு வெகு நேரம் வரையில் காலம் கழித்தார்கள். பேச்சினிடையே "உங்கள் பையனுக்குப் பரீட்சை பாஸ் ஆகிவிட்டதா?" என்று ஒருவரை யொருவர் கேட்டுக்கொண்டார்கள். சிலர் "ஆகி விட்டது!" என்றார்கள். சிலர் "இன்னும் தெரிய வில்லை!" என்றார்கள். பிறகு விளக்குகளை அணைத்து விட்டுப் படுக்கச் சென்றார்கள். படுத்துச் சிறிது நேரத்திற் கெல்லாம் கதவு தட தடவென்று இடிக்கப்பட்டது. "யார்?" "என்ன?" என்று அரைத் தூக்கமாயிருந்த வர்கள் கேட்டார்கள். "தந்தி வந்திருக்கிறது!" "யாருக்கு?" "சிவராம சுந்தரம் பிள்ளைக்கு!" குறிப் பிட்ட நபர் தூக்கி வாரிப் போட்டுக்கொண்டு எழுந்தார். தந்தியை வாங்கிப் படித்தார். "பையன் குளத்தில் விழுந்து இறந்தான்! உடனே வரவும்!" என்று தந்தியில்

எழுதியிருந்தது. "ஐயோ! ஐயோ!" என்று தகப்பனார் அலறி அடித்துக்கொண்டு ஓடினார். பிற்பாடு விசாரித்ததில் பையனுடைய தற்கொலைக்குக் காரணம் அவன் நாலாவது பாரம் பரீட்சையில் தேருததுதான் என்று தெரியவந்தது !!

சென்ற வருஷத்தில் மூன்று பெண் குழந்தைகள் பரீட்சையில் தேருததற்காகக் கோயமுத்தூரில் தற்கொலை செய்துகொண்டு மாண்டுபோன விவரம் நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

ஆயிற்று; இந்த வருஷத்துக்கு இளம் பிள்ளைகளின் தற்கொலை சீசன் ஆரம்பமாகிவிட்டது! ஒரு பையன் தற்கொலை செய்துகொண்டதாகச் செய்தி வந்துவிட்டது! இன்னும் எவ்வளவு வரப்போகிறதோ ?

இத்தகைய தற்கொலை பாதகத்துக்கு யார் ஜவாப்தாரி? நம் கல்வி முறைக்குக் காரண பூதரான மெக்காலே ஜவாப்தாரி; அந்தக் கல்வி முறையை நடத்திவைக்கும் கல்வி இலாகா அதிகாரிகள் ஜவாப்தாரி; பாடத்திட்டம் வகுத்தவர்கள் ஜவாப்தாரி; உபாத்தியாயர்கள் எல்லாரும் ஜவாப்தாரி; எல்லாருக்கும் மேலாக அந்தந்த பரீட்சைக் கேள்விகள் தயாரிக்கிருர்களே அந்தப் புண்ணிய புருஷர்களுக்கு அதிகமான பொறுப்பு இல்லாமல் போகுமா ?

* * *

பரீட்சை தேருததற்காகத் தற்கொலை செய்து உயிரைப் போக்கிக் கொள்ளுவது மகா மூடத்தனம் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனல், அத்தகைய மனே நிலையைப் பள்ளிக்கூடச் சூழ்நிலை உண்டாக்கி விடுகிறது. தற்கொலை செய்துகொள்ளுவது மட்டுமா? உடல்

மரணத்தைக் காட்டிலும் கொடிய பரிதாபகரமான ஆத்மாவின் மரணம் எத்தனை பேருக்கு நேரிடுகிறது! எத்தனை பிள்ளைகள் மானம் போய்விட்டதாக எண்ணி உள்ளங் குன்றிச் சொல்லொணுத நரக வேதனையடைவது அவர்களைப் பிற்கால வாழ்வுக்கு எவ்வளவு தகுதியற்றவர்களாகச் செய்துவிடுகிறது? அவர்களுடைய திறமையையும் சுயநம்பிக்கையையும் எவ்வளவு குறைத்துவிடுகிறது?

சென்ற வருஷம் காலேஜ் முதல் வகுப்பில் படித்த ஒரு வாலிபன் ஸ்ரீ வைகுண்டத்திலிருந்து கடிதம் எழுதியிருக்கிருன். அவன் படித்த காலஜேில் முதல் வகுப்புப் பரீட்சையில் முப்பது மார்க் வாங்கினுல் பாஸ் என்று தீர்மானித்து அவ்விதமே 30 மார்க் வாங்கிய எல்லாருக்கும் பாஸ் கிடைத்திருக்கிறதாம். இந்த இளைஞனுக்கு 29 மார்க் வந்ததாம்! எனவே அவனுக்குப் 'பாஸ்' இல்லை! "ஒரு மார்க் குறைந்ததினுல் என் வாழ்க்கை பாழாகிறதா? மற்றப் பிள்ளைகளின் முகத்திலே நான் எப்படி விழிப்பேன்! எனக்கு உடம்பு சரியில்லாமலிருந்தும் பரீட்சையன்று நிற்கக்கூடாது என்று போய் எழுதினேனே! அதன் விளைவு இப்படியாயிற்றே! பரீட்சைக்குப் போகாமல் மெடிகல் சர்டிபிகேட் தாக்கல் செய்த 30 பேருக்கு பாஸ் கிடைத்திருக்கிறதே? இன்னும் ஒரு வருஷம் என் பெற்ருேர்களுக்குத் தண்டச் செலவு வைக்கவேண்டி யிருக்கிறதே? ஆறு மாதப் பரீட்சையில் நான் வாங்கிய மார்க்கைப் பார்த்து பாஸ் போடக் கூடாதா? இப்படி என்னைக் கெடுக்க வேண்டுமா? எங்கள் காலேஜ் பிரின்ஸ்பாலுக்கு யாராவது சொல்ல மாட்டார்களா?" என்று கல்லுங்கரையும் வண்ணம் மூன்று பக்கம் அந்த இளம் பிள்ளை எழுதியிருக்கிருன்.

இருபத்தொன்பது என்று மேற்படி பையனுக்கு மார்க் போட்ட புண்ணியவான், தங்கம் நிறுக்கும்

தராசிலே நிறுத்துப் போட்டாரா? ஒரு மார்க் அதிகம் போட்டு ஒரு பையனைக் காப்பாற்றியிருந்தால் அவர் நரகத்துக்குப் போக நேர்ந்திருக்குமா? அல்லது அவர் கையில் தேள் கொட்டியிருக்குமா? அல்லது அவனுக்குப் பாஸ் போட்டிருந்தால் பிரின்பாலுக்குத்தான் மோட்சம் நஷ்டமாகி விடுமா? அப்படியெல்லாமிருந்தாலும், **இருபத்தொன்பது** என்று மார்க்குப் போட்டு ஓர் இளம் பிள்ளையைச் சித்திரவதை செய்வதற்குப் பதிலாக, **இருபது** மார்க்கு என்று போட்டுத் தொலைப்பதுதானே! "ஒரு மார்க்குக் குறைவினால் தவறிஞேமே!" என்று அப்போது மனவேதனையாவது இல்லாமல் போகுமல்லவா?

* * *

சில மாணுக்கர்கள் பரீட்சை தேருததற்காகத் தற்கொலை செய்துகொண்டு சாகிருர்கள்; சிலர் உள்ளங் குன்றிச் சாகிருர்கள். வேறு சிலரோ பரீட்சை தேறவில்லையென்பதைச் சாதித் துவேஷத்தை வளர்ப்பதற்காக உபயோகிக்கிருர்கள்.

பிராமணரல்லாத பிள்ளையாயிருந்தால் "ஆசிரியர் பார்ப்பனர். அதனுல் எனக்கு மார்க் கொடுக்காமல் கெடுத்து விட்டார்" என்கிருன். பிராமணச் சிறுவஞயிருந்தால் "ஆசிரியர் ஆன்டி பிராமின் (அதாவது பிராமணத் துவேஷி); அதனுல் வேண்டுமென்று என்னை இப்படிக் கெடுத்து விட்டார்" என்று சொல்கிருன்.

நமது அருமைத் தாய் நாட்டில் இத்தகைய மூடத்தனமான வகுப்புத் துவேஷம் நம் இளம் பிள்ளைகளின் உள்ளத்தில் வளர வேண்டுமா? அவசியந்தாஞ?

* * *

பரீட்சைகள் முடியும் வரையில் பிள்ளைகளுக்கு வேலை; பரீட்சைகள் முடிந்ததும் தகப்பஞருக்கு வேலை!

எந்தப் பரீட்சைப் பேப்பர் எந்த ஆசிரியர் திருத்துகிறார் என்று துப்புக் கண்டு பிடித்துக்கொண்டுவந்து பிள்ளைகள் சொல்கிறார்கள் ! உடனே தகப்பன்மார்கள் சிபார்சுக் கடிதங்கள் வாங்கிக்கொண்டு பிரயாணம் கிளம்புகிறார்கள். பணக்காரப் பெற்றோர் சிலர் பண மூட்டையுடனும் கிளம்புகிறார்கள். எதற்கு ? பரீட்சைப் பேப்பர் திருத்தும் ஆசிரியர்களைக் கண்டு பிடித்து, "நம்ம பையனுக்குப் பாஸ் மார்க் போட்டு விடுங்கள் !" என்று சொல்வதற்காகத்தான் !

அடடா ! 'லஞ்சம்' 'லஞ்சம்' என்று சொல்லுகிறோமே ? இந்தக் காரியத்தைப்பற்றி என்னவென்று சொல்ல ? மரத்தின் வேரிலே பிடித்து அரிக்கும் கரையானைப் போல் இந்த நிலைமை பிள்ளைகள், தகப்பன்மார்கள், உபாத்தியாயர்கள் ஆகிய எல்லாருடைய ஒழுக்கத்தையும் அல்லவா கெடுத்து நாசமாக்கி விடுகிறது !

* * *

சில சமயம் பரீட்சைக் கேள்விகள் வெளியாகிவிட்டதாகச் செய்திகள் வருகின்றன. எப்படி வெளியாகின்றன? பிள்ளைகளின் முயற்சியினாலும் சாமர்த்தியத்தினாலுந்தான் ! பரீட்சைத் தாள்கள் அச்சாகிற அச்சாபீஸ்களைத் துப்பு வைத்துக் கண்டு பிடிக்கிறார்கள். அங்கே வேலை செய்கிறவர்கள் யாருக்காவது லஞ்சம் கொடுத்துத் திருடப்பண்ணுகிறார்கள். லஞ்சப் பணம் ஒருவரே கொடுக்க முடியுமா ? பலரிடம் வசூல் செய்கிறார்கள். பரீட்சைக் கேள்விகள் பலருக்குத் தெரிந்தவுடனே, அவரவர்களுக்கு வேண்டியவர்களிடம் சொல்வதால் நாடெங்கும் பரவி விடுகிறது. சென்ற வருஷத்தில் பரீட்சைக் கேள்விகளை அச்சிட்டு முன்னதாக விற்பனை செய்ததாகவே கேள்விப் பட்டோம்.

இப்படிப் பொறுப்பில்லாமல் பரீட்சைத் தாள்கள் விஷயத்தில் அலட்சியமாயிருந்து விடும் பெரிய கல்வி

இலாகா உத்தியோகஸ்தர்களைப் பற்றிக் கேள்வி முறை யில்லை, ஏழைக் கம்பாஸிடர்கள் சிலர் தண்டிக்கப் படுகின்றனர். அது மட்டுமா ?

சில பிள்ளைகள் செய்த குற்றத்திற்காக மாகாண முழுவதிலும் அந்த வகுப்பிலே படித்த பிள்ளைக ளெல்லாரும் தண்டிக்கப் படுகிறார்கள். மறுபடியும் அவர்கள் படை பதைக்கிற வெய்யிலில் மூன்று மணி நேரம் புழுங்கிக்கொண்டு உட்கார்ந்து பரீட்சை எழுதித் தொலைக்க வேண்டும் !

* * *

இந்த மார்ச்சு மாதத்தில் நடந்த எட்டாவது ஸ்டாண்டர்டு பரீட்சையைப் பற்றி முன் கட்டுரையில் எழுதி யிருந்தேனல்லவா ? அது போல் சில சமயம் பல பரீட்சைத் தாள்கள் மகா மோசமாக அமைக்கப்படு கின்றன. கேள்வி கேட்பவர்கள் மாணுக்கர்களைத் திணற அடிப்பதில் தங்களுடைய சாமர்த்தியத்தை யெல்லாம் காட்டி விடுகிறார்கள். இதன் காரணமாகப் பரீட்சை எழுதிய மாணுக்கர்களில் 100-க்கு 70 பேர், 80 பேர், சில சமயம் 90 பேர் கூடப் பாஸ் மார்க் பெறுவதில்லை. இந்த மாதிரி நிலைமையில் என்ன செய்கிறார்களாம் தெரியுமா ? ஒரு பரீட்சையில் 100-க்கு 90 மாணுக்கர்கள் தேறவில்லை யென்றால் அது பெரிய வெட்கக் கேடாக இருக்கு மல்லவா ? கல்வி இலாகாவுக்கே முட்டாள் பட்டம் கிடைக்கும் அல்லவா ? இதற்காகப் "பரீட்சை எழுதிய எல்லாப் பிள்ளைகளுக்கும் +20 மார்க்குப் போடு" என்கிறார்கள். அதாவது கிடைத்த மார்க்கோடு இருபது மார்க்கைக் கூட்டு என்கிறார்கள் !! இவ்விதம் பரீட்சை தேறியவர்களின் தொகையைக் கணிசமாகப் பெருக்கிக் கல்வி இலாகாவின் மானத்தைக் காப்பாற்றிக் கொள் கிறார்கள்.

இந்தமாதிரி நடந்திருக்கிறதா இல்லையா என்று கல்வி இலாகா பதில் சொல்லட்டும். அப்படி நடந்திருப்பது உண்மையானால் இம்மாதிரி பரீட்சைகளுக்கு ஏதாவது பொருள் உண்டா? இளங் குழந்தைகளின் விஷயத்தில் பெருங் கேடுகள் செய்வது ஆகாதா? பரீட்சைக் தாள்களைப் பார்த்தவுடன் ஆயிரக்கணக்கான பிள்ளைகளும் பெண்களும் மனவேதனைப்பட்டதற் கெல்லாம் யார் ஜவாப்தாரி? அத்தகைய கேள்விப் பத்திரங்களைத் தயாரித் தவர்களுக்கு என்ன தான் தண்டனை? அவர்கள் கல்வி இலாகாவுக்குப் பொருத்தமற்றவர்கள் என்றுவது தீர்மா னித்து வேறு உத்தியோகம் பார்த்துக் கொள்ளும்படி சொல்ல வேண்டாமா?

* * *

ஒரு வருஷம் முழுவதும் படிப்பதில் ஒரு இளம் பையனுக்கு எவ்வளவு மூளைச் சோர்வும் உடல் நலக் கெடுதியும் ஏற்படுகிறதோ, அவ்வளவு சோர்வும் கெடுதியும் பரீட்சை வாரத்தில் மட்டும் ஏற்பட்டு விடுகிறது. எத்தனை பிள்ளைகள் இரவில் டீ போட்டுச் சாப்பிட்டு விட்டு இரவெல்லாம் கண் விழித்துப் படிக்கிறார்கள்! 'படிக்கிறார்கள்' என்பது தவறு; மூளை வறளும்படியாக 'நோட்ஸு'களை உருப் போட்டுத் தள்ளுகிறார்கள்! இதனால் இளம் குழந்தைகளின் உடல் நலத்துக்கு எவ்வளவு கெடுதல் ஏற்படுகிறது! யாராவது நல்ல வைத்தியர்களைக் கொண்டு ஆயிரம் மாணக்கர்களை எஸ். எஸ். எல். சி. பரீட்சைக்கு முன்னும் பின்னும் வைத்திய பரிசோதனை செய்து பார்க்கட்டும். பரீட்சை கெடுபிடியினாலும், பீதியினாலும் பாதிக்கு மேற்பட்ட மாணவர்களின் உடல் நலம் சீர்கேடு அடைந்திருக்கு மென்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

* * *

இந்தியாவிலேயே மிகச் சிறந்த அறிவாளி என்று எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பிரமுகர் தம்முடைய பரீட்சை அனுபவத்தைப் பற்றிப் பின் வருமாறு சொல்லியிருக்கிறார் :— "கலாசாலைக்குத் தலை முழுகிவிட்டு நான் வெளியேறிய பிறகு பல வருஷ காலம் தூங்கும்போது பரீட்சைக் கனவு காண்பது உண்டு. பரீட்சைக்காக அவசர அவசரமாக ஓடுவது போலும் அப்படி ஓடியும் காலேஜ் வாசலில் என்னை நிறுத்தி விட்டது போலும் சில சமயம் காண்பேன். இன்னும் சில சமயம் பரீட்சை எழுத உட்கார்ந்தது போலும் பரீட்சைத்தாளைக் கையில் வாங்கிப் பார்த்ததும் ஒன்றும் புரியாமல் தலை கிறு கிறுத்ததுபோலும் கனவு காண்பேன். சட்டென்று கண் விழித்துக் கொள்வேன். உடம் பெல்லாம் வியர்த்து விருவிருத்திருக்கும். அப்புறம் வெகு நேரம் வரையில் தூக்கமே வராது! பரீட்சையானது அத்தகைய பீதியை என்னுடைய உள்ளத்தில் உண்டாக்கி யிருந்தது!"

இவ்விதம் கூறியது யார் என்று நினைக்கிறீர்கள்? வேறு யாரும் இல்லை. இந்தியாவின் முதலாவது இந்திய கவர்னர்—ஜெனரலான ஹிஸ் எக்ஸெலன்ஸி ஸ்ரீ சக்கர வர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்களே யாகும். பரீட்சை விஷயமாக அவருடைய அநுபவமே இப்படி யெனில் மற்றவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமா?

* * *

"எல்லாம் சரிதான்; அதற்காகப் பரீட்சைகளையே ஒழித்துவிட முடியுமா? பின் எப்படித்தான் மாணாக்கர் களின் அபிவிருத்தியை மதிப்பிடுவது? இந்தியாவில் மட்டுந்தானா பரீட்சை நடக்கிறது? இங்கிலாந்து முதலிய எல்லா நாடுகளிலும் பரீட்சை நடத்துகிறார்களே?" என்று சொல்லலாம்.

இங்கிலாந்து முதலிய நாடுகளில் பரீட்சை நடத்துகிறார்கள் என்பது சரி! ஆனால் இங்கிலாந்தில் பரீட்சை தேறாததற்காக எந்த மாணவனாவது தற்கொலை செய்து கொண்டான் என்று நாம் கேள்விப் பட்டதுண்டா? ஏன் கேள்விப்பட்டதில்லை?

* * *

எந்த விதமான கல்வி முறையிலும் ஏதோ ஒரு விதமான பரீட்சை அவசியமாயிருக்கலாம். ஆனால் அந்தப் பரீட்சை குழந்தைகளின் இளம் உள்ளத்தில் பீதியை உண்டாக்கக் கூடாது; அவர்களுடைய மூளையைப் பலவீனப் படுத்தக் கூடாது. அவர்களுடைய உடல் நலத்தைப் பாதிக்கக் கூடாது; பரீட்சையில் தேறாத தற்காகத் தற்கொலை செய்து கொள்ளத் தூண்டும் சூழ்நிலையும் கூடாது.

* * *

நமது கல்வி முறை மோசமானது. நமது பாட திட்டமும் பாட புத்தகங்களும் படுமோசமானவை; பரீட்சை முறையோ மிகக் கொடூரமானது. நம்முடைய கல்வி முறை, பாட திட்டம், பரீட்சை முறை ஆகிய மூன்றும் அடியோடு மாறுதல் அடைந்தால் தான் இந்தியாவின் வருங்கால சந்ததிகள் பிழைத்துக் கடைத் தேறுவார்கள்.

## பாடப் புத்தகக் கொள்ளை

" **மா**லதி ! எழுந்து நில் !"

ஏழை மாலதி எழுந்து நின்றாள்.

" உன்னுடைய பூகோள புத்தகம் எங்கே ?" என்று ஆசிரியை கேட்டாள்.

" இன்னும் வாங்கவில்லை."

" ஏன் வாங்கவில்லை ?"

" அப்பா பணம் இல்லை என்கிறார்."

" பாக்கிச் செலவுக்கெல்லாம் பணம் இருக்கிறது. புத்தகம் வாங்க மட்டும் பணம் இல்லையா ? வகுப்பை விட்டு வெளியே போ !" என்று ஆசிரியை கர்ஜித்தாள்.

மாலதி வெளியில் போய் நின்று கண்களைக் கசக்கிக் கொண்டிருந்தாள். சற்று நேரம் கழித்து ஆசிரியை, " உள்ளே வந்து உட்கார் ! நாளைக்குக் கட்டாயம் புத்தகம் வாங்கிக்கொண்டு வரவேண்டும், தெரியுமா ? இல்லாவிட்டால் பள்ளிக்கூடத்துக்கே வரவேண்டாம் !" என்றாள்.

பள்ளிக்கூடம்விட்ட பிறகு மாலதியும் அவளுடைய தோழி சாரதாவும் பஸ் ஸ்டாண்டு பக்கத்தில் நின்று கொண்டிருந்தார்கள். மாலதி விம்மி அழுதாள். சாரதா "ஏன் மாலதி அழுகிருய்? வேண்டாம்! பூகோள டீச்சர் சமாசாரம்தான் உனக்குத் தெரியுமே?" என்ருள்.

மாலதி விம்மலுடன் "அதற்காக இல்லை, சாரதா! என் அப்பாவுக்கு மாதம் நாற்பத்தைந்து ரூபாய் சம்பளம். அரிசி வாங்கப் பணம் போதவில்லை...குழந்தைக்குப் பால் வாங்க முடியவில்லை. முப்பது ரூபாய் கடன் வாங்கிப் புத்தகமும் நோட்டுகளும் வாங்கியாகிவிட்டது. இன்னும் புத்தகம் வாங்கிக் கொடுங்கள் என்று அப்பாவை எப்படிக் கேட்பேன்?" என்ருள்.

"நிஜந்தான், அம்மா! எங்க அப்பாவுக்கு மாதம் இரு நூறு ரூபாய் சம்பளம். அப்படியிருந்தும் 'உனக்குப் புத்தகம்—நோட்டு வாங்கிக் கொடுக்க எனக்குச் சம்பாத்தியம் போதாது' என்று சொல்லுகிருர், நீ என்ன செய்வாய்?" என்ருள் சாரதா.

இது சென்ற வருஷம் ஜூலை மாதம் ஆரம்பத்தில் உண்மையாக நடந்த சம்பவம்.

* * *

ஆயிற்று, ஜூன் மாதம் பிறந்துவிட்டது. இந்த மாதக் கடைசிக்குள் பள்ளிக்கூடங்கள் எல்லாம் திறந்து விடும். பரீட்சை தேறிய குழந்தைகள் மேல் வகுப்புக்குப் போகும் ஆர்வத்துடன் உற்சாகமாகப் போவார்கள். ஆனல் சிலநாளைக்குள்ளேயே அவர்களில் அநேகம் பேர் 'புத்தகம் நோட்டு வாங்கப் பணம் கொடுக்கவில்லை' என்று பெற்ருேர்கள் மீது குறைப்படுவார்கள். எத்தனை குழந்தைகள் மீது தாய் தகப்பனுர் எரிந்து விழப்போகிருர் களோ தெரியாது.

ரூபாய்க்கு முக்கால்படி அரிசி விற்கும் இந்தக் காலத்தில், ஏழைக் குடும்பங்களில் ஒவ்வொரு பைய னுக்கும் பெண்ணுக்கும் புத்தகம்—நோட்டுக்கு முப்பது நாற்பது செலவழிக்க வேண்டுமென்றால் எரிச்சல் வராமல் என்ன செய்யும் ?

எப்படியோ கஷ்டப்பட்டுக் கடன் வாங்கி வயிற் றெரிச்சல் தீரப் பிள்ளைகளைத் திட்டிக்கொண்டே பெற்றோர்கள் சம்பளம் கொடுத்து விடுகிறார்கள். ஜூலை மாதம் 15-ந் தேதியிலிருந்து சிறுவர்களும் சிறுமிகளும் பச்சிளம் பாலர்களும் புத்தகங்களையும் நோட்டுகளையும் சுமக்கமாட்டாமல் சுமந்து கொண்டு பள்ளிக்கூடங் களுக்குப் போகும் பரிதாபக் காட்சியை வீதிகளிலே பார்க்கலாம். சாதாரணமாகப் பத்து வயதுச் சிறுவன் ஒருவன் எட்டுபாட புத்தகங்களும் பன்னிரண்டு நோட்டு புத்தகங்களும் எடுத்துக் கொண்டு போவான். பதினாலு வயதுப்பெண் ஒருத்தி பன்னிரண்டு புத்தகங்களும் பதினெட்டு நோட்டுகளும் எடுத்துக்கொண்டு போவாள். இவற்றைத் தவிர அட்லாஸ், மட்டப் பலகை, பேனா, பென்சில், ரப்பர், மைக்கூடு, ஜியாமெட்டரி கருவிகள் உள்ள பெட்டி, வர்ணப் பெட்டி, புருஷ் இவ்வளவும் கொண்டுபோக வேண்டும். விளக்குமாறு ஒன்றுதான் பாக்கி. புத்தகம் முதலியவை வீதியில் விழுந்து சிதறி விட்டால் கூட்டிச்சேர்ப்பதற்கு விளக்குமாறு இருந்தால் வசதியாக இருக்கும் !

இங்லீஷுக்கு, தமிழுக்கு, சரித்திரத்துக்கு, பூகோளத் துக்கு, கணக்குக்கு, இலக்கணத்துக்கு, ஸயன்ஸுக்கு என்று தனித்தனி பாடபுத்தகங்கள். 'நான்டிடெய்ல்—' அல்லது 'ஸப்ளிமெண்டரி' எனப்படும் உப பாடப் புத்தகங்கள், அந்தப் புத்தகங்களில் உள்ள பாடங்

களுக்கு அர்த்தம், வியாக்கியானம், விரிவுரை, பரீட்சை களில் வரக்கூடிய கேள்விகள், பதில்கள் அடங்கிய 'நோட்ஸ்' புத்தகங்கள்—இவையெல்லாம் அச்சிடப் பட்டவை.

பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் சொல்லுகிற 'நோட்ஸு'களைக் குறித்துக் கொள்ள வெறும் காகிதத்தி லான நோட்டுப் புத்தகங்கள் ஒவ்வொரு பாடத்துக்கும் ஒன்று அல்லது இரண்டு. வியாசம் எழுதும் நோட்டுகள் 'இம்போஸிஷன்' எழுதும் நோட்டுகள்.

ஹைஸ்கூலில் முதல் பாரத்திலிருந்து ஆருவது பாரம் வரையில் படிக்கும் ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் மேற்கூறியவை யெல்லாம் வாங்கியாக வேண்டும்!

எதற்காக? ஏழைப் பெற்ருேர்களின் வயிற்றெரிச்சலை கொட்டிக் கொள்வதற்காக! இரவும் பகலும் நெட்டுருப் பண்ணி உருப்போட்டு மூளையைக் கெடுத்துக்கொண்டு குட்டிச் சுவராய்ப் போவதற்காக!

* * *

பள்ளிக்கூடங்கள் என்னத்திற்காக இருக்கின்றன? உபாத்தியாயர்கள் எதற்காக இருக்கிருர்கள்? பிள்ளை களுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுப்பதற்காக! கல்வி போதிப்பதற்காக! நல்லது; அப்படியாளுல் பாடப் புத்தகங்களும் 'நோட்ஸ்' புத்தகங்களும், நோட்டுப் புத்தகங்களும் எதற்காக? அதிலும் குழந்தைகள் தூக்க முடியாமல் திணறித் தூக்கிக் கொண்டு போகும்படி அவ்வளவு புத்தகங்களும் நோட்டுகளும் எதற்காக?

பாஷை கற்பிப்பதற்காகப் புத்தகம் வேண்டும், என்பது சரி; தமிழுக்கு ஒன்றும் இங்கிலீஷுக்கு ஒன்றும் சமஸ்கிருதம் அல்லது ஹிந்தி படிப்பவர்களுக்கு

அந்தந்த பாஷைகளில் ஒன்றும் பாடப் புத்தகங்கள் இருந்தால் போதும் அல்லவா ?

பூகோளம், சரித்திரம், ஸயன்ஸ், இலக்கணம், கணக்கு—இவற்றுக் கெல்லாம் புத்தகம் எதற்காக ? வகுப்பில் உபாத்தியார் சொல்லிக் கொடுப்பது போதாதா ? போதாது என்றால் பள்ளிக்கூடம் எதற்கு ?

*　　　　*　　　　*

பாடப் புத்தகங்கள் பிரசுரிப்பதிலும், அவற்றை அங்கீகரிக்கும்படி செய்வதிலும் ஊழல்கள் மிகப் பிரசித்தமானவை.

பாடப் புத்தகக் கமிட்டியில் உள்ள ஒவ்வொரு அங்கத்தினருக்கும் 'வேண்டியவர்கள்' சிலர் பாடப் புத்தகங்களைத் தயாரிப்பார்கள். குறிப்பிட்ட அங்கத்தின ருக்குத் தெரியப்படுத்தி விட்டுப், பரீசீலனைக்கு அனுப்பு வார்கள். அங்கத்தினர்கள், "இவர் நம்முடைய மனிதர், இவருக்கு ஒன்று போடுங்கள் !" "இந்த ஆசிரியர் உங்களுக்கு வேண்டியவர் ; அவருக்கும் ஒன்று கொடுங் கள்" என்ற முறையில் பாடப் புத்தகங்களை அங்கீகரித்து விடுவார்கள். மற்றப்படி அவர்கள் லஞ்சம் வாங்கிக் கொண்டோ லஞ்சத்துக்கு ஆசைப்பட்டோ பாடப் புத்தகங்களைச் சிபார்சு செய்வதாக நான் சொல்லத் தயாராயில்லை.

ஆனால், பாடப் புத்தகங்களில் லஞ்சம் தாண்டவ மாடும் வேறு இடங்கள் இருக்கின்றன. இவை ஜில்லா போர்டு முனிசிபாலிடிகளின் நிர்வாகத்துக்கு உட்பட்ட பள்ளிக்கூடங்களில் பாடப் புத்தகங்களை வைப்பது சம்பந்தமாகத்தான்.

ஒரு சமயம் ஒரு பிரபல பாடப் புத்தக கம்பெனிக் காரரிடம் "இதோ இந்தப் பாடப் புத்தகத்துக்கு ஒரு

ரூபாய் விலை வைத்திருக்கிறீர்களே ? இதில் எத்தனை பிரதி செலவாகும் ? இந்த ஒரு புத்தகத்தில் உங்களுக்கு என்ன கிடைக்கும் ?" என்றேன்.

"குறைந்த பட்சம் பத்தாயிரம் புத்தகம் விற்கும். அங்கும் இங்கும் ஆட்களை அனுப்பி வேலை செய்தால் இருபதினுயிரம் புத்தகம் விற்கும். மூன்று வருஷத்தில் குறைந்தது ஐம்பதினுயிரம் விற்கலாம். ரொம்ப செல்வாக்குள்ளவர்கள் ஒரு லட்சம் புத்தகம் விற்றுவிடுவார்கள்" என்றார்.

"ஒரு லட்சம் புத்தகம் விற்ருல் ஒரு லட்சம் ரூபாய் ஆயிற்றே ? அதில் உங்களுடைய லாபம் என்ன ?" என்று கேட்டேன்.

"என்னுடைய பங்கு இருபத்தையாயிரம் வந்தால் பெரிய காரியம்"

"பாக்கியெல்லாம் ?"

"பிரதிக்கு நாலு அணு வீதம் லட்சம் பிரதி தயாரிப்பதற்கு இருபத்தையாயிரம் ரூபாய் செலவு ஆகும்"

"இதில் புத்தகம் எழுதிய ஆசிரியருக்கு என்ன பங்கு ?" என்றேன்.

"ஆயிரம் முதல் இரண்டாயிரம் வரையில் கொடுப்போம்."

"இவ்வளவுதானு ?"

"பின்னே என்ன ? எண்பது ரூபாய் தொண்ணூறு ரூபாய் சம்பளம் வாங்கும் உபாத்தியாயருக்கு ஆயிரம், இரண்டாயிரம் மொத்தமாகக் கிடைத்தால் வாங்கிக் கொள்ள வலிக்குமா ?"

"சரி ; பாக்கி ஐம்பதினுயிரத்துக்கு என்ன கணக்கு ? சொல்லுங்கள்."

“ அங்கங்கே பாடப் புத்தகம் விற்கும் கடைக்காரர்களுக்கு 100-க்கு 15 வீதம் கமிஷன் கொடுப்போம். அதில் பதினையாயிரம் போகும். பாக்கி முப்பத்தையாயிரமும் நாலாபுறமும் ஆட்கள் அனுப்புவதற்கும், ஜில்லாபோர்டு—நகரசபை மெம்பர்களைப் பார்த்துச் சரிக்கட்டுவதற்கும் சரியாய் போய்விடும் !”

மேலே நான் எழுதியிருக்கும் சம்பாஷணை மூன்று நாலு வருஷத்துக்கு முன்பு நடந்தது. இப்போது ஒரு வேளை விகிதாசாரம் மாறுபட்டிருக்கலாம். அல்லது லஞ்சமே ஒழிந்துபோயிருக்கலாம். ஆயினும் பாடப்புத்தகங்களின் உற்பத்திச் செலவு, விற்பனைத் தொகை, லாபம் இவை குறித்த விவரங்கள் அதிகமாக, மாறியிராதென்றே நினைக்கிறேன்.

ஒரு வேளை பாடப் புத்தகங்கள் எழுதும்ஆசிரியர்கள் முன்னைக் காட்டிலும் அதிகப் பணம் பெற்றால் மகிழ்ச்சி அடைவேன். ஏனெனில் பாடப்புத்தகங்களுக்காக நமது ஜன சமூகம் செலவழிக்கும் மொத்தத் தொகையில் ஆசிரியர்களுக்குப் போய்ச் சேரும் தொகை மட்டுமே சரியான செலவு என்று சொல்லலாம். மற்றச் செலவெல்லாம் தண்டச் செலவுதான் !

* * *

சில நாளைக்கு முன்பு இனிப்பாடப் புத்தகங்களைச் சர்க்காரே வெளியிடப் போகிறார்கள் என்று ஒரு செய்தி வெளியாயிற்று. பிறகு அது மறுக்கப்பட்டது.

இப்போதுகூடச் சில பாடப் புத்தகங்களைச் சர்க்காரே வெளியிட்டு வருகிறார்கள்.

உதாரணமாக எஸ். எஸ். எல். ஸி. வகுப்புக்கு ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, ஸம்ஸ்கிருத பாடப் புத்த

கங்களைச் சர்க்காரே தம் பொறுப்பில் தயாரித்து வெளியிடு கிறார்கள்.

யுனிவர்ஸிடியின் பெயருடன் வெளியானாலும் சர்க்கார் பரீட்சையானதால் சர்க்கார் வெளியிடுவதாகவே வைத்துக்கொண்டு சொல்கிறேன்.

1948-ம் வருஷத்து எஸ். எஸ். எல், ஸி. பரீட்சைக்கு ஆங்கிலப் பாடப் புத்தகம் சென்னை-ஆந்திர சர்வகலா சாலைகள் வெளியிட்டிருக்கின்றன. மொத்தம் 89 பக்கங்கள் கொண்ட புத்தகம். பல ஆசிரியர்களுடைய கட்டுரைகளிலிருந்தும் கதைகளிலிருந்தும் எடுத்த விஷயங்கள். மேற்படி ஆசிரியர்களுக்குச் சன்மானம் கொடுத்திருக்க நியாயமில்லை. மொத்தம் 64,000 (அறுபத்து நாலாயிரம்) பிரதிகள் அச்சிடப்பட்டதாகப் புத்தகத்தின் கடைசிப் பக்கத்தில் கடைசி வரியில் குறிப்பிட்டிருக் கிறது.

புத்தகத்தில் மருந்துக்கும் ஒரு படம் கிடையாது. பாடங்களுக்கு ஒரு குறிப்புரை கிடையாது. ஒருவிளக்கம் கிடையாது.

இத்தகைய புத்தகத்துக்கு ரூ. 1-4-0 விலை வைத்திருக் கிறது !

சர்க்கார் பிரசுரமானதால் பள்ளிக்கூடங்களுக்கு நேரே அனுப்பி விடுவார்களாம். புத்தகக்கடைக்காரனுக்கு கமிஷன் கூடக் கொடுப்பதில்லை !

பின்னே எதற்காக ரூ. 1-4-0 விலை வைத்திருக் கிறார்கள் ? பிள்ளைகளைப் பெற்றவர்களின் வயிற் றெரிச்சலைக் கொட்டிக் கொள்வதைத் தவிர வேறு எதற்கு ?

ஆகக்கூடி, பெற்றோர்களின் தலையைத் தடவும் விஷயத்தில் பாடப் புத்தகங்களைச் சர்க்கார் வெளியிட்டாலும் ஒன்றுதான், பிரசுரகர்த்தர்கள் வெளியிட்டாலும் ஒன்று தான்! சர்க்காரே இவ்வளவு அதிக விலை வைத்து விற்பதால் கம்பெனிக்காரர்கள் அதிக விலை வைக்கச் சௌகரியமாய்ப் போய் விடுகிறது.

பாடப் புத்தகங்களின் தரத்தைப்பற்றியோ வெனில் இப்போதைக்குச் சர்க்கார் பாடப் புத்தகங்களை விடத் தனிப்பட்ட கம்பெனிகளின் வெளியீடுகள் நன்றாயிருக்கின்றன. ஏதோ சில பாடங்களையும் குறிப்புரைகளையுமாவது சேர்த்து வைக்கிறார்கள்.

ஆனால், இங்கிலாந்தில் சிறுவர்—சிறுமிகளுக்காக வெளியிடப்படும் பாடப் புத்தகங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், நம் ஊர்ப் புத்தகங்களைக் குப்பைத்தொட்டியில் போடலாம் என்று தோன்றும்.

இரண்டாவது, மூன்றாவது, நாலாவது பாரங்களுக்கு லண்டன் பிளாக்கி அன்டு ஸன்ஸ் ஆங்கிலப் பாடப் புத்தகங்கள் வெளியிடுகிறார்கள். அவற்றில் சில கான்வென்ட் பள்ளிக்கூடங்களின் உபயோகத்துக்காக இந்தியாவுக்கு வருகின்றன. பாடப் புத்தகத்தின் அட்டையும் அட்டைப் படமுமே கண்ணைக் கவரும். உள்ளே பிரித்துப் பார்த்தால் அப்பா! எத்தனை வர்ணப் படங்கள்! எவ்வளவு விதவிதமான சித்திர விசித்திரங்கள்! எப்பேர்ப்பட்ட பால்போன்ற வழு வழுப்பான காகிதம்!

காலிகோ பைண்டு செய்த அத்தகைய பாடப் புத்தகத்தை இங்கிலாந்திலிருந்து இந்தியாவில் கொண்டுவந்து ஒன்றேகால் ரூபாய்க்கு விற்கிறார்கள்.

நம் ஊர்ப் பாடப் புத்தகங்கள் மட்டும் எதற்காக இப்படி அழுது வடியவேண்டும்? அழுது வடிகிற புத்த

கங்களுக்கு விலை ஏன் இவ்வளவு அதிகம் வைக்க வேண்டும் ?

*            *            *

பிரசுரகர்த்தர்களின் மீதோ உபாத்தியாயர்களின் மீதோ உள்ள கோபத்தினால் மேலே கண்ட விஷயங்களை நான் எழுதியிருக்கலாம். "ஜூன் பிறந்துவிட்டதே! பிள்ளைகள் புத்தகம் வாங்கப் பணம் கேட்பார்களே ?" என்ற ஆத்திரத்தினாலும் எழுதியிருக்கலாம். என்னை யறியாமலேயே மேற்கூறிய குற்றங்களுக்கு நான் ஒரு வேளை உள்ளாகியிருக்கக்கூடும்.

நல்லது ; அசூயைக்கும் கோபத்துக்கும் சிறிதும் தம் தூய உள்ளத்தில் இடங்கொடாதவரும், தம் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்துக்கே அனுப்பாதவருமான ஒரு உத்தம புருஷர் நம் பள்ளிக்கூட பாடப் புத்தகங்களைப் பற்றி என்ன சொல்கிறார் என்பதைக் கொஞ்சம் கேளுங்கள் :—

"கல்வி கற்றுக்கொடுப்பதற்குப் பாடப் புத்தகங்கள் ஒரு சாதனமாகக் கருதப்பட்டால், ஆசிரியருடைய ஜீவ சக்தி நிறைந்த வார்த்தைக்கு மதிப்பே இல்லாமல் போய் விடும். ஒரு ஆசிரியர் பாடப் புத்தகங்களை வைத்துக் கொண்டு அதிலிருந்து பாடங் கற்றுக் கொடுத்தால், அவர் சொந்தமாகத் தம்முடைய மாணவர்களுக்கு எதையும் கற்றுக்கொடுக்க முடியாது. அந்த ஆசிரியரே பாடப் புத்தகங்களுக்கு அடிமையாகி விடுகிறார். ஆகையால், பாடப் புத்தகங்கள் எவ்வளக் கெவ்வளவு குறைவாக இருக்கின்றனவோ, அவ்வளவுக் கவ்வளவு ஆசிரியர்களுக்கும் நல்லது ; மாணக்கர்களுக்கும் நல்லது."

"இக்காலத்தில் பாடப் புத்தகங்கள் ஒரு வர்த்தக சரக்காகி விட்டன. பாடப் புத்தகங்களை எழுதி வெளி

யிடுவதின் மூலம் பணம் சம்பாதிக்கும் ஆசிரியர்களும் பிரசுரகர்த்தர்களும் மேற்படி பாடபுத்தகங்களை அடிக்கடி மாற்றுவதை விரும்புவார்கள். பெரும்பான்மையான பாடப் புத்தகங்களைப் பள்ளிக்கூட ஆசிரியர்களும் பரிசோதக அதிகாரிகளுமே எழுதிவிடுகிறார்கள். தங்கள் புத்தகங்கள் விற்பனையாக வேண்டும் என்பதில் அவர் களுக்கு அக்கறை இருப்பது இயல்புதானே ! அது மாத்திர மல்ல ; மேற்படி புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கும் 'செலக்ஷன் போர்டிலும்' அத்தகையவர்களே இருக் கிறார்கள்..............ஒவ்வொரு வருஷமும் புதுப்புதுப் புத்தகங்களை வாங்கிக் கொடுக்கப் பணம் இல்லாமல் பெற்றோர் கஷ்டப்படுகிறார்கள். சிறுவர்களும் சிறுமி களும் சுமக்க முடியாத அளவு புத்தகங்களைத் தூக்கிக் கொண்டு பள்ளிகூடங்களுக்குப் போவதைப் பார்க்க பரிதாபமாக இருக்கிறது. இப்போதுள்ள பாடப் புத்தகத் திட்டத்தை நாம் நன்றாகப் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். பாடப் புத்தகங்களை ஒரு வர்த்தகப் பொருளாகக் கருதுவதை அடியோடு ஒழிக்க வேண்டும். இவ்விஷயத்தில் மாணவர்களுடைய நன்மை ஒன்றையே பிரதானமாகக் கவனிக்க வேண்டும். அப்படிப் பார்க்கும் போது, தற்போதுள்ள பாடப் புத்தகங்களில் அநேகமாக முக்கால் பகுதியைக் குப்பையில் போட வேண்டித்தான் வரும்."

மேற்கண்டவாறு எழுதியுள்ள உத்தம புருஷர் யார் என்று நினைக்கிறீர்களா ? **காந்தி மகாத்மாதான் !** வேறு யார் இவ்வளவு அதிகார பூர்வமாக எழுத முடியும் ?

# கல்வி நோய்க்கு ஒரு சஞ்சீவி

நம் தேசத்திலுள்ள கல்விமுறை நோய் பிடித்துப் போயிருக்கிறது. இதை எல்லாரும் ஒப்புக்கொள்கிறார்கள். அந்த நோயைத் தீர்க்க வேண்டும் என்பதையும் அனைவரும் அங்கீகரிக்கிறார்கள். இந்த இரண்டு விஷயங்களிலும் அநேகமாக எல்லாருக்கும் ஏகோபித்த அபிப்பிராயம் இருக்கிறது. அதாவது (1) நமது கல்விமுறை நோய் பிடித்த கல்விமுறை; (2) அந்த நோயைத் தீர்த்து நமது கல்வி முறையை ஆரோக்கியப் படுத்த வேண்டும்.

ஆனால், நோய் என்ன நோய் என்பதிலும் அதைக் குணப்படுத்தும் வழி என்ன என்பதிலும் அளவில்லாத அபிப்பிராய பேதம் இருக்கிறது. நோய்க்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு பெயர் சொல்லுகிறார்கள். குணப்படுத்துவதற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு வைத்திய முறையைச் சொல்லுகிறார்கள். கணக்கில்லாத மருந்து வகைகளையும் சிபார்சு செய்கிறார்கள்.

நாமும் ஒரு வைத்திய முறையைக் குறிப்பிடுகிறோம். நாமும் ஒரு மருந்தைச் சொல்கிறோம். நாம் சொல்லும் முறை இயற்கை வைத்திய முறை. நாம் சொல்லும்

மருந்து இயற்கை மருந்து. நமது கல்வி முறையிலுள்ள சகல நோய்களையும் தீர்க்கக்கூடிய மருந்து. ஆகையால் அதைச் ‘ சஞ்சீவி ’ என்று அழைக்கிறோம்.

* * *

நோய் இத்தகையது என்பதை முதலில் கவனித்துக் கொள்ளலாம்.

நமது கல்விமுறை அன்னியர்களாகிய ஆங்கிலேயர்களால் இந்த நாட்டில் புகுத்தப்பட்ட கல்விமுறை.

அன்னிய அரசாங்கத்தின் கீழ் குமாஸ்தாக்களையும், வக்கீல்களையும் மற்ற உத்தியோகஸ்தர்களையும் சிருஷ்டிப்பதற்காக ஏற்பட்ட கல்விமுறை.

நமது தேச நிலைமைக்கும் பண்பாட்டுக்கும் பொருந்தாதக் கல்விமுறை.

சிறுவர்—சிறுமிகளின் மூளைக்கு அதிகமாக வேலை கொடுத்து மூளை வற்றும்படி செய்யும் கல்விமுறை.

தேக நலத்தைக் கெடுத்து உடலை மெலியச் செய்யும் கல்விமுறை.

பேனாப் பிடித்து எழுதுவதைத் தவிர மற்றப்படி கை விரல்களுக்கு வேலையில்லாமலும் கைத்திறமை வளராமலும் அடித்த கல்விமுறை.

சமூகத்தில் ஒருசிறு பகுதியாரை அதிகம் படித்தவர்களாயும் மற்றப் பெரும்பாலான ஜனங்களை எழுதப் படிக்கத் தெரியாதவர்களாயும் ஆக்கிவிட்ட கல்விமுறை.

நமது நாட்டின் பொருளாதார நிலைமைக்குச் சற்றும் பொருத்தமில்லாதபடி ஏராளமான பணச்செலவு செய்ய வேண்டியிருக்கும் கல்விமுறை.

அத்தகைய எல்லா வியாதிகளையும் தீர்க்கக்கூடிய ஒரே சஞ்சீவி மருந்து உண்டா என்பது கேள்வி.

"உண்டு" என்பது நமது பதில்.

*    *    *

நமது கல்வி முறையின் நோயைப் பற்றி முன்னே யெல்லாம் பொதுஜனத் தலைவர்களும் மக்களால் மதிக்கப் பட்ட அறிஞர்களும் பேசுவது வழக்கம். சுவாமி விவேகானந்தர் முதல் காந்தி மகான் வரையில் அதைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள், எழுதி யிருக்கிறார்கள். பல யோசனைகளும் சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால், முற்காலத்திலெல்லாம் அரசாங்க பீடங்களில் இருந்தவர்களும் அதிகாரவர்க்கத்தினரும் நம் கல்வி முறையின் சீர்கேட்டைப்பற்றிப் பேசுவதில்லை; சீர் திருத்தும் அவசியத்தைப் பற்றியும் பேசுவதில்லை.

சுதந்திர இந்தியாவில் கல்வி மந்திரிகள் கல்விமுறையை பற்றிப் பேசுகிறார்கள். பேசவேண்டியதுதான். ஆசிரியர் கள், உபாத்தியாயர்கள் அதைக் குறித்துப் பேசுகிறார்கள்; பேசிவிட்டுப் போகட்டும்.

ஆனால், கவர்மெண்ட் காரியதரிசிகளும், கல்வி இலாகா அதிகாரிகளும் கல்விச் சீர்த்திருத்தம் பற்றிப் பேசத்தொடங்கும் போது நம்முடைய கல்விமுறைக்கு இன்னும் என்னகேடு நேரப்போகிறதோ என்று நாம் பயப்பட வேண்டியதாயிருக்கிறது.

சென்னை அரசாங்கத்தின் கல்வி இலாகாக் காரியதரிசி ஸ்ரீ லோபோ பிரபு என்பவர் அகில இந்திய ரேடியோவில் சென்ற 16-ந்தேதி இரவு ஒரு பிரசங்கம் செய்தார். அதில் சென்னை சர்க்கார் கல்வி அபிவிருத்தி விஷயமாகவும் கல்வி

முறையைச் சீர்திருத்தும் விஷயமாகவும் என்னென்ன திட்டங்கள் வகுத்திருக்கிறார்கள் என்று எடுத்துக் கூறினார். அவர் கூறியதிலிருந்து ஒரே ஒரு விஷயம் மிகத் தெளிவாகத் தெரியவந்தது. அதாவது கல்விப் பிரச்னை ரொம்ப ரொம்ப ரொம்பக் கஷ்டமானது என்று. "ஐயோ! மெத்தக் கடினம்! ஐயையோ! மெத்தக் கடினம்!" என்று லோபோ பிரபு 'லபோ லபோ' என்று அலறினார்.

"கல்விப் பிரச்சனை சாமான்யமான பிரச்சனை அல்ல. மிக மிகப்பெரிய பிரச்சனை. முப்பத்தெட்டு லட்சம் குழந்தைகளைப் படிப்பிக்க வேண்டும். 185 லட்சம் பெரியவர்களைப் படிப்பிக்க வேண்டும். இந்தக் காரியத்திற்கு வேண்டியிருக்கும் பணத்தை நினைத்தால் கதி கலங்குகிறது. அதைச் சமாளிக்கலா மென்றால் இன்னும் எத்தனை எத்தனையோ கஷ்டங்கள் இருக்கின்றன. உபாத்தியாயர்களின் சைன்யம் ஒன்று வேண்டும். பயிற்சி பெற்ற அத்தனை உபாத்தியாயர்களுக்கு எங்கே போவது? கட்டிடங்களின் பிரச்சனையை நினைத்தாலும் உள்ளம் பிரமிக்கிறது. தற்காலத்தில் அவ்வளவு கட்டிட சாமான்கள் எங்கே கிடைக்கும்? கட்டிடத் தொழிலாளிகள்தான் கிடைப்பார்களா? எல்லாவற்றிலும் மகத்தான பெருங் கஷ்டம் பெற்றோர்களும் குழந்தைகளும் கல்வி விஷயத்தில் கொண்டிருக்கும் மனப் பான்மைதான். பெற்றோர்கள் கல்வியின் அவசியத்தை உணர்வதில்லை. தாங்கள் செய்யும் தொழில்களிலேயே தங்களுடைய குழந்தைகளையும் ஈடுபடுத்தி விடுகிறார்கள்! குழந்தைகளுக்கோ படிப்பில் ருசி இருப்பதில்லை. ஆகையால் (நாங்கள்) எவ்வளவு கஷ்டப்பட்டு முயன்றாலும் படிக்க ஆரம்பிக்கும் குழந்தைகளில் 100-க்கு 29 பேர்தான் ஐந்தாவது வகுப்பை எட்டிப்பார்க்கிறார்கள்!"

இதைப் படித்ததும் நமக்கு என்ன தோன்றியது என்பதைச் சொல்லி விடுகிறோம். கல்வி இலாகாவின் தலைமை அதிஷ்டான பீடத்திலுள்ள காரியதரிசியிலிருந்து கல்வி இலாகாவின் டைரக்டர், உதவி டைரக்டர்கள், மற்றும் பற்பல உத்தியோகஸ்தர்கள், அடிப்படையிலுள்ள குமஸ்தாக்கள்—பியூன்கள் வரையில் வேறு இலாக்காக்களுக்கு மாற்றித் தொலைத்துத் தலையை முழுகி விட்டு, மேற்படி உத்தியோகங்களில் எல்லாம் புதிய ஆட்களைப் போடவேண்டும் என்பதுதான். ஐயோ, பாவம்! இவ்வளவு மகத்தான பிரம்மாண்டமான மிக மிகக் கஷ்டமான பிரச்சனைகளின் மேல் மோதிக்கொண்டு அவர்கள் மட்டும் ஏன் கதி கலங்கவேண்டும்? மற்ற இலாகா உத்தியோகஸ்தர்கள் ஒரு கஷ்டமான பிரச்சனையும் தீர்த்து வைப்பதற்கு இல்லாமல் எதற்காக 'கயால்' பாடிக்கொண்டு குஷாலாகத் திரியவேண்டும்?

கல்வி இலாகா உத்தியோகஸ்தர்களுக்கு அத்தகைய உதவியைச் செய்யும் அதிகாரம் நம்மிடம் இல்லை. ஆகையால் ஸ்ரீலோபோ பிரபு குறிப்பிட்டிருக்கும் கஷ்டங்களைப் பற்றிஆராயவேண்டியிருக்கிறது. அப்படி ஆராயும்போது அந்தக் கஷ்டங்களில் பல அவராகச் சிருஷ்டித்துக் கொண்ட கஷ்டங்கள் என்று ஏற்படுகிறது.

* * *

பெற்றோர்களுக்குத் தங்கள் குழந்தைகள் படிப்பதில் சிரத்தை கிடையாது என்று ஸ்ரீ லோபோ பிரபு குற்றம் சாட்டுகிறார். அழகாயிருக்கிறதல்லவா? பிள்ளைகளைப் படிக்க வைக்க வசதி இல்லையே என்று கண்ணீர்விடும் பெற்றோர்கள் எத்தனையோ ஆயிரம், பதினாயிரம், லட்சம் பேர் நாட்டில் இருக்கிறார்கள்? பெற்றோர்களுக்குக் குழந்தைகள் படிப்பதில் சிரத்தையில்லையாம்! நல்ல குற்றச்சாட்டு!

அப்புறம், பெற்றோர்கள் தங்களுடைய தொழில்களில் தங்கள் பிள்ளைகளும் ஈடுபட வேண்டும் என்று விரும்புகிறார்களாம்! வேறு என்ன விருப்பமாம்? சென்னை மாகாணத்தில் எழுபது லட்சம் குழந்தைகள் படிக்கத்தகுந்த வயதில் இருக்கிறார்கள். இவ்வளவு குழந்தைகளும் லோபோ பிரபுவைப்போல் சர்க்கார் காரிய தரிசிகளாகி மாதம் இரண்டாயிரம்—மூவாயிரம் சம்பளம் வாங்க முடியுமா? அந்த எழுபது லட்சம் குழந்தைகளும் படித்த பிறகு குமாஸ்தா வேலை தருவதாக வாவது ஸ்ரீ லோபோ பிரபு உத்திரவாதம் கொடுக்க முடியுமா? அவ்வளவு பேருக்கும் டபேதார் வேலை, பியூன் வேலை கொடுக்கிறதாக வேனும் உறுதி சொல்ல முடியுமா? அவ்வளவு பேரும் பெற்றோர்களின் தொழிலைச் செய்யாமல் வேறு என்ன செய்ய வேண்டும்? வேறு என்ன செய்ய முடியும்?

உண்மையில், நம்முடைய, கல்வி முறையில் உள்ள மகத்தான குறை என்ன தெரியுமா? குழந்தைகள் கொஞ்சம் படித்ததும் பெற்றோர்களின் தொழிலை மேற்கொள்ள விரும்பாமல் சர்க்கார் உத்தியோகம் பார்க்க விரும்புவது தான்; நமது நாட்டில் நூற்றுக்கு எழுபத்தைந்து பேர் விவசாயிகள். இவ்வளவு பேருடைய குழந்தைகளும் படித்து விட்டு விவசாயத் தொழிலை மேற்கொள்ளாவிட்டால் அவர்கள் வேறு என்ன தொழில் செய்ய முடியும்? எல்லாரும் வேறு வேலைகளுக்குப் போய் விட்டால் பயிர்த்தொழில்தான் என்ன கதி அடைகிறது.

ஏதோ கடவுள் அருளால், தேசம் செய்த புண்ணியத்தால், நம்முடைய நாட்டு மக்களில் பலர் இன்னமும் தங்களுடைய தொழிலைத் தங்கள் குழந்தைகளும் செய்ய

வேண்டும் என்று நினைக்கிறார்கள். இதற்காக அவர்களைப் பாராட்டவேண்டும்; போற்ற வேண்டும்; கோயிலில் வைத்துக் கும்பிடவேண்டும்!

அதற்குப் பதிலாக அவர்களைக் குறை கூறுகிறார் நமது லோபோ பிரபு!

அப்புறம் பிள்ளைகளின் பேரிலும் புகார் சொல்லு கிறார். அவர்களுக்குப் படிப்பில் ஊக்கம் இருப்பதில்லை யாம்; ஏன் இருப்பதில்லை? பள்ளிக்கூடத்துக்கு ஒரு தடவை போனவர்கள் எதற்காகப் பிறகு பேசாமல் தங்கி விடுகிறார்கள்? ஏன் ஐந்தாவது வகுப்புக்கு முன்னால் நின்று விடுகிறார்கள்?

'ருசி கண்ட பூனை உரியை உரியைத் தாவும்' என்பது பழமொழி. பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்குப் படிப்பில் ருசியை உண்டுபண்ணினால் அவர்கள் ஏன் நிற்கிறார்கள்? பள்ளிக்கூடங்களில் படிப்பில் வெறுப்பை உண்டுபண்ணுவதுதானே அவர்கள் நிற்பதற்குக் காரண மாக வேண்டும்?

பணச் செலவை நினைத்து லோபோ பிரபு பிரமிப் படைவது நியாயந்தான்! இப்போது கல்விக்காகச் செலவு செய்யும் பதினொரு கோடி ரூபாயையே சென்னை சர்க்கார் தாங்க முடியவில்லை. மேலும் பணத்துக்கு எங்கே போவது? நாற்பத்தைந்து கோடி ரூபாய்க்குத் திட்டம் போடுவதில் என்ன பயன்?

பதினைந்து வருஷ காலத்தில் முப்பத்தெட்டு லட்சம் குழந்தைகளை ஆதாரக் கல்வி முறைப்படி படிக்கவைப்ப தற்குத் திட்டமாம்! இதற்கு 45 கோடி ரூபாய்செலவாம்! இந்தப் பதினைந்து வருஷத்துக்குள் எவ்வளவு புதிய குழந் தைகள் பிறந்து விடுவார்கள்! அவர்களையெல்லாம்

எப்படிப் படிக்க வைப்பது ? அதற்குப் பணத்துக்கு எங்கே போவது ?

அப்புறம், கட்டிடப் பிரச்னை ! கல்வி வளர்ச்சியைத் தடுத்துக்கொண்டு கட்டிடப் பிரச்னை மலைபோல் நிற்கிறது என்று ஸ்ரீ லோபோ பிரபு கூறுகிருர்! அந்த மலையைப் பெயர்ப்பதற்கு வழி ஒன்றும் காணவில்லையே என்று தவியாய்த் தவிக்கிருர் ! ஐயோ ! பாவம் !

கல்வி சம்பந்தமான இத்தகைய எல்லாப் பிரச்சனை களையும் தீர்த்து வைப்பதற்கு ஒரு வழி இருக்கிறது.

லோபோ பிரபு குறிப்பிட்ட தடைகள், குறிப்பிடாத தடைகள் எல்லாவற்றையும் போக்க வழி இருக்கிறது.

பணச் செலவு அதிகம் செய்யாமல் சென்னை மாகா ணத்திலுள்ள எல்லாக் குழந்தைகளையும் உடனே படிக்க வைப்பதற்குச் சாதனம் இருக்கிறது.

நமது கல்வி முறையைப் பிடித்துள்ள பெரு நோயைத் தொலைக்க மருந்து இருக்கிறது.

அதை நாம் சொன்னல் கேட்கமாட்டார்கள். அமெரிக்காவிலிருந்து வந்த கல்வி நிபுணர் சொன்னல் ஒரு வேளை கேட்கலாம் அல்லா ?

இந்திய சர்க்கார் கொஞ்ச காலத்துக்கு முன்பு சர்வ கலாசாலை விசாரணைக் கமிஷன் ஒன்று நியமித்தார்கள். அந்தக் கமிஷனில் இந்தியா தேசத்துக் கல்வி நிபுணர்களுடன் மேனுடுகளில் பிரசித்தி பெற்ற கல்வி நிபுணர்கள் சிலரையும் சேர்த்து நியமித்தார்கள். அவர்களில் டாக்டர் ஏ. இ. மார்க்சன் ஒருவர். அமெரிக்காவில் முன்னேற்றக் கல்வி முறையில் பல சோதனைகள் நடத்தி வெற்றி அடைந்தவர். வெறும் ஏட்டுக் கல்வியாளர் அல்ல,

நீர்ப்பாசன என்ஜினியரிங் நிபுணர். டென்னஸீ பள்ளத் தாக்கு நீர்ப்பாசனத் திட்டம் உலகத்திலேயே மிகப் பெரிது. அந்த மாபெருந் திட்டத்தை நடத்தி வைத்த சங்கத்தின் தலைவர் டாக்டர் ஏ. இ. மார்கசன்.

அத்தகையவர் இந்தியாவுக்கு வந்திருந்தார். யூனிவர் ஸிடி கமிஷன் அங்கத்தினர் ஹோதாவில் தேசம் முழுவதும் சுற்றினார். இந்தியாவின் கல்வி முறையை நன்றாக ஆராய்ந்தார். அந்த ஆராய்ச்சியின் முடிவுகளையும் அமெரிக்காவில் தமது அனுபவங்களையும் ஆதாரமாகக் கொண்டு ஒரு கட்டுரை எழுதினார். 1949 ஏப்ரல் 28உ தினப்பத்திரிகைகளில் அது வெளியாகியிருக்கிறது. அந்தக் கட்டுரையை மிஸ்டர் லோபோ பிரபுவும் மற்றும் கல்வி இலாகா அதிகாரிகளும் நூறு தடவை படிக்கவேண்டும். நூறு தடவை படித்தாலும் அவர்களுக்கு ஒரு வேளை விளங்காது. புதிதாகக் கல்வி மந்திரியாகியிருக்கும் கனம் மாதவ மேனன் ஒரு தடவை படித்தால்போதும் என்று கருதுகிறோம். மேற்படி கட்டுரையில் மிஸ்டர் மார்க்சன் வாழ்க்கையுடன் ஒட்டாத வெறும் புத்தகப் படிப்பு எவ்வளவு தீமை பயப்பது என்பதை விஸ்தாரமாக விளக்கியிருக்கிறார். கட்டுரையின் கடைசியில் டாக்டர் மார்க்சன் இந்தியாவின் கிராமக் கல்விக்காகக் கொடுத் திருக்கும் திட்டம் பின் வருமாறு:—

"ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள குழந்தைகளை இரண்டு பகுதியாகப் பிரிக்கவேண்டும். ஒரு பகுதிக் குழந்தைகள் வாரத்துக்கு மூன்று நாளும் மற்றொரு பகுதிக் குழந்தைகள் வாரத்தில் மற்ற மூன்று நாளும் பள்ளிக் கூடத்துக்குப் போய்ப் படிக்கவேண்டும்.

பள்ளிக்கூடம் போகாத நாட்களில் குழந்தைகள் வீட்டில் இருந்து பெற்றோர்களின் தொழில்களில் உதவி

செய்யும்படியோ அல்லது சும்மா திரிந்து விளையாடி வளரும்படியோ விட்டுவிட வேண்டும்.

நீண்டகால வகுப்புகளில் குழந்தைகள் படிப்பதைக் காட்டிலும் குறைந்த கால வகுப்புகளில் குழந்தைகள் அதிகம் கற்றுக் கொள்கிறார்கள் என்பது திட்டமாக நிரூபணமாகியிருக்கிறது. கற்றுக்கொண்ட விஷயமானது குழந்தைகள் வேறு காரியங்களைக் கவனிக்கும்போதுதான் உள் மனதில் நன்கு ஜீரணிக்கப்படுகிறது.

வாரத்துக்கு மூன்று நாள்மட்டும் பிள்ளைகள் பள்ளிக் கூடம் போகும் ஏற்பாட்டினால் இந்தியக் குழந்தைகளின் கல்வி சம்பந்தமான பல பிரச்சனைகள் தீர்ந்துவிடும்.

வாரத்துக்கு இருபது மணி முதல் முப்பது மணி வரையில் வளரும் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்தில் இருக்கச் செய்வது ஒருவிதச் சிறைவாசமேயாகும். பெரியவர்களுக்குச் சிறைவாசம் எவ்வளவு துன்பம் தருகிறதோ அவ்வளவு குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடத்து சிறைவாசமும் துன்பம் தருகிறது. பெரியவர்கள் குழந்தையின் இயல்பை மறந்து விடுகிறார்கள். குழந்தைகளுக்கு வீட்டில் இருக்கவும், வீட்டு வேலை செய்யவும், அக்கம் பக்கத்தாரோடு பழகவும், விளையாடவும், சோம்பேறித் தனமாகயிருக்கவும்கூட அவகாசம் கொடுக்க வேண்டும்.

வாரத்துக்கு மூன்று நாள் என்னும் ஏற்பாட்டினால் பள்ளிக்கூடத்துச் சிறைவாசம் குறையும். இந்தச் சிறை வாசம் குழந்தைகளுக்கு மிக்கத் தீமையை உண்டு பண்ணுகிறது.

குடும்பத்தாருடனும் சமூகத்தாருடனும் குழந்தை களுக்கு அதிகப் பழக்கம் இருக்கும். பள்ளிக்கூடத்து ஏட்டுப் படிப்பைத் தவிர வாழ்க்கைக்கு அவசியமான கல்வியைக் கற்றுக் கொள்வார்கள்.

முக்கியமாக, இப்போது செலவு செய்யும் அதே பணத்தைக் கொண்டு இப்போது படிக்கின்ற குழந்தைகளைப் போல் இரண்டத்தனை குழந்தைகளைப் படிக்கச் செய்யலாம்.''

டாக்டர் மார்க்சன் குறிப்பிட்டிருக்கும் மருந்து ஒன்றுதான் இந்தியாவின் கல்வி முறையைப் பீடித்திருக்கும் நோயை தீர்க்கும் சஞ்சீவி மருந்து. இதில் சிறிதும் சந்தேகம் இல்லை.

" வாரத்துக்கு மூன்று நாள் பள்ளிக்கூடம் " என்பது டாக்டர் மார்க்சனின் மருந்து. இது கொஞ்சம் கசப்பான மருந்து. ஆகையால் கொஞ்சம் அதில் சர்க்கரை சேர்த்துக் கொள்ளலாம்.

" வாரத்துக்கு ஆறு நாள் பள்ளிக்கூடம். தினத்துக்கு ஒருவேளை—இரண்டரை மணி நேரம் !'' என்று மாற்றிக் கொள்வோம்.

அப்போது வாரத்துக்குப் பதினைந்து மணி நேரம் பள்ளிக்கூடம் ஆகிறது. டாக்டர் மார்க்சனின் நோக்கம் நிறைவேறுகிறது. அதாவது பள்ளிக்கூடத்துச் சிறைவாச நேரம் குறைகிறது.

இந்த ஏற்பாட்டின் மூலம் நமது கல்வி முறையின் குறைகளையெல்லாம்போக்கிக் கொள்ளலாம். இது எப்படி என்பதைப் பார்ப்போம்.

* * *

இப்போது சென்னை மாகாணத்தில் பள்ளிக்கூடம் போகும் வயதுள்ள குழந்தைகள் 70 லட்சம் பேர் இருக்கிறார்கள். இவர்களில் 35 லட்சம் பேர் இப்போது பள்ளிக்கூடம் போகிறார்கள். பாக்கி 35 லட்சம் பேருக்குப் பள்ளிக்கூடம் வேண்டும்.

தற்சமயம் சென்னை மாகாணத்தின் 50 கோடி ரூபாய் வருமானத்தில் 11 கோடி கல்வி இலாகாவுக்குப் போகிறது. மேலும் பணம் செலவு செய்வது சமீபத்தில் இயலாத காரியம்.

ஆனால், தினம் ஒருவேளை—இரண்டரை மணி நேரம் பள்ளிக்கூடம் என்று ஏற்படுத்துவதால் இப்போதுள்ள ஆரம்பப் பள்ளிக் கூடங்களையும் ஆசிரியர்களையும் கொண்டே இன்னும் 35 லட்சம் குழந்தைகளையும் படிப்பிக்கலாம்.

ஒரு ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் இப்போது ஐந்து உபாத்தியாயர்களின் கீழ் நூறு பிள்ளைகள் படிப்பதாக வைத்துக்கொள்வோம்.

இந்த நூறு பிள்ளைகளும் இப்போது காலை மாலை இரண்டு வேளையும் பள்ளிக்கூடம் வருகிறார்கள். அவர்களைக் குறைந்தது ஐந்து மணிநேரம் ஆசிரியர்கள் கஷ்டப்படுத்துகிறார்கள்.

குழந்தைகளின் இளம் மூளையின் ஆற்றலுக்கு மேலே வேலை கொடுக்கிறார்கள். குழந்தைகளின் உடல் நலமும் அறிவு நலமும் கெடுகின்றன.

அந்த நூறு குழந்தைகளுக்கும் காலை எட்டரை மணியிலிருந்து பதினோரு மணிவரையில் வகுப்பு நடத்துங்கள்; பிறகு அவர்களை வீட்டுக்கு அனுப்பி விடுங்கள்.

பிள்ளைகள் மத்தியானம் அவரவர்களுடைய வீட்டுக்குப் போவார்கள். வீட்டில் சாப்பிடுவார்கள். (பள்ளிக்கூடத்தில் குழந்தைகளுக்குச் சோறு போடுவது என்ற பெயரால் சோற்றுக் கண்டிராக்டர்கள் பொதுப்பணத்தை கொள்ளையடிப்பதும் நின்று தொலையும்.)

மத்தியானத்துக்கு மேலே அவர்களுடைய பெற்றோர் களின் தொழிலைக் குழந்தைகள் பயிலுவார்கள்.

விவசாயிகளின் குழந்தைகள் விவசாயத்தில் உதவி செய்வார்கள். தச்சர்களின் குழந்தைகள் தச்சுத் தொழில் கற்றுக் கொள்வார்கள்.

இது பிள்ளைகளுக்கும் நல்லது. பெற்றோர்களுக்கும் நல்லது. குழந்தைகள் கையை உபயோகிக்கும் ஆற்றலை மறக்கமாட்டார்கள். வேலை செய்வதை அகௌரவம் என்று கருதமாட்டார்கள். படித்த பிறகு வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு ஆளாகமாட்டார்கள். பெற்றோர் களுக்கும் தங்கள் வேலையில் பிள்ளைகளின் உதவி பாதி நாளைக்குக் கிடைத்து விடுகிறது. ஆகையால் குழந்தை களைப் பள்ளிக்கூடத்துக்குப் போக வேண்டாம் என்று பெற்றோர்கள் தடுக்கமாட்டார்கள்.

தங்கள் பிள்ளைகள் வேலை செய்ய விரும்பாத பணக்கார முட்டாள் தகப்பனார் சிலர் இருக்கலாம். அப்படிப்பட்டவர்களின் குழந்தைகள் வீட்டிலேயே மேலும் புத்தகங்களைக் கட்டிக் கொண்டு அழட்டும்! அதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. சர்க்காரும் கவலைப் பட்டுச் சாத்தியம் இல்லை.

பள்ளிக்கூடங்கள் மத்தியானம் காலியாகின்றன அல்லவா? ஆசிரியர்களுக்கும் வேலையில்லை அல்லவா? அதே பள்ளிக்கூடத்தில் அதே ஆசிரியர்களைக் கொண்டு இன்னொரு நூறு பிள்ளைகளுக்கு மத்தியானம் இரண்டரை மணியிலிருந்து ஐந்து மணிவரையில் பள்ளிக்கூடம் நடத்துங்கள்.

ஐந்து வயதுமுதல் பத்து வயது வரைஉள்ள குழந்தை களுக்குத் தினம் இரண்டரை மணிப் பள்ளிக்கூடம் யதேஷ்டம். அதற்கு மேலே பள்ளிக்கூடத்தில் அடைத்து

வைப்பது சிறைவாசம்; அதற்கு மேலே புத்தகக் கல்வி போதிப்பது கொடூரம். அது குழந்தைகளின் உடலையும் மூளையையும் ஹிம்சைப்படுத்துவதே யாகும்.

இத்தகைய குழந்தை ஹிம்சை இத்தனை நாளும் பொதுமக்களின் செலவில் நடந்து வந்திருக்கிறது.

இப்போதாவது அந்த மடமையையும் கொடுமையையும் நிறுத்தலாம். கல்வி முன்னேற்றத்துக்காகத் தமது வாழ்க்கையை அர்ப்பணம் செய்த நிபுணர் டாக்டர் மார்க்சன் சொன்ன பின்னராவது நிறுத்தலாம்.

முப்பத்தைந்து லட்சம் குழந்தைகள் படிக்கும் இடத்தில் அதே செலவில் எழுபது லட்சம் குழந்தைகளைப் படிப்பிக்கலாம். குழந்தைகளின் வருங்கால நலத்தையும் காப்பாற்லாம்.

இந்த முறையில் ஆரம்பக் கல்வியை மாற்றினால் 100க்கு 71 குழந்தைகள் ஐந்தாவது வகுப்பை எட்டிப் பாராமல் நின்றுவிடமாட்டார்கள்; பள்ளியில் படித்ததை மறக்கமாட்டார்கள். அவர்களுக்காகச் செலவு செய்த பொதுப் பணமும் வீண் போனதாகாது.

*　　　*　　　*

ஆரம்பக் கல்விமுறைக்கு டாக்டர் மார்க்சன் குறிப்பிட்டிருக்கும் மருந்தையே 'உயர்தரக் கல்வி'க்கும் நாம் சிபார்சு செய்கிறோம்.

இப்போது 'உயர்தரக் கல்வி' என்று சொல்லப் படுவது உண்மையில் உயர்தரமான கல்வி அல்ல.

ஹைஸ்கூல்களில் முதல் பாரத்திலிருந்து ஆறுவது பாரம் வரையில் நம்முடைய பிள்ளைகளுக்கு இப்போது சொல்லிக்கொடுக்கும் படிப்பில் பாதிக்குமேலே உபயோக

மற்றது ; சிறுவர் சிறுமிகளின் மூளையை அநாவசியமாகச் சிரமப்படுத்துவது ; ஆகையினால் தீமை பயப்பது.

முதல் பாரத்திலிருந்து ஆறுவது பாரம் வரையில் இப்போது வைத்திருக்கும் பாடத் திட்டங்களையும் பாடப் புத்தகங்களையும் பரீட்சைத் தாள்களையும் வாங்கிக் கொஞ்சம் சிரத்தையுடன் படித்துப் பார்க்கும் எவருக்கும் இது விளங்கும். (கல்வி இலாகா அதிகாரிகளையும் உபாத்தியாயர்களையும் நீக்கி மற்றவர்களைச் சொல்லுகிறோம்)

நம்மிலே பலர் நம் குழந்தைகளின் பாட புத்தகங்களைப் புரட்டிப் பார்ப்பதில்லை, பரீட்சைத் தாள்களையும் வாங்கிப் பார்ப்பதில்லை. அப்படிப் பார்த்தால் நம்முடைய ஹைஸ்கூல் கல்வியில் வாழ்க்கைக்குப் பயனற்ற—அறிவு வளர்ச்சிக்கு அவசியமில்லாத— குப்பை கூளங்கள் எவ்வளவு நிறைந்திருக்கின்றன என்பதைக் காண்போம்.

நமது முறையைச் சீர்திருத்த நமது மாஜி கல்வி மந்திரி செய்த முயற்சிகள் பல. அவையெல்லாம் உருப்படாமற் போனதன் காரணம் கல்வி முறையில் உள்ள அடிப்படையான கெடுதலை அகற்றாததுதான்.

உள்ளேயிருக்கும் நோயைத் தீர்க்காமல் மேலே எவ்வளவு சிம்பு வைத்துக் கட்டினாலும் பயனில்லை; உடம்பு பலம் அடையாது.

குப்பை கூளத்தை அகற்றாமல் வீட்டுக்குள் பன்னீரைத் தெளிப்பதில் யாதொரு பயனுமில்லை.

வெளவால்களை விரட்டாமல் அழகிய மேஜை நாற்காலிகளை வாங்கிப்போடுவதில் என்ன உபயோகம் ?

நமது ஹைஸ்கூல் கல்வியில் முதல் பாரத்திலிருந்து ஆறுவது பாரம் வரையில் இப்போது வைக்கப்பட்டிருக்கும் பாடங்களைப் பாதியாக்குங்கள்.

தினம் ஒரு வேளை—இரண்டரை மணி நேரம்—பள்ளிக்கூடம் போதும் என்று செய்யுங்கள்.

இதன் மூலம் இப்போது ஆயிரம் பிள்ளைகள் வாசிக்கும் ஹைஸ்கூலில், இதே பணச் செலவில் இரண்டாயிரம் பிள்ளைகள் படிக்கும்படி செய்யலாம்.

கட்டிடப் பிரச்னை மலை போல தோன்றி லோபோபிரபு போன்றவர்களைப் பயமுறுத்தாது. பணச் செலவை நினைத்துக் கதிகலங்கி மூர்ச்சையடைந்து விழ வேண்டியதில்லை !

அரசாங்கத்துக்கு அதிகச் செலவு இல்லை. அதிகப் பிள்ளைகள்—இரட்டிப்புப் பிள்ளைகள்—படிக்கலாம்.

பிள்ளைகள் அநாவசியமான விஷயங்களை உருத்தள்ளி மூளையைக் கெடுத்துக் கொள்ளாமல் அவசியமான கல்வி கற்றுக் கடைத்தேறுவார்கள்.

காலையில் இரண்டரை மணி நேரம் பள்ளிக்கூடம் போய்விட்டு வரும் பிள்ளைகள் மத்தியானத்தில் படிக்க இஷ்டமிருந்தால் படிக்கட்டும், வேலை செய்ய வசதியிருந்தால் செய்யட்டும். கைத்தொழில் கற்றுக் கொள்ளச் சாதனம் இருந்தால் கற்றுக்கொள்ளட்டும். விளையாட்டில் விருப்பமிருந்தால் விளையாடட்டும். அல்லது ஊர் சுற்றட்டும்; வயல் காடுகளில் திரியட்டும்; இயந்திர சாலைகளுக்குப் போய் வேடிக்கை பார்க்கட்டும் ; ரயில் ஓடுவதைப் பாக்கட்டும்; ஆகாய விமானத்தை அண்ணாந்து பார்க்கட்டும்.

அல்லது, சோம்பேறித்தனமாகச் சும்மா உட்கார்ந்திருக்கட்டும்.

பள்ளிக்கூடத்தில் கொஞ்சம் படித்து விட்டு மற்றப் பொழுதை மேற்கண்ட வாறெல்லாம் கழிக்கும் பிள்ளைகளின் மனதிலேதான் படித்த படிப்பு நன்ருகத் தங்கி ஜீரணமாகும்.

அத்தகைய பிள்ளைகள்தான் நல்ல உடல் நலத்துடன் வளருவார்கள். வெளி உலகத்தை அறிவார்கள்.

வேலையில்லாத் திண்டாட்டம் அவர்களைப் பேய் போலப் பயமுறுத்தாது. எப்படியும் பிழைத்துக் கொள்ளலாம் என்ற தைரியம் பெறுவார்கள்.

இப்படிச் சோம்பியிருந்தும் ஊர் சுற்றியும் வளர்ந்த பிள்ளைகளில் பலர் உலகத்தில் மகத்தான காரியங்களைச் சாதித்திருக்கிருர்கள்.

பள்ளிக்கூடப் பாடங்களைப் படிக்காமல் உச்சி மோட்டைப் பார்த்துக் கொண்டு படுத்திருந்த சிறுவர்கள் சிலர் பிற்காலத்தில் உலகத்தின் மிகப் பெரிய மேதாவிகளாகி யிருக்கிருர்கள்.

* * *

மறுபடியும் சொல்கிருேம்: நம்முடைய நாட்டில் கல்விப் பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்கு வழி இதுதான்.

ஒரு வேளைப் பள்ளிக்கூடம்

இரண்டரை மணிப் படிப்பு

காலையில் வரும் பிள்ளைகளுக்கு மத்தியானம் பள்ளிக்கூடம் கிடையாது. மத்தியானம் வருகிறவர்களுக்குக் காலையில் கிடையாது.

இந்த முறையைக் கொண்டு தான் சென்னை மாகாணத்து எழுபது லட்சம் குழந்தைகளுக்கும் உடனடியாக ஆரம்பக் கல்வி அளிக்க முடியும்.

இந்த ஒரு வழியிலேதான் நம்முடைய குழந்தைக் குலத்தின் மூளையும் உடல் நலமும் கெட்டுப் போகாமல் காப்பாற்றலாம்.

இந்த ஒரு மருந்தினலேயே நமது கல்வி முறையைப் பிடித்துள்ள கடும் நோயைப் போக்கலாம்.

இந்த ஒரு முறையினலேயே கல்விக்காகப் பொது ஜன சர்க்கார் செலவு செய்யும் பணமெல்லாம் விரய மாகாமல் பயன்படச் செய்யலாம்.

## சில கல்விப் பிரச்னைகள்

---

**அதிசயம்—ஆனால் உண்மை!**

**மா**ஜி கல்வி மந்திரி ஸ்ரீ டி. எஸ். அவிநாசிலிங்கம் ரேடியோவில் பரீட்சை பற்றி ஒரு ரஸமான பிரசங்கம் செய்தார். "பரீட்சை வேண்டாம் என்று சொல்கிறவர்கள் அதற்குப் பதில் ஏற்பாடு ஒன்றும் சொல்லுவதில்லை" என்பதாகக் குறைப்பட்டார். குறைப்பட்ட பின்னர் பரீட்சை முறையின் மேன்மையை விளக்குவதற்கு ஒரு சம்பவத்தை எடுத்துக் கூறினார். வேறு யாராவது சொல்லியிருந்தால் நாம் அதை 'கட்டுக்கதை' என்றே எண்ணியிருப்போம். மாஜி கல்வி மந்திரிக்கு அத்தகைய அபூர்வ கற்பனா சக்தி கிடையாது என்பது நமக்குத் தெரியும். ஆகையால் அவர் கூறிய சம்பவத்தை, நாம் உண்மை என்றே நம்புகிறோம். அவர் கூறிய உண்மைச் சம்பவம் இதுதான் :—

"ஒரு பரீட்சைக்குக் கேள்வித் தாள்களைத் தயார் செய்த பரீட்சகர் அந்தக் கேள்விகளுக்குத் தாமே சரியான விடைகள் எழுதினார். சரியான விடைகள் (அதாவது 100-க்கு 100 மார்க்குப் பெற வேண்டிய விடைகள்)

இப்படியிருக்க வேண்டும் என்று திருத்துகிறவர்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகவே எழுதினார். அவர் எழுதிய 'மாடல்' விடைத்தாள் மற்ற மாணவர்களின் விடைத் தாள்களுடன் எப்படியோ கலந்து விட்டது. பரீட்சகர் எழுதிய அந்த மாடல் விடைத்தாளும் திருத்தப்பட்டது. பரீட்சகர் விடைகளுக்கு எவ்வளவு மார்க்குக் கிடைத்தது என்கிறீர்கள் ? 100-க்கு 100 கிடைத்ததா ? 90 கிடைத்ததா ? அறுபது மார்க்காவது கிடைத்ததா ? இல்லவே இல்லை ! பரீட்சை தேறுவதற்கு அத்தியாவசியமான 35 மார்க்குத்தான் அதற்குக் கிடைத்தது ?"

இந்த 'அதிசயம் ஆனால் உண்மை'ச் சம்பவத்தைக் கூறி விட்டு அதே பேச்சில் நம் மாஜி கல்வி மந்திரி "பரீட்சைக்கு பதிலி என்ன ?" என்று கேட்பது தான் வேடிக்கையாயிருக்கிறது. முழு மூடத்தனத்துக்குப் பதிலி வேறு கேடா ? பரீட்சைக் கேள்விகளைத் தயாரித்த நிபுணர் தாம் எழுதிய 'மாடல்' விடைத்தாளுக்கு 100க்கு 35 மார்க்குத்தான் வாங்கினார். அவர் பரீட்சை ஹாலில் உட்கார்ந்து பதை பதைத்துக் கொண்டு எழுதவில்லை. என் வருங்கால வாழ்வு இந்தக் கேள்விகளுக்கு விடை எழுதுவதைப் பொறுத்திருக்கிறது, என்ற பீதியோடு எழுதவில்லை. ஞாபகத்திலிருந்து கூட எழுதவில்லை. பக்கத்தில் பாட புத்தகங்களை வைத்துக்கொண்டு 'மாடல்' விடைகளை எழுதினார். அவருக்கு 100-க்கு 35 மார்க்குத்தான் கிடைத்தது !' இத்தகைய பரீட்சை முறையை ஒழிக்க வேண்டும் என்று சொன்னால், 'பரீட்சைக்குப் பதிலி என்ன ?' என்று கேட்பது ? இத்தகைய பரீட்சை முறையை ஏற்படுத்தியவர்கள், நடத்தி வருகிறவர்கள், நடத்துவதற்கு உடந்தையா யிருப்பவர்கள்—அவ்வளவு பேரையும் தூக்கிலே போடாவிட்டாலும் பதினாலு

வருஷம் ஆயுள் தண்டனையாவது அவர்களுக்கு விதிக்க வேண்டாமா ?

பரீட்சை முறையின் சீர்கேட்டை எடுத்துக் காட்டுவது தான் எங்கள் கடமை. அது மிகக் கேடான முறை என்பதை நீங்கள் கூறிய உண்மைச் சம்பவத்தினால் நிரூபித்துவிட்டீர்கள். அதை நிவர்த்தி செய்வது அரசாங்கத்தாரின் பொறுப்பு. 'பரீட்சைக்குப் பதிலி' கண்டு பிடிக்க வேண்டியதும் சர்க்காருடைய பொறுப்புத் தான். அதற்குச் சக்தி இல்லாவிட்டால் கடையைக் கட்டிக்கொண்டு வீட்டுக்குப் போகட்டும்.

## ஒரு மார்க்குக் குறைவு

பரீட்சை ஏற்பாடு மோசமானது; அதிலும் ஒரு மார்க்குக் குறைவினால் பிள்ளைகளைப் 'பெயில்' ஆக்குவதோ கொடுமையிலும் கொடுமையானது.

இந்த அநீதியைப் பற்றிப் பலர் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதற்கு எதிர்வாதம் ஒன்றும் இருக்கத்தான் செய்கிறது. அந்த எதிர் வாதத்தையும் ஒருவர் தமது கடிதத்தில் வெளியிட்டிருக்கிறார்.

குறைந்தபட்ச மார்க்கை எவ்வளவு குறைவாக வைத்தாலும் அப்போதும் சில மாணாக்கர்கள் ஒரு மார்க்குக் குறைவாக வாங்கக் கூடும். 35—க்கு ஒரு மார்க்குக் குறைவாக 34-மார்க் வாங்கியவன் பாஸ் என்றால் 33 மார்க் வாங்கினவனை என்ன செய்வது ? 34-க்கு ஒரு மார்க்குத் தானே குறைவு ? 33-மார்க் வாங்கினவனைப் 'பாஸ்' ஆக்கினால் 32 மார்க்கின் கதி என்னவது ?

இந்தப் பரீட்சை முறை இப்படியே இருக்கிற வரையில் ஒரு மார்க்கில் 'பெயில்' ஆவதைப் பற்றிக்

குறைபட்டு என்ன பயன்? அதை எப்படித் தடுக்க முடியும்? என்பது எதிர்வாதம்.

இந்தப் பரீட்சை முறையை வைத்துக்கொண்டே இம்மாதிரி ஒரு மார்க்குக் குறைவினால் மாணுக்கர்கள் இருதயம் உடைந்து போகாதபடி தடுக்கலாம் என்று நாம் கருதுகிறோம். குறைந்த பட்சம் பாஸ் மார்க் 35–என்று வைத்துக் கொள்வோம். 35-மார்க்கு ஒரு பிள்ளைக்குக் கிடைக்கவில்லை யென்றால் அடுத்தபடியாக கீழே 30 மார்க்குத்தான் கொடுக்கவேண்டும். 34 முதல் 31 வரைக் கொடுக்கக் கூடாது. எதற்காக அப்படி ஒன்று குறைவாகக் கொடுக்க வேண்டும்? விடைகளுக்குத் தராசு வைத்து எடை போட்டு மார்க்குக் கொடுக்கிறார்களா? தங்கத்தை நிறை போடுவதுபோல் விடைகளை நிறை போடமுடியுமா? அது அவசியமா? ஒரு பையன் பாஸுக்குத் தகுதியில்லை யென்று கருதினால் பாஸ் மார்க்குக்கு ஐந்து மார்க்குக் குறைவாகவே போட்டுத் தொலைக்கிறது தானே? ஒரு மார்க்குக் குறைத்துப் போட்டு இளம்பிள்ளைகளைச் சித்திரவதை செய்வானேன்? பாவத்தையும் பழியையும் சுமப்பானேன்?

## இன்றியமையாத கல்வி

"ஆதாரக் கல்வி" என்பது ஒன்று இப்போது பலரிடம் அகப்பட்டுக்கொண்டு விழிக்கிறது. காந்தி பக்தர்களிடம் அது அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்திய சர்க்காரிடமும், மாகாண சர்க்கார்களிடமும் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. "ஆதாரக் கல்வியைப் புகுத்தப் போகிறோம்" என்று சாக்குச் சொல்லிக் கொண்டு, அரசாங்கத்தார் முக்கியமான கல்விச் சீர்திருத்தங்களைச் செய்யாமல் தள்ளிப் போடுகிறார்கள்.

"ஆதாரக் கல்வி என்பது என்ன?" என்பதைச் சரியாக அறிந்தவர் இந்தியாவில் ஒரே ஒருவர்தான் இருந்தார்; அந்த மகா புருஷர் காலமாகிவிட்டார்!

அடுத்தபடியாக ஆதாரக் கல்வியைப் பற்றி அறிந்தவர்கள் இப்போது இந்தியாவில் ஐந்தாறு பேர் உண்டு. ஆனால், அவர்கள் ஒவ்வொருவரும் 'ஆதாரக் கல்வி'க்குச் சொல்லும் வியாக்யானம் ஒவ்வொரு விதமாக இருக்கும்!

இந்திய சர்க்காரும் மாகாண சர்க்கார்களும் தேசம் முழுவதும் ஆதாரக் கல்வித் திட்டத்தைப் புகுத்தப் போகிறோம் என்று நம்மைப் பயமுறுத்துகிறார்கள். ஆனால் அது ஒரு நாளும் நடக்காத காரியம் என்று நாம் கூறுகிறோம். பதினைந்து வருஷத் திட்டம் போடலாம், பொது மக்களின் பணத்திலிருந்து கோடி கோடியாக எடுத்துச் செலவு செய்யலாம். ஆனால் திட்டம் நிறைவேறாது. பயனும் விளையாது. ஆதாரக் கல்வித் திட்டத்தைத் தேச முழுவதும் ஆயிரக்கணக்கான பள்ளிக் கூடங்களில் நடத்துவதற்குப் போதுமான தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் கிடைக்கமாட்டார்கள். "ஒரு வேலைக்கும் லாயக்கில்லாதவர்கள் ஆரம்ப ஆசிரியர்களாகிறார்கள்" என்று இருக்கும் நிலையில், ஆதாரக் கல்வித் திட்டத்தை அறிந்து நடத்திவைக்கக் கூடிய ஆசிரியர்கள் ஆயிரக் கணக்கில் எப்படிக் கிடைப்பார்கள்? அப்படிப்பட்ட ஆசிரியர்களை ஆலையில் உற்பத்தி செய்துவிட முடியுமா?

ஒரு பக்கத்தில் ஆதாரக் கல்வித் திட்டம் என்ற பெயரால் கோடிக் கணக்கான பணத்தை வாரிக் கொட்டிக் கொண்டிருப்பார்கள். இன்னொரு பக்கத்தில் லட்சக் கணக்கான குழந்தைகள் கல்வியறிவு இல்லாமலே வளர்ந்துகொண்டிருக்கும்,

காங்கிரஸ் சர்க்கார், பொதுஜன சர்க்கார்—செய்யக் கூடிய காரியம், செய்யக் கடமைப்பட்டுள்ள காரியம் ஒன்றே ஒன்றுதான். நாட்டில் ஐந்து வயதுக்குமேல் பன்னிரண்டு வயது வரை உள்ள அத்தனை குழந்தை களுக்கும் ஆரம்பப் படிப்புச் சொல்லித் தர வேண்டும். அதாவது எல்லாக் குழந்தைகளுக்கும் எண்ணும் எழுத்தும் கற்பிக்க வேண்டும். இப்போதைக்கு அதுவே போதும். அதுதான் சாத்தியம். கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல், ரூபாய், அணு, பைசா, பாரம், மணங்கு, வீசை, மைல், பர்லாங்கு கஜம்—இவ்வளவு கணக்கும் எல்லாப் பிள்ளைகளுக்கும் தெரியவேண்டும். சாதாரணத் தமிழ்ப் புத்தகம் எதை எடுத்தாலும் படிப்பதற்கு வேண்டிய எழுத்தறிவு வேண்டும். நாட்டிலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் இந்தக் குறைந்த அளவு கல்விப் பயிற்சிக் கட்டாயமாக அளிக்கப்படவேண்டும். இது தான் உண்மையான ஆதாரக் கல்வி. இந்த ஆதாரக் கல்வியாகிய அஸ்தி வாரத்தின் பேரில்தான் மற்ற எல்லாக் கல்வி மாளிகை களையும் கட்ட வேண்டும். எண்ணும் எழுத்துமாகிய இந்த ஆதாரக் கல்வியை நாட்டிலுள்ள எல்லா ஆண் பெண் குழந்தைகளுக்கும் கட்டாயமாக அளிக்க வேண்டும்; அளித்தே தீர வேண்டும்.

ஒரு வேளைப் பள்ளிக்கூடம்
**இரண்டரை மணி வகுப்பு**

என்னும் ஏற்பாட்டின் மூலமாகத்தான் இது உடனடி யாகச் சாத்தியமாகக் கூடும்.

இப்போதுள்ள ஏற்பாட்டின்படி சென்னை மாகா ணத்தில் 35 லட்சம் குழந்தைகள் பள்ளிக்கூடத்து நிழலிலேயே ஒதுங்காமல், எண்ணும் எழுத்தும்அறியாமல்,

நிரட்சர குட்சிகளாகவே வளர்ந்துகொண்டு வருகிறார்கள். நாளைக்கு இவர்களுந்தான் சுதந்திர இந்தியாவின் வயது வந்த பிரஜைகளாகி, வோட்டுக் கொடுத்தாக வேண்டும்!

மற்ற 35 லட்சம் குழந்தைகள் பள்ளிக் கூடங்களுக்குப் போகிறார்கள். தினம் ஐந்து மணி நேரத்துக்கு மேல் பள்ளிச் கூடச் சிறைக்குள் அடைபட்டிருக்கிறார்கள். ஆனால், எல்லாரும் படித்துப் பயன் அடைகிறார்களா என்றால், அதுவும் இல்லை. பள்ளிக் கூடத்தில் சேர்கிற குழந்தைகளில் 100-க்கு 29 பேர்தான் ஐந்தாவது வகுப்புக்கு வருகிறார்களாம். பாக்கி 71 பேரும் நடுவில் நின்று படித்ததையும் மறந்து எழுத்தறிவு இல்லாதவர்களாவே ரூபாய் விடுகிறார்களாம்! அழகாயிருக்கிறதல்லவா? அதாவது **இப்போது சென்னை சர்க்கார் ஆரம்பக் கல்விக்குச் செலவு செய்யும் ஏழுகோடி ரூபாய் படுதண்டமாய்ப் போகிறது!** இதற்குப் பரிகாரம் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை. நாம் சொல்லும் திட்டத்தின்படி இந்த ஐந்து கோடி ரூபாய் படுதண்டமாய்ப் போகாது. அதற்கு மாறாக இப்போதைப் போல் இரண்டத்தனை குழந்தைகள் இன்றியமையாத கல்வியைப் பெற்றுப் பயனடைவார்கள்.

## தண்டச் செலவு வேண்டாம்!

"வகுப்பு நேரத்தைக் குறைக்காமல் ஐந்து மணியாகவே வைத்துக் கொண்டு பள்ளிக்கூடங்களிலேயே தொழிற் கல்வியையும் சொல்லிக் கொடுக்கலாமே?" என்ற யோசனை ஒன்று இருக்கவே இருக்கிறது. சில ஹைஸ்கூல்களில் இப்போது தொழிற் கல்வி வகுப்புகள் நடத்துகிறார்கள்! ஆயிரம் மாணாக்கர்கள் படிக்கும் பள்ளிக்கூடத்தில் ஒரு காற்றில்லாத அறையில் நாலு கைத்தறிகள் இருக்கும். பிள்ளைகள் நெசவு கற்றுக்

கொள்வார்கள். சில பிள்ளைகளுக்குக் கால் கீழே எட்டாது. சும்மா நின்று விட்டு அல்லது உட்கார்ந்து விட்டுத் திரும்புவார்கள். சிலர் நெசவு கற்றுக் கொள்ள ஆரம்பித்துப் பாவு நூலை அறுத்துச் சிக்கலாக்கி விடுவார்கள் அப்புறம் பத்து நாளைக்கு நெசவு வகுப்பு நடைபெறாது!

சாதாரணப் பள்ளிக்கூடங்களில் கைத்தொழிலும் கற்றுக் கொடுப்பதென்பது நடவாத காரியம். அதற்கு வேண்டிய வசதிகளும் தொழிற் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களும் தற்சமயம் இல்லை. சமீபத்தில் கிடைப்பதும் துர்லபம்.

இரண்டரை மணி வகுப்பு நடத்தி நீங்கள் பிள்ளைகளை விட்டு விடுங்கள். அவரவர்களுடைய இயற்கைக்கும் தேவைக்கும் வசதிக்கும் இணங்கப் பிள்ளைகள் வேறிடங்களில் தொழில் கற்றுக்கொள்வார்கள். பெற்றோர்களிடமாவது அண்டை அயலாரிடமாவது கற்றுக்கொள்வார்கள் சிலர் தொழிற் கல்விக்காகவே ஏற்பட்ட பள்ளிக்கூடங்களில் சேர்ந்து கற்றுக் கொள்வார்கள். தற்போதைக்கு எழுத்துக் கல்வியையும் தொழிற் கல்வியையும் சேர்த்துக் குழப்பவேண்டாம்.

எழுபது லட்சம் குழந்தைகளுக்கு இன்றியமையாத எண்ணும் எழுத்தும் கற்பிப்பதுடன் சர்க்கார் கடமையை தீர்த்துக்கொள்ளுங்கள். குழந்தைகள் தங்கள் பெற்றோர்களிடமும் மற்றவர்களிடமும் பணச் செலவின்றிக் கற்று கொள்ளக் கூடிய கைத்தொழிற் பயிற்சிக்காகக் கோடிக் கணக்கான பணத்தைத் தண்டச் செலவு செய்ய வேண்டாம்!

## இலட்சிய ஸ்தாபனங்கள்

இந்த நாட்டில் சுயநலமற்ற பொதுநலத் தொண்டர்கள் பலர் இருக்கிறார்கள். பரோபகார சீலர்கள் இருக்

கிறார்கள். இவர்கள் குருகுலங்களும், வித்தியாலயங்களும், ஆசிரமங்களும் வைத்து நடத்துகிறார்கள். இவர்களை நாம் போற்றி வணங்குகிறோம். ஆதாரக் கல்விமுறை முதலிய பரிசோதனைகளை இத்தகைய ஸ்தாபனங்கள் நடத்தட்டும். இவர்களுக்குச் சர்க்கார் நன்கொடை கொடுப்பதுடன் நிறுத்திக் கொள்ளவேண்டும்.

எல்லாத் தேசங்களிலும் அரசாங்கத்தினால் நடத்தப் படும் பள்ளிக்கூடங்கள் சமுதாயத்தில் சகலருக்கும் அத்தியாவசியமான கல்வியைப் போதிப்பனவாயிருக்கும். இலட்சிய முறையில் கல்வியை வளர்க்கும் ஸ்தாபனங்கள் தனிப் பட்டவர்களால் தனியாகவே நடத்தப்படும். இலட்சியக் கல்வி ஸ்தாபனங்களின் செல்வாக்கு நாடு முழுவதும் பரவி நாளடைவில் அதன் பயனை எல்லாரும் அடைவார்கள். இத்தகைய இலட்சியக் கல்வி ஸ்தாப னங்கள் நம் நாட்டிலும் பரவிப் பெருகிச் செழிக்கட்டும். ஆனால், அத்தகைய இலட்சியக் கல்விக் கழகங்களை அரசாங்கத்தார் நடத்த முடியாது ; தற்போதைய நிலையில் நம் நாட்டு சர்க்கார் நடத்த முயற்சிக்கவும் கூடாது. ஆயிரங் குழந்தைகளை எழுத்தறிவே இல்லாத குருடர் களாக விட்டுவிட்டு ஒரு நூறு பிள்ளைகளின் படிப்புக்கு எல்லாப் பணத்தையும் சர்க்கார் ஏன் செலவு செய்ய வேண்டும் ? அப்புறம் “ பணம் இல்லை ! பணம் இல்லை !” என்று எதற்காகக் கதறவேண்டும் ? ஏழைமக்கள் தலையில் புதிய புதிய வரிகளை ஏன் திணிப்பதற்கு முயல வேண்டும் ?

**ஆனந்தம் உண்டா ?**

நம் நாட்டிலுள்ள குருகுலங்கள், வித்தியாலயங்கள் ஆசிரமங்கள் பலவும் சிறந்த பணியாற்றி வருகின்றன என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இவற்றில் பொதுவாக

உள்ள ஒரு குறையையும் சொல்ல வேண்டியிருக்கிறது. சர்க்காரிடம் கிராண்ட் வாங்குவதற்காக இந்த ஸ்தாபனங்களில் சர்க்கார் பாடதிட்டத்தைக் கண்டிப்பாக அநுசரிக்க வேண்டியிருக்கிறது. அதாவது அபத்தக் களஞ்சியங்களைப் பிள்ளைகளின் மூளையில் திணிக்க வேண்டியிருக்கிறது. ஆனால், சர்க்கார் கல்வித் திட்டப் பாடங்கள் மட்டும் போதுமா? 'குருகுலம்' 'வித்யாலயம்' 'ஆசிரமம்' என்ற பெயர் வைத்துக் கொண்டிருப்பதை முன்னிட்டு அதிகப்படியாக ஏதாவது கற்பிக்க வேண்டும் அல்லவா? எனவே குழந்தைகளை மேலும் வாட்டுகிறார்கள். சிலப்பதிகாரத்தையும், கலித்தொகையையும் கரதலப்பாடமாக நெட்டுருப் பண்ணச் சொல்லுகிறார்கள். கைத்தொழில் பயிற்சி, டிரில் பயிற்சி எல்லாம் நடத்த வேண்டி வருகிறது. இஷ்டம் போல் ஓடி ஆடி விளையாடப் பிள்ளைகளுக்கு நேரமே கிடையாது. விளையாட்டுக்காகக் குறிப்பிட்டுள்ள காலத்தில் ஆசிரியர் மேற்பார்வையில் விளையாட வேண்டும்! இது விளையாட்டாகுமா? ஒரு நாளும் ஆகாது. இந்த நிலையில் விளையாட்டும் ஒரு பாடக்கடனாக மாறி விடுகிறது.

காந்தி மகாத்மா தம் வாழ்க்கையில் பல பரிசோதனைகள் நடத்தி வந்தார். உணவுப் பரிசோதனை செய்தார்; உண்ணாவிரத பரிசோதனை செய்தார். சத்தியப் பரிசோதனை செய்தார்; பிரம்மச்சரிய பரிசோதனை செய்தார், கல்வி முறை பரிசோதனையும் செய்தார்.

அவருடைய பரிசோதனைகள் முடிவு பெற்று விட்டன என்று அவர் எப்போதும் சொன்னதில்லை.

காந்தி மகாத்மாவின் வாழ்க்கையில் ஒரு பெரிய விசேஷம் என்னவென்றால் தாம் கடைப்பிடிக்கும் கொள்கையை மாற்றிக் கொள்ள அவர் தயங்குவதில்லை.

சோதனையில் நேற்றுச் சரி என்று தோன்றியது இன்று பிசகு என்று ஏற்பட்டால் உடனே மாற்றிக்கொள்வார்

ஆனால், காந்தி மடத்தின் சீடர்கள் அப்படியெல்லாம் மாற்றிக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் பிடித்தால் ஒரு பிடிதான். ஆதாரக் கல்வி முறைச் சோதனையில் ஒரு சிறுவன் செத்துப் போய்விடுவதாயிருந்தாலும் "அதனால் பாதகமில்லை, கடமையைச் செய்து விட்டுச் சாகட்டும்; வீர சொர்க்கம் அடையட்டும்" என்பார்கள் புண்ணி வான்கள்.

இப்போது ஆதாரக் கல்வி முறையை நடத்தி வைக்கும் சில ஸ்தாபனங்களில் பிள்ளைகளைக் காலை முதல் மாலை வரை வாட்டி எடுக்கிறார்கள்! குழந்தைகளின் வாழ்க்கையில் ஆனந்தமே இல்லாமல்செய்துவிடுகிறார்கள். காந்திஜி ஒரு நாளைக்கு 16 மணி வேலை செய்தார். அவருடைய சீடர்களும் அப்படியே வேலை செய்தார்கள். அதை அனுசரித்துப் பிள்ளைகளும் 16 மணி நேரம் வேலை செய்யட்டும் என்கிறார்கள். காலை 4-30க்குக் குழந்தைகளை எழுப்பிவிட்டு இரவு 9-30 வரை வேலை வாங்குகிறார்கள்!

காந்திஜி நடத்திய ஆசிரமத்தில் இம்மாதிரி யெல்லாம் நடந்திருக்கலாம். காந்திஜியிடம் இருந்த ஆன்ம சக்தியும் தபோபலமும் உங்களிடம் இருந்தால் நீங்களும் அத்தகைய ஆசிரமத்தை நடத்தலாம். இல்லாத வரையில் பிள்ளை களைக் கொடுமைப் படுத்தாமல் சும்மா விட்டு விடுவதே புண்ணியமா யிருக்கும்.

> ஆசிரமங்கள், குரு குலங்கள், வித்தியாலயங் களில் ஆனந்தம் குடி கொண்டிருக்க வேண்டும்; குழந்தைகள் குதூகலமாகக் குதித்துச் சட்ட திட்ட மின்றி விளையாட வேண்டும். ஆசிரியர் களைக் கண்டு பயப்படுவது என்பதே கூடாது.

இந்த நிபந்தனை நிறை வேறினால் தான் மேற்படி ஸ்தாபனங்களின் இலட்சியம் நிறைவேறியதாகும். குழந்தைகளை வாட்டி எடுத்து, வேண்டாத பாடங்களை அவர்கள் இளம் மூளையில் திணித்து பரீட்சை என்னும் செக்கிலும் வைத்து ஆட்டும் ஸ்தாபனங்களுக்குக் குருகுலம், ஆசிரமம், வித்தியாலயம் என்ற பெயர்கள் பொருத்தமே இல்லை.

## குருட்டுக் கட்டுப்பாடு

நமது கல்வி முறையில் உள்ள இன்னொரு அநீதியான விதியைக் கேளுங்கள். வேறு எந்த மாகாணத்திலும் இல்லாமல் சென்னை மாகாணத்தில்மட்டும் அமுலில் உள்ள அவக்கேடு அது.

ஒரு பையன் ஒரு நாள் தவறாமல் பள்ளிக்கூடம் போகிறான். ஆயினும் பயன் இல்லை. பரீட்சையில் 'பாஸ்' மார்க்குகள் வாங்கினால்தான் அவன் மேல் வகுப்புக்குப் போகலாம். சரி, இருக்கட்டும்.

பரீட்சைதானே முக்கியம்? பரீட்சையில் மார்க்குகள் வாங்குவது தானே உங்களுக்கு முக்கியம்? ஒரு பையன் வீட்டிலேயோ தானாகவோ, வேறு உதவியுடனோ பாடங்களைப் படித்து விட்டுப் பரீட்சையில் மட்டும் எழுதுவதற்கு முன் வந்தானானால் அதை நம் கல்வி இலாகாவும் யுனிவர்ஸிடியும் அங்கீகரிப்பதில்லை. நாலாவது, ஐந்தாவது, ஆறாவது மூன்று பாரமும் பள்ளிக்கூடம் போய்ப் படித்தால்தான் எஸ். எஸ். எல். சி. பரீட்சைக்கு உட்காரலாம்! வருஷத்துக்கு இவ்வளவு நாள் பள்ளிக்கூடத்துக்குக் கட்டாயம் போயிருக்க வேண்டும் என்று விதி. 'டெர்ம் டேஸ்' என்று இந்தக் குருட்டு விதிக்குப் பெயர்.

இந்தக் குருட்டுக் கட்டுப்பாடு எதற்காக என்று யோசித்துப் பாருங்கள்.

ஒரு பக்கத்தில் 'கல்விக்குச் செலவழிக்கப் பணம் போதவில்லை' என்ற அழுகை. 'பள்ளிக்கூடம் கட்டுவதற்குப் பணம் இல்லை' என்ற ஓலம். 'வரி போட்டால் ஆட்சேபிக்கிறீர்களே !' என்ற புகார்.

மற்றொரு பக்கத்தில் சர்க்காருக்குச் செலவு வைக்காமல், சர்க்கார் பள்ளிக்கூடக் கட்டிடங்களைத் தேய்க்காமல், ஆசிரியர்களுக்குத் தொந்திரவு கொடாமல், ஒரு பையன் வீட்டிலேயே படித்துக் கொள்கிறேன் ; படித்துக் கொண்டு வந்து பரீட்சை எழுதுகிறேன் என்றால் அது கூடவே கூடாது. அவனைப் பரீட்சை எழுத அனுமதிக்க முடியாது !

இந்த அநீதியான அர்த்தமற்றகட்டுப்பாடு எதற்காகத் தெரியுமா ?

வீட்டிலேயே ஒரு பையன் படித்தால் தினம் இரண்டு மணி நேரம் ஒழுங்காகப் படித்து வந்தால் போதும். பரீட்சை எழுதிப் பாஸ் செய்து விடுவான். முழு கவனமும் செலுத்தி ஒரு நாளைக்கு ஐந்து மணி படித்தால் மூன்றே மாதம் படித்தால் போதும், ஒரு வருஷத்துப் பரீட்சையும் தேறி விடுவான்.

இது இப்படி என்று ஏற்பட்டு விட்டால் பள்ளிக்கூடத்தின் முக்கியம் குறைந்து போய் விடுமல்லவா ? 'ஐந்து மணிப் பள்ளிக்கூடம் எதற்கு ? இரண்டு மணி போதுமே ?' என்று கேட்பார்கள் அல்லவா ? அதற்காகத்தான் வீட்டில் படித்தவர்கள் பரீட்சைக்கு உட்காரக் கூடாது என்ற ஏற்பாடு ; வேறு எந்த மாகாணத்திலும் எந்த தேசத்திலும் இல்லாத ஏற்பாடு !

அமெரிக்காவுக்குச் சென்ற பல இந்திய மாணுக்கர்கள் எப்படிப் படித்துப் பாஸ் செய்தார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்திருக்கும் ! சோஷலிஸ்ட் கட்சித் தலைவர்

ஸ்ரீ ஜெயப் பிரகாஷ் நாராயணன் அமெரிக்காவில் இருந்த போது பகலில் போர்ட்டர் வேலை முதலிய வேலைகள் செய்து காலட்சேபத்துக்குச் சம்பாதித்தார். இரவு இரண்டு மணி நேரம் காலேஜுக்கும் போய்ப் படித்துப் பாஸ் பண்ணிப் புகழ் பெற்றார்!

செல்வம் செழித்த அமெரிக்காவிலே கல்வி செழித்த அமெரிக்காவிலே, படிக்கத் தெரியாதவர்களே இல்லாத அமெரிக்காவிலே, இந்த மாதிரி எல்லாம் ஏற்பாடு இருக்கிறது. ஏழை இந்திய நாட்டில் படிக்கத் தெரியாதவர்கள் 100-க்கு 90 பேர் உள்ள நாட்டில் வருஷம் பூராவும் தினம் ஐந்து மணி நேரம் பகலில் பள்ளிக்கூடம் போனால்தான் பரீட்சை எழுதலாம்! எப்படியிருக்கிறது அநியாயம்?

## அதிர்ஷ்டம் இருந்தால்...... ?

கடைசியாக ஒரு தடவை முக்கிய விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லி விட்டு இதை முடிப்போம்.

சென்னை மாகாணத்தில் பள்ளிக்கூடம் போக வேண்டிய வயதுள்ள குழந்தைகள் 35 லட்சம் பேர் பள்ளிக்கூடம் போகாமலும் படிக்க வசதியில்லாமலும் இருக்கிறார்கள். அவர்களை உடனடியாகப் படிப்பிக்க வேண்டும்.

ஆரம்பக் கல்வி கற்கும் குழந்தைகள் ஒட்டிக்கு இரட்டியானால் ஹைஸ்கூல்களில் படிக்க வருகிறவர்களும் ஒட்டிக்கு இரட்டையாவார்கள். அப்படி வருகிறவர்களுக்கெல்லாம் ஹைஸ்கூல்களில் இடங் கொடுத்தாக வேண்டும்.

பள்ளிக்கூடங்களை அதிக மாக்கவும் ஆசிரியர்களை அதிகமாக்கவும் ஏராளமாகப் பணம் வேண்டும்.

சென்னை சர்க்கார் சமீபத்தில் கல்விக்கு அதிகப் பணம் செலவு செய்யக் கூடிய நிலைமையில் இல்லை. ஜனங்கள் அதிக வரி கொடுக்கத் தயாராயில்லை.

ஆகையால் செய்யவேண்டியது என்ன ? இப்போது இருக்கிற கட்டிடங்களை வைத்துக்கொண்டும் இப்போது செலவு செய்யும் பணத்தை வைத்துக் கொண்டும் இரட்டிப்புப் பிள்ளைகளுக்குக் கல்வி புகட்டியாக வேண்டும்.

இது எப்படி முடியும் ? ஐந்து மணி வகுப்பை இரண்டரை மணி வகுப்பு ஆக்குவதின் மூலமாக முடியும்.

உணவுப் பற்றுக் குறையை எடுத்துக்கொள்வோம். நாட்டிலுள்ள எல்லா ஜனங்களுக்கும் 16 அவுன்ஸ் ரேஷன் கொடுக்கத் தானியம் இல்லை. அதற்கு வேண்டிய தானியத்தில் பாதிதான் இருக்கிறது. அந்த நிலையில் செய்யவேண்டியது என்ன ? நாட்டில் பாதிப்பேருக்கு முழு வயிறு உணவு கொடுத்துப் பாக்கிப் பாதிப் பேரை அடியோடு பட்டினி போட்டுக் கொன்று விடுவதா ? அல்லது இருக்கிற தானியத்தை நிரந்து எல்லோருக்கும் பாதி வயிறு உணவு கொடுப்பதா ?

இரண்டாவது முறையைத் தான் எல்லோரும் ஒத்துக் கொள்வார்கள்.

வயிற்றுப் பசியைப் போலவே அறிவுப் பசியும் முக்கியமான தல்லவா ?

நாட்டிலுள்ள சிறு குழந்தைகளில் பாதிப்பேருக்கு ஐந்து மணிப் படிப்புக் கொடுத்துப் பாக்கிப் பாதிப் பேருக்குப் படிப்பே இல்லாமல் செய்து விடாதீர்கள். இது பாவம் ; பட்சபாதம்.

இருக்கும் வசதிகளை நிரந்து எல்லாக் குழந்தைகளுக்கும் இரண்டரை மணி நேரம் படிக்கக்கொடுங்கள்.

இந்த ஏற்பாட்டின்படி இன்னும் இரண்டு முக்கியமான உப பலன்கள் ஏற்படக் கூடும்.

1. பிள்ளைகள் பாதி நாள் பள்ளிக்கூடம் போய் வந்து பாக்கிப் பாதி நாளில் தத்தம் பெற்றேரின் தொழிலில் உதவி செய்வார்கள். விவசாயிகளின் குழந்தைகள் விவசாயத்தில் ஈடுபடுவார்கள் ; அல்லது வேறு தொழில் கற்றுக் கொள்வார்கள். படித்து முடிந்ததும் என்ன செய்வோம் என்று திகைத்து நிற்கமாட்டார்கள். மூளைப் பயிற்சியுடன் கையின் பயிற்சியும் அவர்களுக்கு ஏற்படும்.

2. இரண்டாவது, மூன்ருவது வகுப்பிலேயே பிள்ளைகள் நின்றுவிடமாட்டார்கள். அவர்கள் படித்த படிப்பு வீணுய்ப் போகாது. சர்க்கார் கல்விக்காகச் செல வழிக்கும் பொதுப் பணம் தண்டமாய்ப் போகாது. பாதி நாள் வீட்டு வேலையோ வேறு தொழிலோ செய்வதற்கு இருப்பதால் பள்ளிக்கூடம் வரும் பிள்ளைகள் ஐந்தாம் வகுப்புவரையில் தொடர்ந்து படிப்பார்கள். சர்க்கார் கல்விக்குச் செலவு செய்யும் பணம் நன்கு உபயோகப் பட்டதாகும்.

* * *

அதிர்ஷ்டவசமாகக் கல்விக்குச் செலவு செய்யச் சர்க்காருக்குப் பணம் அதிகம் கிடைத்தால் அதை உபயோகப்படுத்தச் சிறந்த வழி உண்டு. பாலர் வகுப்பி லிருந்து பத்தாவது வகுப்பு வரையில் நாட்டில் எல்லாப் பிள்ளைகளுக்கும் பள்ளிப் படிப்பு இலவசம் என்றும் சம்பளம் இல்லை என்றும் ஏற்படுத்துங்கள். நாகரிக நாடு களில் எல்லாம் இப்படித்தான் நடக்கிறது. நமக் கடுத்த சிறு தீவாகிய இலங்கையிலே கூட பத்தாம் வகுப்பு வரையில் பிள்ளைகளுக்குச் சம்பளம் இல்லை. பணத் தைச் செலவு செய்யவேண்டிய வழி அது. கல்வி இலாகா காட்டும் பகாசுர வழிகளில் பொதுப் பணம் தண்டமாகப் போய்விடும்.

## பாதகர்களுக்குத் தண்டனை இல்லையா ?

சில நாளைக்கு முன்னல் ஏற்பட்ட கல்கத்தா மெயில் விபத்தில் ஆறுபேர் மாண்டதும் நூறு பேருக்கு மேல் காய மடைந்ததும் எல்லோருக்கும் தெரியும். அவர்களுக்காகத் தேச மக்கள் அனுதாபத்தைத் தெரிவித்தனர். அந்த விபத்து ஏற்படும்படி செய்த சதிகாரர்களின் பாதகச் செயல் இந்தியா முழுவதும் மிகுந்த மனக் கொதிப்பையும் ஆத்திரத்தையும் உண்டுபண்ணியது.

ஆனல், இப்போது சென்னை மாகாணத்திலே அதைக் காட்டிலும் கோரமான வேறொரு விபத்து நேர்ந்திருக்கிறது. அந்த விபத்தின் விளைவாக 68,000 இளம் பிள்ளைகள் கடுமையாகக் காயமடைந்திருக்கிறார்கள்.

எஸ். எஸ். எல். சி. பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள மனப்புண்ணையே குறிப்பிடுகிறோம்.

தேசத்திலே ஏற்படும் அற்பமான காயங்களைக் காட்டிலும் குழந்தைகளின் இளம் மனதிலே ஏற்படும் புண் கோரமானது அல்லவா ?

ஏக காலத்தில் 68,000 குழந்தைகளின் மனதை வாட்டி வதைத்தவர்கள் எவ்வளவு இரக்கமற்ற பாதகர்களாக இருக்கவேண்டும்.

அதிலும், அந்தச் செய்கைக்குக் காரணமானவர்கள் கல்வி இலாகாவைச் சேர்ந்தவர்கள் என்பதை நினைக்கும் போது யார்தான் கொதிப்பு அடையாமல் இருக்க முடியும் ?

பதினாயிரக் கணக்கான மாணவர்களைப் பரிதவிக்கும் படி செய்தவர்களுக்குக் கல்வி இலாகா உத்தியோகங்களைக் காட்டிலும் ஜெயில் வார்டர் பதவியோ, அல்லது காட்டு மிருகங்களைக் கட்டி ஆளும் சர்க்கஸ் உத்தியோகஸ்தர் பதவியோ தான் பொருத்தமாக இருக்கும்.

"பரீட்சை முறையே ஒரு பாதகம்" என்று உலகத்து அறிவாளிகள் சொல்லி வரும் இந்தக் காலத்தில், பரீட்சையில் கொடுக்கப்படும் கேள்வித் தாள்கள் மிகக் கடினமாகவும் எளிதில் புரியாமலும் இருந்துவிட்டால் சின்னஞ் சிறு பிள்ளைகளை வதைக்க வேறு வினை என்ன வேண்டும் ?

இந்த வருஷம் எஸ். எஸ். எல். சி. பரீட்சையில் கொடுக்கப்பட்ட கேள்வித் தாள்கள் எல்லாம் அந்த லட்சணத்தில் இருக்கின்றன.

கேள்வித்தாள்களைக் கடினமாகவும் புரியாமலும் இருக்கும்படி தயாரிப்பதே மன்னிக்க முடியாத குற்றம். அத்துடன் அந்தத் தாள்களில் மாணவர்களின் தலை சுற்றும்படியான தவறுகளும் இருந்துவிட்டால் அவர்களின் கதி என்ன ஆவது ?

பரீட்சை முறையிலுள்ள கேடுகளை நாம் எப்போதுமே வற்புறுத்தி வந்திருக்கிறோம். ஆகவே, அந்தப்

பொதுக் கொள்கையையொட்டி இந்த வருஷத்து எஸ். எஸ். எல். சி. பரீட்சைத்தாள்களைப் பற்றியும் குறை கூறுகிறோம் என்று சில நேயர்கள் நினைக்கக் கூடும். ஆனால் அது சரியல்ல.

சென்ற வருஷத்தில் நாம் பரீட்சை முறையைக் கண்டித்தபோது நாம் தன்னந் தனியாக இருந்தோம்.

இந்த வருஷமோ பல உயர்தரப் பாடசாலைகளின் பொறுப்பு வாய்ந்த ஹெட்மாஸ்டர்கள் நம்முடன் ஓரளவு சேர்ந்திருக்கிறார்கள்.

சென்னை நகரிலுள்ள ஹைஸ்கூல்களின் தலைமை உபாத்தியாயர்கள் சென்ற வாரம் எம். ஸி. டி. முத்தையா செட்டியார் ஹைஸ்கூலில் ஒரு கூட்டம் கூட்டினார்கள். இந்த வருஷத்து எஸ். எஸ். எல். சி. பரீட்சையில் கொடுக்கப்பட்ட கேள்வித் தாள்களை அவர்கள் நிதான மாக ஆராய்ச்சி செய்து, அவற்றிலுள்ள குற்றங்களை எடுத்துக் காட்டினார்கள்!

குற்றம் என்றால் ஒன்று இரண்டல்ல! பற்பல குற்றங்கள்.

1, கேள்வித்தாள்களின் தமிழ் தெலுங்கு மொழி பெயர்ப்பு மோசமாக இருந்தது. அதனால் மாணவர்கள் மிகவும் தத்தளித்து விட்டார்கள்.

2. கணக்குப் பரீட்சையில் மூன்று கேள்விகள் எஸ். எஸ். எல். சி. மாணவர்களுக்குப் புரியக் கூடியவை யாக இல்லை. மற்றும் சில கணக்குகளின் விடை பின்ன எண்ணாக வந்ததால் மாணவர்கள் சோர்வும் மனக் குழப் பமும் அடைந்துவிட்டார்கள்.

3. அல்ஜீப்ரா, ஜியாமெட்ரி கேள்வித் தாள்கள் கடினமாகவும் நீளமாகவும் இருந்தன. அவற்றின்

தெலுங்கு மொழி பெயர்ப்பில் ஒரு கணக்கையே காணவில்லை!

4. சரித்திரக் கேள்வியின் தமிழ்மொழி பெயர்ப்பு ஆண்டவனைத் தவிர வேறு யாருக்கும் சுலபமாகப் புரியக் கூடியதாய் இல்லை.

5. ஸயன்ஸ் கேள்வித்தாளில் அடங்கியிருந்த வார்த்தைகள் மாணவர்களுக்குப் புதிர்போல் இருந்தன.

6. சம்ஸ்கிருத, தெலுங்கு கேள்வித் தாள்களிலும் மாணவர்களைப் பிரமிக்க வைக்கும் தவறுகள் இருந்தன.

இந்த லட்சணத்தில் பரீட்சை ஆரம்பமான அன்றே கணக்குப் பரீட்சையை வைத்துவிட்டார்கள். கணக்குக் கேள்விகள் குளறுபடியாக இருந்ததால் திகைப்பும் சோர்வும் அடைந்துபோன மாணவர்கள் பின்னால் வந்த பரீட்சைகளில் எவ்வாறு தெளிவாக எழுதியிருக்க முடியும்? அதிலும் மேற்கூறிய பல குற்றங்கள் நிறைந் திருந்த கேள்வித்தாள்கள் மாணவர்களை என்ன பாடு படுத்தியிருக்கும்?

"ஸெலக்ஷன் பரீட்சையை மறுபடியும் புகுத்த வேண்டும்" என்று கேட்கும் தலைமை உபாத்தியாயர் களே சகிக்க முடியாமல் பரீட்சைத் தாள்களைக் கண்டிக்க முன் வந்திருக்கிறார்கள் என்றால், அவை எவ்வளவு மோசமாக இருந்திருக்க வேண்டும்?

* * *

இந்தப் படுமோச அக்கிரமத்தைக் கண்டித்து மாணவர்களிடமிருந்து ஏராளமான கடிதங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன.

"இவ்வருடம் கேள்வித் தாள்களைத் தயாரித்துள்ள ஆசிரியர்கள் தங்கள் மனம் போன போக்கில் தயாரித்திருக்

கிறார்கள். எல்லாக் கேள்விகளும் கடினமாகவும் புரிந்து கொள்ள முடியாமலும் இருக்கின்றன. பௌதீகப் பாடத்தில் வகுப்பிலே புதிய வார்த்தைகளைச் (*New Terms*) சொல்லிக் கொடுத்து விட்டு, கேள்வித் தாளில் பழைய வார்த்தைகளை (*Old Terms*) உபயோகித்திருக்கிறார்கள். சிற்சில வார்த்தைகளுக்கு மட்டும் ஆங்கிலப் பதங்களைக் கொடுத்துள்ளார்கள். சம்பந்தமில்லாத கணக்குகளைக் கொடுத்திருக்கிறார்கள். எங்கள்மீது ஏன் இவ்வளவு கோபம் அவர்களுக்கு ?'' என்று வலங்கைமானைச் சேர்ந்த ஒரு மாணவர் மனம் உடைந்து எழுதியிருக்கிறார்.

“ இந்த வருஷம் நடந்த எஸ். எஸ். எல். சி. பரீட்சையில் கேள்வித்தாள்கள் பொருள் விளங்காதபடி மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. எங்களுக்குத் தமிழில் பூகோளக் கேள்வித்தாள் கிடைத்தது. அதில் பூகோளப் படம் சம்பந்தமான இரண்டு கேள்விகள் இருந்தன. அவை இரண்டிலும் ‘ **வேண்டுமானல்** குறித்துக் கீழே வருவன வற்றின் பெயரைக் கொடுக்கப்பட்ட படத்தில் குறிக் கவும் ’ என்று எழுதப்பட்டிருந்தது. இதைப் படித்த வுடன் இந்தக் கேள்விக்கு விடையளிப்பது நம்முடைய இஷ்டம் போலிருக்கிறது என்றுதான் முதலில் எண்ணத் தோன்றும். ஆனால் அதே கேள்வித்தாளில் ‘ எல்லாக் கேள்விகளுக்கும் விடை யளிக்கப்பட வேண்டும் ’ என்று எழுதப்பட்டிருந்தது. உடனே ஆங்கில வினாத் தாளை வாங்கிப் பார்த்ததும் அதில் ‘அவசியமான இடத்தில் குறித்துப் பெயரிடவும்’ என்று பொருள் படும்படி “ *Mark Wherever Necessary and Name......* ” என்று எழுதி யிருந்தது. மாணவர்களுள் ஒரு சிலரே என்னைப் போல் ஆங்கிலத் தாளைப் பார்த்துத் தங்கள் சந்தேகத்தைப் போக்கிக் கொண்டனர். மற்றவர்கள் என்ன செய்வ தென்று அறியாமல் விழித்தனர். ஆகையால் இனிமே

லாவது பல ஆயிரக்கணக்கான மாணவர்களைத் திகைக்க வைக்கும்படி கேள்வித் தாள்களை மொழிபெயர்க்காமல் இருக்கவேண்டும்" என்று குன்னூரிலிருந்து ஒரு மாணவர் கண்ணீர் விட்டு எழுதியிருக்கிறார்.

கரூரிலிருந்து ஒரு மாணவர் எழுதியுள்ள கணக்குத் தாள் விவரங்களையும் இங்கே குறிப்பிடுகிறோம் :—

" இவ்வருடம் எலிமெண்டரி கணிதம் இஷ்டப்பாட கணிதம், பௌதீகம் முதலிய கேள்விகள் மிகவும் கடினம். எலிமெண்டரி கணிதக் கேள்வித் தாளில் பதினைந்து கணக்குகள் உள்ளன. அதில் மூன்று கணக்குகள் ஆறும் வகுப்பு வாசிக்கும் மாணவர்களின் அறிவுக்கு மேம்பட்டது. இரண்டு கணக்குகள் பின்னம். ஒரு கணக்கு கடினம். இந்த ஆறு கணக்குகளுக்கு மொத்தம் மார்க் 41. இதே தேறுவதற்குரிய மார்க்கைவிட அதிகமா யிருக்கிறது. மீதி ஒன்பது கணக்குகளையும் சரியாகப் போட்டால்கூட போதிய மார்க் வருமா என்பது சந்தேகம்தான்.........அந்தக் கடினமான கணக்குகளைப் பார்த்த மாணவர்களுக்கு மூளை குழம்பியிருக்கும். உருளைக் கணக்கு ஒன்று கொடுத்திருக்கிறார்கள். அவ்வுருளைக் கணக்கு என்னவென்றே தெரியவில்லை. சில மாணவர்கள் அந்தக் கணக்குக்கு கனபரிமாணம் (*Volume*) கண்டுபிடித் திருக்கிறார்கள். சில மாணவர்கள் அதைப் படித்துப் பார்த்துவிட்டு ஒன்றும் புரியாமல் வெளியே வந்து விட்டார்கள். கணக்குப் பரீட்சை அன்றே மாணவர் களின் உற்சாகம் குறைந்துவிட்டது. எந்த வருடத் திலும் இதைப்போல் பாடத்தில் இல்லாத மூன்று கணக்கு களும், பின்ன விடையுள்ள இரண்டு கணக்குகளும், கடினமான ஒரு கணக்கும் கொடுக்கப்பட்டதில்லை. கணக்கு கேள்வித்தாள்தான் இப்படி யென்றால் மற்றக்

கேள்வித் தாள்களும் அதைப்போலவே மோசமாக இருக்கின்றன......''

திருச்சிராப்பள்ளியிலிருந்து மற்றொரு மாணவர் மனம் வெதும்பி எழுதியிருப்பதைப் பாருங்கள் :—

"யாதொரு பயமுமின்றி நான் பரீட்சைகளுக்குச் சென்று எழுதிப் பாஸ் செய்வது வழக்கம். இந்த வருஷமும் அவ்வாறே பயமின்றித்தான் எஸ் எஸ். எல். சி. பரீட்சைக்குச் சென்றேன். ஆனால் அங்கு கணித வினாத் தாளைக் கண்டதும் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. பாஸ் செய்யும் நம்பிக்கையை இழந்தேன். எல்லாக் கணக்குகளும் மிகக் கடினமாக இருந்தன. விடைகளும் பின்ன எண்களாக இருந்தன. பின்ன எண் வந்ததால் தாங்கள் ஏதோ தவறு செய்திருப்பதாக நினைத்துப் பல மாணவர்கள் தாங்கள் போட்டிருந்த கணக்குகளை அடித்து விட்டார்கள். அதிகாரிகள் இனிமேலாவது கேள்வித் தாள்களை இவ்வளவு மோசமாகக் கணித்து வதைக்காதிருப்பார்களா ?''

இதுபோல இன்னும் எத்தனையோ மாணவர்கள் மனம் உடைந்து எழுதியிருக்கிறார்கள். இவ்வாறாக, சென்னை மாகாணப் பரீட்சகர்கள் தயாரித்த கேள்வித் தாள்களின் கண்ணராவி பதினாயிரக்கணக்கான மாணவர்களின் கண்ணீரில் வந்து முடிந்திருக்கிறது.

இப்படி 68,000 பிள்ளைகளின் இளம் உள்ளங்களைப் புண்படுத்திக் கொலை செய்த பாதகர்களுக்குத் தண்டனை ஒன்றும் கிடையாதா ? அவர்கள் இன்னும் கல்வி இலாகாவில் இருக்கலாமா ? அவர்கள் ஆசிரியர்களாயிருந்தால் அப்படிப்பட்ட ஈவிரக்கமற்ற பாதகர்களிடம் நம்முடைய அருமைக் குழந்தைகளை ஒப்புவிக்கலாமா ?

* * *

இந்த வருஷத்து எஸ். எஸ். எல். சி. பரீட்சைக்குச் சென்று எழுதிய சிறுவர் சிறுமிகளுக்கு சில வார்த்தைகள் கூற விரும்புகிறோம்.

பரீட்சை எழுதியபோது அவர்கள் பட்ட கஷ்டங்களுக்காக நமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். அப்படிப்பட்ட பரீட்சைத் தாள்களைத் தயாரித்தவர்களை மன்னிக்கும்படியாகக் கடவுளைப் பிரார்த்திக்கும்படியும் கேட்டுக் கொள்கிறோம்.

பரீட்சை எழுதிய பிள்ளைகளில் எத்தனை பேர் தேறுவார்கள், எத்தனை பேர் தவறுவார்கள் என்று நாம் இப்போது சொல்ல முடியாது.

பரீட்சைத் தாள்கள் இவ்வளவு கொடுமையாக இருந்ததை முன்னிட்டு ஒருவேளை திருத்துகிறவர்கள் தாராளமாகவே மார்க்குகள் கொடுக்கலாம். ஆகையால் வழக்கம்போல் பாதிக்குப் பாதியாவது தேறலாம்.

எப்படியானாலும், தேறியவர்கள் எல்லாரும் தகுதி பெற்றவர்கள் என்றும் தேறாதவர்கள் தகுதி பெறாதவர்கள் என்றும் ஏற்படாது.

பரீட்சையில் நன்றாக எழுதவில்லையே என்று யாரும் சிறிதும் மனம் வருந்த வேண்டாம்.

பரீட்சை தேறவில்லை என்று ஏற்பட்டாலும் மனதைப் புண்படுத்திக் கொள்ள வேண்டாம்.

பள்ளிக்கூடத்தில் பரீட்சையில் தேறாதவர்கள் எத்தனையோ ஆயிரம் பேர் உலகமெங்கும் வாழ்க்கையில் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

படுகொலை செய்யும் பள்ளிக்கூடங்களின் மண்ணை உதறிவிட்டு ஏதேனும் ஒரு வாழ்க்கைத் துறையில் இப்போதே ஊக்கத்துடன் ஈடுபடுங்கள்.

விவசாயம், வர்த்தகம், கைத்தொழில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதில் பயிற்சி பெறுங்கள்.

இந்த வருஷம் எஸ். எஸ். எல். சி. பரீட்சையில் தேறியவர்கள் பி.ஏ. பாஸ் செய்துவிட்டுக் காலேஜிலிருந்து வெளிவருவதற்குள், வாழ்க்கைத் துறையில் ஈடுபட்ட நீங்கள் நிச்சயம் வெற்றி அடைந்திருக்கக் காண்பீர்கள்!

# பாராட்டுகிறோம்

**ஜனம்** மாதவமேனன் அவர்கள் சட்ட இலாகாவுக்கு மந்திரியாயிருந்து கொண்டு கல்வி இலாகா மந்திரியாகவும் பொறுப்பு வகிக்க முன் வந்தபோது நாம் நம்முடைய அனுதாபத்தையும் கவலையையும் தெரிவித்துக் கொண்டிருந்தோம்.

ஏனெனில், சட்ட இலாகாவே கொஞ்சம் கஷ்டமான இலாகா. வக்கீல்கள், பப்ளிக் பிராசிகியூடர்கள், மாஜிஸ்ட்ரேட்டுகள், கோர்ட்டுகள், குற்றவாளிகள், சிறைகள், வார்டர்கள், கம்யூனிஸ்ட் கைதிகள்—ஆகியவர்களோடு விடாமல் மாரடிப்பது இலேசான காரியம் அல்ல.

கல்வி இலாகாவிலோ என்றால், ஓயாமல் அதிகச் சம்பளம் கேட்கும் உபாத்தியாயர்கள், கிராண்ட் அதிகம் கேட்கும் பள்ளிக்கூடங்கள், உளுத்துப்போன கல்வி அதிகாரிகள், பரீட்சை தேறாத மாணுக்கர்கள், வீரத தமிழ் ஆசிரியர்கள், வகுப்பு வாரி ஸீட்டுக்கள், கட்டாய ஹிந்தி, கருப்புச்சட்டை—ஆகிய பல சஞ்சித கர்மங்களைக் கட்டிக்கொண்டு தொல்லைப்படவேண்டும்.

இவ்வளவு தொல்லைகளுக்கும், தர்ம சங்கடங்களுக்குமிடையே, கல்வி மந்திரி பதவி வகிப்பவர் நாம் பாராட்டக் கூடியதான ஏதாவதொரு காரியத்தைச் செய்து விட்டால், அதைப் பூதக் கண்ணாடி வைத்துப் பார்த்தாவது தெரிந்துகொண்டு, நாம் களிப்படைந்து அவரையும் பாராட்டுவது நியாயமே யல்லவா ?

* * *

அன்னிய அரசாங்க இயந்திரத்துக்குக் குமாஸ்தாக்களை உற்பத்தி செய்து கொடுப்பதே முக்கிய இலட்சியமாகக் கொண்ட கல்வி முறை இந்தியா தேசத்தில் நூற்றைம்பது வருஷத்துக்கு மேலாக நிலைபெற்று வந்திருக்கிறது. அந்தக் கல்வி முறை சுதந்திர இந்தியாவுக்குப் பொருந்தவே பொருந்தாது. அதை அடியோடு ஒழித்துவிட்டு வேறு முறையை அமைப்பதுதான் நல்லது. ஆனால், அப்படி பழைய முறையை ஒழிப்பதற்கு வேண்டிய தைரியம் உள்ளவர் யாரும் இல்லை. அத்தகைய தைரியசாலி காந்தி மகான் ஒருவர்தான். அவர் இன்று நம்மிடையே இல்லை. ஆகையால் அந்தப் பழைய காலங் கடந்த உளுத்துப் போன குமாஸ்தா கல்வி முறையையே இன்னமும் கட்டிக்கொண்டு அழுகிறோம். அந்தக் கல்வி முறையில் உள்ள குறைகளைப் போக்கிச் சீர்திருத்திச் சுதந்திர இந்தியாவுக்குத் தகுதியாக்குவதற்காக நம் தேசீயத் தலைவர்களும் காங்கிரஸ் மந்திரிகளும் முயன்று வருகிறார்கள். அவர்களுடைய முயற்சி இதுவரையில் கணிசமான பலன் எதுவும் அளித்துவிடவில்லை. சல்லடைத் துவாரங்களை ஒவ்வொன்றாக அடைப்பதற்குச் செய்யும் முயற்சியைப் போலவே கல்விச் சீர்திருத்த முயற்சியும் இருந்து வருகிறது. ஒரு துவாரத்தை அடைத்துவிட்டு இன்னொரு துவாரத்துக்குப் போவதற்குள் அடைத்த துவாரம் மறுபடியும் பொத்துக் கொண்டு விடுகிறது.

பழைய கல்வி முறையில்—அதாவது இன்னமும் நம்மைப் பிரிய மனமின்றி அட்டைபோல் ஒட்டி நம் குழந்தைகளின் இரத்தத்தை உறிஞ்சிக் கொண்டிருக்கும் கல்வி முறையில்—பாஷைகள் வகித்த ஸ்தானம் முக்கியமாகச் சீர்திருத்த வேண்டிய காரியங்களில் ஒன்றாயிருந்தது. நமது பள்ளிக் கூடங்களிலும் கலாசாலைகளிலும் ஆங்கில பாஷையே தனியரசு செலுத்தி வந்தது. பிள்ளைகளின் தாய் மொழியும் மற்ற இந்திய மொழிகளும் மூலையில் ஒதுங்கி நின்று, அழைக்கும்போது அருகில் வந்து, கைகட்டி வாய் பொத்தி ஆங்கிலத்துக்குச் சேவகம் செய்து வந்தன. இந்தப் படுகேவலமான நிலைமையைச் சுதந்திர இந்தியாவில் யாரும் சகிக்க முடியாது தானே ?

ஆகையால் மாகாணங்களில் காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்டவுடனே காங்கிரஸ் மந்திரிகள் பாஷை சீர்திருத்தத்தை முதலாவது சீர்திருத்தமாக எடுத்துக் கொண்டனர். ஆங்கிலத்தைச் சர்வாதிகார பீடத்திலிருந்து இறக்கவும், தாய் பாஷைக்கும் தேசீய பாஷையாகிய ஹிந்திக்கும் தக்க இடம் கொடுக்கவும் முயன்றனர்.

சென்னையில் மாஜி கல்வி மந்திரி ஸ்ரீ டி. எஸ். அவிநாசிலிங்கம் தமிழ் நாட்டில் தமிழுக்கும் தெலுங்கு நாட்டில் தெலுங்குக்கும்—இப்படித் தாய் மொழிகளுக்கு அதிக கௌரவம் கொடுக்க ஏற்பாடு செய்தார். தேசீய பாஷையாகிய ஹிந்தி போதனைக்கும் ஏற்பாடு செய்தார். ஹிந்தியைக் கட்டாய பாடமாகப் போதிப்பதா, இஷ்ட பாடமாகப் போதிப்பதா, பதினாலு அணா கட்டாயத்துக்கும் இரண்டணா இஷ்டத்துக்கும் போதிக்குமாறு விடுவதா என்னும் மகத்தான பிரச்னைகளில் கொஞ்சம் குழப்பம் ஏற்பட்டது. கருப்புச் சட்டைப் பயம் இத்தகைய குழப்பத்துக்குக் காரணமாயிருந்தது. கடைசியில் அந்தப் பயம் ஒரு வழியாகத் தீர்ந்ததும் குழப்பமும்

ஒருவாறு தெளிந்தது. ஆனால், மொத்தத்தில் எந்தெந்த பாஷைக்கு எந்தெந்த வகுப்பில் எவ்வளவு இடம் என்னும் விஷயம் நிச்சயமாகவில்லை. வருஷத்துக்கு வருஷம் பாஷைத் திட்டங்கள் மாறித் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தன. பிள்ளைகளும் தொல்லைப் பட்டார்கள். ஆசிரியர்களும் தொல்லைப்பட்டார்கள் ! மந்திரிமார்களும் தொல்லைப் பட்டார்கள்.

* * *

தாய் பாஷை தமிழ்—தேசீய பாஷை ஹிந்தி,—சர்வ தேச பாஷை ஆங்கிலம், இந்த மூன்று பாஷைகளையும் தமிழ் நாட்டுக் குழந்தைகள் கற்றுக்கொண்டேயாக வேண்டும். இவற்றுடன், இந்தியாவின் பூர்வீக கலாச் சார பாஷையான சம்ஸ்கிருத பாஷைக்கும் இடம் கொடுக்கத்தானே வேண்டும்? சம்ஸ்கிருத பாஷையின் அபூர்வமான செல்வங்களை யெல்லாம் தென்னாடல்லவோ இத்தனை காலமும், போற்றிக் காப்பாற்றி வந்திருக்கிறது ? ஆப்கானியர் மொகலாயர் படையெடுப்பினால் வட நாட்டில் வடமொழிச் செல்வம் மறைந்துவிட்டதே ! நமது சங்கரர், ராமானுஜர் போன்றவர்கள் அல்லவா காப் பாற்றி வந்திருக்கிறார்கள் ? உபநிஷதமும், பகவத் கீதையும், வால்மீகியும், காளிதாஸனும், பவபூதியும், பட்டபாணனும் அளித்திருக்கும் மகா இலக்கியச் செல் வங்களைத் தென்னாடு அலட்சியம் செய்ய முடியுமா ? செய்துவிட்டால் நஷ்டம் யாருக்கு ? இந்த நாளில் சம்ஸ் கிருதம் கற்பிக்கும் தனிப்பட்ட வேத பாடசாலைகள் மறைந்துபோய் விட்டன. சாதாரணப் பள்ளிக்கூடங் களிலும் சம்ஸ்கிருதம் கற்க வழியில்லாவிட்டால், அந்தப் பாஷை அரோகராத்தான் ! இவ்வாறு பாரத நாட்டின் பழம் பெரும் கலாச்சாரத்திலும் பண்பாட்டிலும் மிகுந்த

சிரத்தை கொண்ட பெரியோர்களும் அறிஞர்களும் தங்கள் கவலையைத் தெரிவித்தனர்.

இந்தக் கோரிக்கைகள் எல்லாவற்றையும் சம்மேளனப்படுத்திச் சமரசம் செய்து ஹைஸ்கூல்களில் பாஷைகளின் போதனைக்கு ஒரு திட்டம் வகுத்து வெளியிட்டார் கல்வி மந்திரி கனம் மாதவமேனன். துரதிர்ஷ்ட வசமாக அதில் பெரிய குறை இருந்துவிட்டது! நல்ல எண்ணம் படைத்தவர்களுக்கு அது கண்ணை உறுத்தும் குறை; எதிரிகளுக்கும் விஷமிகளுக்கும் மனதிற்குள் கொண்டாட்டம் அளிக்கக்கூடிய குறை.

குறையுடன்கூடிய மேற்படி திட்டத்தின் முக்கிய அம்சங்கள் இவை :—

1. இங்கிலீஷ் மூன்ருவது ஸ்தானத்துக்குத் தள்ளப் படும். எனினும் அதை நம் ஹைஸ்கூல் பிள்ளைகள் வாரத்துக்கு ஐந்து பீரியட் கட்டாயமாகக் கற்றுத் தொலைக்கவேண்டும்.

2. தேசீய பாஷை ஹிந்தி நடுநாயகமான இரண்டாவது ஸ்தானத்தை வகிக்கும். அதை வாரத்துக்கு நாலு பீரியட் அவசியமாக நம் பிள்ளைகள் படித்தாக வேண்டும்.

3. பிரதான முதல் பாஷையாக எந்த பாஷையைக் கற்பது என்ற கேள்விக்கு மூன்று விடைகள் :

(அ) தமிழ் நாட்டில் உள்ள தமிழ்க் குழந்தைகள் தமிழை முதல் மொழியாகக் கற்கலாம்.

(ஆ) தமிழ் நாட்டில் உள்ள தெலுங்குக் குழந்தைகள் தெலுங்கை முதல் மொழியாகக் கற்கலாம். (அதே மாதிரி தெலுங்கு நாட்டில் வசிக்கும் தமிழ்க் குழந்தைகளும் தமிழை முதல் மொழியாகக் கொள்ளலாம்).

(இ) மற்ற எல்லாப் பாடங்களும் தாய் பாஷையில் இனி நடக்குமாதலால், தாய் பாஷையைத் தனியாகக் கற்க அவசியமில்லை என்று நினைப்போர் இந்தியாவின் புராதன கலாச்சார மொழியாகிய வடமொழியைப் பிரதான முதல் மொழியாக எடுத்துக் கொண்டு படிக்கலாம்.

மேற்படி பாஷைத் திட்டம் எவ்வளவோ ஆழ்ந்த யோசனைகளின் பேரில் சமரசப் படுத்தும் நோக்கத்துடன் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பது படிக்கும்போதே தெளிவாகத் தெரிகிறது. ஆயினும் அதில் உள்ள குறையும் தெளிவாகத் தெரிகிறது. தாய் மொழியான தமிழ் அல்லது தெலுங்கையும் கலாச்சார பாஷை சம்ஸ்கிருதத்தையும் போட்டியிட்டு முட்ட விடுவதுதான் அந்தப் பெருங் குறையாகும்.

வெறும் வாயை மெல்லுகிறவர்களுக்கு அவலும் கிடைத்ததுபோல், தேசத்தின் விரோதிகளும் காங்கிரஸ் எதிரிகளும் இதை நன்ருக உபயோகப் படுத்திக் கொள்வார்கள். "சமஸ்கிருத பூதம் தமிழ்க் கன்னியின் கழுத்தை நெறித்துக் கொல்லுகிறது!" என்று கூச்சலிடு வார்கள். முக்கியமாக, தமிழ் நாட்டில் இத்தகைய பூசல் களைக் கிளப்பியே வாழ்க்கை நடத்தி வருகிறவர்களுக்குக் கொண்டாட்டமாயிருக்கும்.

எதிரிகளின் கொண்டாட்டம் ஒரு புறம் இருக்க, தமிழ் நாட்டில் தமிழையும், தெலுங்கு தேசத்தில் தெலுங் கையும் தனிப்பாடமாகக் கற்கவேண்டிய அவசியமில்லை என்ற நிலைமை அபத்தமானதுதானே ?

இதையெல்லாம் பலரும் எடுத்துக் காட்டினுர்கள். கோயமுத்தூரில் நடந்த தமிழ் வளர்ச்சி மகாநாட்டில் தீர்மானமும் போட்டார்கள். கனம் மாதவமேனனின் காதிலும் இந்தக் கூக்குரல்கள் விழுந்தன.

* * *

ஜனநாயகம் என்பது பொது மக்களின் கருத்தைக் கூடியவரையில் அறிந்து அதையொட்டி அரசியல் நடத்துவதுதான். தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று பிடிவாதம் பிடிப்பதல்ல. சத்தியம், நேர்மை, மனச்சாட்சி சம்பந்தப்பட்ட காரியங்களிலும் கொள்கை களிலும் பொது ஊழியர்கள் இம்மியும் அசையாமல் உறுதியுடன் நிற்கவேண்டும். மற்றபடி சாதாரண சௌகரியங்களை முன்னிட்ட காரியங்களில் மக்களின் கருத்தையொட்டிப் போகவேண்டும். இந்த முறையில் கனம் மாதவமேனன் ஜனநாயக தத்துவத்தை யனுசரித்து நடந்துகொள்ள முன்வந்தார். பாஷை போதனைத் திட்டத்தை மறுபடியும் மாற்றினார். நல்ல முறையில் மாற்றியிருக்கிறார்.

முதல் மொழிக் கென்று அளித்திருந்த ஆறு பீரியடுகளில் ஒரு பீரியடை எடுத்தார். இரண்டாவது ஹிந்தி பாஷைக்குக் கொடுத்திருந்த நாலு பீரியடில் இரண்டை எடுத்தார்.

இந்த மூன்று பீரியடையும் புராதன பாஷைக்கு என்று ஒதுக்கினார். அதாவது இந்த மூன்று பீரியடுகளில் ஒரு மாணாக்கன் இஷ்டப்பட்டால் சம்ஸ்கிருதம் கற்கலாம்; அல்லது பழைய தமிழ் இலக்கியங்களைக் கற்கலாம்.

மற்றபடி தமிழ் நாட்டில் தமிழையும், தெலுங்கு தேசத்தில் தெலுங்கையும் முதல் மொழியாக ஐந்து பீரியடுகள் எல்லா மாணாக்கர்களும் கற்கவேண்டும்.

இது நிராட்சேபணையான திட்டம் என்று கருது கிறோம். இரண்டு விதத்தில் நன்மை பயப்பது.

ஹிந்தி நாலு பீரியடுகளில் இரண்டு பீரியடைக் குறைத்தது ஒரு பெரிய நன்மையல்லவா? போதும். ஹிந்திக்கு வாரம் இரண்டு பீரியடு யதேஷ்டம்!

தாய் பாஷைக்கும் சம்ஸ்கிருதத்துக்கும் போட்டியில்லாமல் போயிற்று.

தாய்பாஷை கட்டாயம் கற்றுக வேண்டும். சமஸ்கிருதம் இஷ்டமுள்ளவர்கள் கற்கலாம்.

ஏதேதோ கஷ்டப்பட்டுத் திண்டாடித் திணறிக் கடைசியில் பாஷை விஷயமாக ஒரு நல்ல முடிவுக்கு வந்ததின் பொருட்டுக் கல்வி மந்திரி கனம் மாதவமேனனை மனமாரப் பாராட்டுகிறோம்.

இந்தப் புதிய திட்டம் நிகழும் வருஷத்தில் அமுலுக்கு வராது என்று தெரிகிறது. இதுதான் சிறிது ஏமாற்றத்தை அளிக்கிறது. போன வருஷத்து முறையே இந்த வருஷத்தில் அனுசரிக்கப்படும் என்றும், புதிய திட்டம் அடுத்த வருஷத்தில் வரும் என்றும் அறிகிறோம்.

சாத்தியமானல், இந்த வருஷத்திலே புதிய திட்டம் அமுலுக்கு வருவது நலம் என்று கருதுகிறோம். பள்ளிக் கூடங்களில் பாஷைப் பிரச்னை ஒரு வழியாகத் தீர்ந்து விட்டது என்று திருப்தியடைய ஏதுவாயிருக்கும். கல்வி இலாகாவின் நூறு பிரச்னைகளில் ஒன்று தீர்ந்து விட்டது என்ற குதூகலத்துடன் மற்ற 99 பிரச்னைகளைக் கவனிக்கலாம் அல்லவா ?

# மடமைக்குப் பலி! அல்லது
# பாக்தாத்—சாக்கடை!

ஜூன் மாதம் 7௳ சென்னை மாகாணத்துச் சிறுவர் சிறுமிகளுக்கு ஒரு பயங்கரமான தினம்.

அன்றைக்கு எஸ். எஸ். எல். சி. பரீட்சை முடிவு வெளியாயிற்று.

இந்த வருஷத்தில் மொத்தம் 66,000 குழந்தைகள் எஸ். எஸ். எல். சி. பரீட்சை எழுதினார்கள். இவர்களில் 28,000 பேர் பரீட்சைகளில் தேறினார்கள். மிச்சம் 38,000 பேர் தேறவில்லை.

இந்த முப்பத்தெட்டாயிரம் பேரும் பதினைந்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்—சிறுமிகள். இந்தக் குழந்தைகளின் இளம் உள்ளங்கள் அன்றைக்கு எப்படித் தவித்திருக்குமோ, கடவுளுக்குத்தான் தெரியும். ;பரீட்சை நடத்தியவர்களுக்குத் தெரியாது ; கல்லால் சமைந்த கல்வி இலாகாவுக்குத் தெரியவே தெரியாது.

குழந்தைகளின் உள்ளங்கள் தவித்துப் புண்பட்டது போதாது என்று, புத்தியற்ற ஆசையுள்ள பெற்றோர்கள்

அவர்களைத் திட்டுவார்கள். சிந்தனையற்ற மற்றச் சிறுவர் சிறுமிகள் பரிகசிப்பார்கள். மாமாக்களும், சித்தப்பாக் களும், தாத்தாக்களும், பாட்டிகளும் குழந்தைகளைப் பிடுங்கி எடுப்பார்கள்.

கருணையற்ற ஆசிரியர்மார்கள் "நீ உருப்பட மாட்டாய் என்று நான் முன்னமேயே சொல்லவில்லையா?" என்று இடித்துக் காட்டுவார்கள்.

புண்ணிலே கோல் இடுவது போன்ற இத்தகைய பேச்சுக்களினாலும் ஏச்சுக்களினாலும் முப்பத்தெட்டா யிரம் பிள்ளைகள் ஏங்கித் தவிப்பார்கள்.

அவர்களில் சிலர் தற்கொலை செய்துகொண்டு உயிரை விடத் துணிந்தால் அதில் வியப்பு ஒன்று மிராது. அத்தகைய அறியாத்தனமான முயற்சி ஒன்றும் பலிக் காமல் போகவேண்டும் என்று கடவுளைப் பிரார்த்திப் போமாக !

* * *

முப்பத்தெட்டாயிரம் குழந்தைகள் பலியானார்களே ! இவர்கள் எந்தப் பலிபீடத்தில் பலியானார்கள் ?—என்று சிறிது யோசித்துப் பார்க்கவேண்டும்.

"இவர்களில் மிகப் பெரும்பாலோர் கிறுக்குப் பிடித்த கல்வி இலாகாவுக்குப் பலி ஆனார்கள் ; மற்றவர்கள் பரீட்சகர்களின் மடமைக்குப் பலியானார்கள்" என்று தான் சொல்ல வேண்டும்.

இந்த வருஷத்து எஸ். எஸ். எல். சி. பரீட்சைத்தாள் களின் அவலட்சணத்தைப் பற்றி அப்போதே பலர் சொல்லிவிட்டார்கள்! பள்ளிக்கூட உபாத்தியாயர்களும் ஹெட்மாஸ்டர்களுமே ஒரு குரல் ஒப்பாரி வைத்து அழுதுவிட்டார்கள் ! ஆகவே, பரீட்சை முடிவு இப்படி யிருப்பது கண்டு யாருக்கும் வியப்பு ஏற்பட்டிராது.

பின்னே, வியப்பு என்ன வென்றால், இவ்வள வெல்லாம் முறையிட்டு அழுது புலம்பிய பிறகுங்கூட கல்வி இலாகா என்னும் பூதம் தன்னுடைய பழைய போக்கிலேயே போய்க்கொண்டிருக்கிறதே—கொஞ்சங் கூட அந்தப் பூதத்தின் கல்மனம் கரைந்திருப்பதாகத் தெரியவில்லையே என்பதுதான்.

இதற்கு ஓர் உதாரணத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

புதிய வருஷத்துக்கு—அதாவது 1951-ம் வருஷத்து எஸ். எஸ். எல். சி. பரீட்சைக்கு—இங்கிலீஷ் பாடப் புத்தகம் வெளியாகி யிருக்கிறது.

*Madras and Andhra Universities* என்று அட்டைத் தலைப்பில் கொட்டை எழுத்தில் முத்திரை பதித்துக் கொண்டு வெளியாகி யிருக்கிறது.

முதல் 11 பக்கம் கவிதைப் பாடங்கள்; பின்னர் 46 பக்கம் வசன பாடங்கள்.

பொறுக்கி எடுத்திருக்கும் கவிதைகள் பெரும்பாலும் பிள்ளைகளுக்கும் பெரியவர்களுக்கும் கூட மனதில் கிரஹித்து நிலை நிறுத்திக் கொள்ளமுடியாத தத்துவ விசாரணைகளாயிருக்கின்றன.

**ஜான் குடிதண்ணீர்** (ஜான் டிரிங்க்வாட்டர்) என்பவரின் பிரார்த்தனை மேற்படி கவிதைகளில் ஒன்று.

பகவத்கீதை, பிரம்ம சூத்திரம், உபநிஷதம், சிவ ஞான போதம், ஹெர்பர்ட் ஸ்பென்ஸரின் நூல்கள்—ஆகியவற்றைக் கரைத்துக் குடித்தவர்களுக்கு இந்தக் கவிதையில் அடங்கிய தத்துவங்கள் ஒருவாறு விளங்க லாம்.

ஜகத்குரு சங்கராச்சாரியரும் ஆசிரியர் ராதா கிருஷ்ணன் அவர்களும், சென்னை ஆர்ச்பிஷப் பாதிரி

யாரும், திருப்பனந்தாள் ஸ்ரீ அருள் நந்தித் தம்பிரானும், ஸ்ரீ காகா கலேல்கர் அவர்களும், இந்தக் கவிதையின் தத்துவங்களை விவாதித்து முடிவு கட்டலாம்.

பதினாறு வயதுக் குழந்தைகளுக்கு இந்தக் கவிதை விளங்கும் என்றோ விளங்க வைப்பது அவசியம் என்றோ தோன்றவில்லை. போகட்டும்.

வசனப் பகுதியைப் பார்க்கலாம். வசனப் பகுதியில் பண்டித ஜவாஹர்லால் இந்தியாவின் பிரதம மந்திரி என்பதை முன்னிட்டு அவருக்குக் கப்பம் செலுத்தும் முறையில் அவர் எழுதிய பாடம் ஒன்று சேர்த்திருக்கிறார்கள்.

மற்றப்பாடங்கள் எல்லாம் மேனாட்டு ஆசிரியர்கள் எழுதியவை.

மேனாட்டு ஆசிரியர்களுக்குள்ளேயும் பிரேயா ஸ்டார்க் (*Frey Stork*) என்னும் பெண்மணி இரட்டிப்பு கௌரவம் பெற்றிருக்கிறார். அந்தப் பரதேவதை எழுதிய புத்தகத்திலிருந்து இரண்டு பாடங்கள் இதில் சேர்க்கப் பட்டிருக்கின்றன !

பிரேயா ஸ்டார்க் உலக யாத்திரை செய்தார். (எதற் காக வென்றால், நம் சென்னை மாகாணத்துக் குழந்தை களின் பிராணனை வாங்குவதற்காகத்தான் !) அந்த யாத் திரையில் பாக்தாத் நகருக்கு வந்தார். பாக்தாத் நகரில் இந்த அம்மாள் அடைந்த அனுபவங்களைப்பற்றி இரண்டு பாடங்கள் நம் சிறுவர் சிறுமிகள் படித்தாக வேண்டும். "*In The Moslem Quarter*" என்று ஒரு பாடம் "*Concerning Smells*" என்று இன்னொரு பாடம். இரண்டாவது பாடத்தில் பாக்தாத் நகரின் சாக்கடைத் துர்நாற்றங்களைப் பற்றி அபாரமாக வர்ணித்திருக்கிறார், ஸ்ரீமதி பிரேயா ஸ்டார்க் அம்மையார் ! !

வீட்டுச் சாக்கடைகளைப் பற்றி வர்ணித்திருக்கிறார்; அதில் திருப்தியடையாமல் வீதிச் சாக்கடைகளைப் பற்றியும் விவரமாகச் சொல்லியிருக்கிறார்.

இந்தப்பாடப் புத்தகத்தைத் தயாரித்த புண்ணியபுருஷருக்குப் பிரேயா ஸ்டார்க் அம்மையாரின் எழுத்தில் மோகமா, அல்லது பாக்தாத் நகரின் மேல் மோகமா, அல்லது பாக்தாத் சாக்கடைகளின் மேலேயே அவர் மோகங்கொண்டு விட்டாரா என்பது ஒரு பெரிய மர்மமான விஷயந்தான்.

பாடம் ஆரம்பிக்கும் தோரணையைப் பாருங்கள் :—

"True happiness, we consider, is incompatible with an inefficient drainage system. It is one of those points of which we differ most fundamentally from the east, where happiness and sanitation are not held to have any particular connection."

தமிழில் இதன் சாராம்சமாவது :—

"சாக்கடைத் திட்டம் சரியாக இல்லாவிட்டால் அவ்விடத்தில் உண்மையான சந்தோஷம் இராது என்று நாம் கருதுகிறோம். கீழ்நாட்டாரோடு நாம் அடிப்படையில் மாறுபடுகிற விஷயங்களில் இது ஒன்று. சுகாதார சுத்தத்துக்கும் சந்தோஷத்துக்கும் குறிப்பிட்ட சம்பந்தம் எதுவும் உண்டு என்று அங்கே (கீழ்நாட்டில்) கருதப்படுவதில்லை."

மேற்கண்ட வாசகத்தில் "நாம்" என்பது மேனாட்டாரை, முக்கியமாக இங்கிலிஷ்காரர்களைக் குறிக்கிறது. கீழ் நாட்டார் என்றால் பாக்தாத் வாசிகள், இந்தியர்கள். சீனர்கள் எல்லாருந்தான்.

ஆக பிரேயா ஸ்டார்க் கூறுவதின் தாத்பரியம் என்னவென்றால், "மேனாட்டார் மிகவும் சுத்தமானவர்கள்,

கீழ் நாட்டார் சாக்கடை அசுத்தங்களில் கிடந்து உழலு கிறவர்கள் " என்பது தான்.

இப்பேர்ப்பட்ட அருமையான விஷயத்தை— மிஸ்மேயோ அம்மாளின் மூத்த சகோதரி எழுதிய அரும் பெரும் உண்மையை நம்முடைய பள்ளிக்கூடங்களில் சிறுவர்—சிறுமிகளுக்குப் பாடமாக வைக்க வேண்டியது அவசியந்தானு ? இவ்விதம் கீழ் நாட்டார் அசுத்தத்தில் உழலுகிறவர்கள் என்று பாடத்தில் படிக்கும் குழந்தை களின் மனோ நிலை என்னவாகும்? ஆங்கில இலக்கியம் என்னும் மகாசமுத்திரம் விரிந்து பரந்து கிடக்க, இந்த பாக்தாத் சாக்கடையிலே தானு நம்முடைய இளம் பிள்ளைகள் இறங்கிக் குளிக்க வேண்டும் ?

பாக்தாத் சாக்கடைகளின் நாற்றத்தை நன்கு அனுப வித்து வர்ணிக்கும் ஸ்ரீமதி பிரேயா ஸ்டார்க் அம்மையார் மேலும் ஓரிடத்தில் சொல்லுகிறுர் :—

"The diphtheria, however, was started by people who lived a most sanitary life at Rustum farm, far from such slums as mine"

இந்த அம்மாள் பாக்தாத்தில் தங்கிய பகுதி சாக்கடை நாற்றம் சூழ்ந்த கேவலமான சேரி. ஆனுல் இந்தச் சேரியில் வசித்தவர்களிடமிருந்து 'டிப்தீரியா' என்னும் கொடிய தொற்று நோய் தோன்றவில்லை. வெகு தூரத்தில் "ரஸ்டம் பண்ணை" என்ற இடத்தில் மிகச் சிறந்த சுகாதார விதிகளின்படி வாழ்க்கை நடத்தியவர்க ளிடமிருந்தே மேற்படி தொற்று நோய் பரவிற்றும்! "இந்த அதிசயத்தை என்னவென்று சொல்வது ? சுகா தாரத்தைப் பற்றி உபதேசிப்பவர்களின் உபதேசமெல் லாம் பயனுள்ளவையா ?" என்று பிரேயா ஸ்டார்க் தமது சந்தேகத்தை வெளிப்படுத்தியிருக்கிறுர்.

இந்த எஸ். எஸ். எல். சி. பாடப் புத்தகம் தயாரித்த மகானுக்கும் சில சந்தேகங்கள் உதித்து அவரை வாட்டத் தொடங்கிவிட்டன. முதலில் 'ரஸ்டம் பண்ணை'யைப் பற்றி அவருக்கு நன்கு தெரியவில்லை. ஆகவே புத்த கத்தின் கடைசியில் பாடங்களுக்கு அவர் எழுதியிருக்கும் குறிப்புகளில்

*"This place appears to have been outside the city"* என்று அர்த்த புஷ்டியுடன் குறிப்பிட்டிருக்கிறார். புத்தகம் தொகுத்தவருக்கே நிச்சயம் தெரியாமல், 'தோன்று கிறது' (*appears*) என்ற வார்த்தையை உபயோகித்திருக் கிறார் என்றால் இது நம் பிள்ளைகளுக்கு எப்படித் தோன்றும் ?

அவருடைய சந்தேகமும் சங்கடமும் அதுமட்டு மல்ல. பிரேயா ஸ்டார்க் என்னும் மாதரசி, "சாக்கடைப் பிரதேசத்தில் வசித்த எனக்கு 'டிப்தீரியா நோய்' வர வில்லை. சுத்தமான இடத்தில் சுகாதாரமாக வசித்தவர் களுக்குத்தான் வந்தது!" என்று சொல்லியிருக்கிறார் அல்லவா ? இதை ஆதாரமாகக்கொண்டு, ஏற்கனவே அசுத்தப் பிரியர்களான கீழ்நாட்டுச் சிறுவர்கள் மேலும் அசுத்தத்திலேயே உழலத் தீர்மானித்து விட்டால் என்ன செய்வது ? ஆகையால் "மிஸ் ஸ்டார்க் சொல்வதை அதிக 'ஸீரியஸ்ஸாக' எடுத்துக்கொண்டு விடாதீர்கள் !" என்று பிள்ளைகளுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறார்.

"She does not mean us to take this very seriously as she belives that it is best to live under healthy conditions"

மேற்படி வாக்கியத்தில் அந்த 'வெரி' (*very*) என்ற வார்த்தை விழுந்திருக்கும் அழகையும் பொருத்தத்தையும் சிந்தியுங்கள். 'வெரி ஸீரியஸ்'ஸாக எடுத்துக்கொள்ளக் கூடாதாம். கொஞ்சம் ஸீரியஸ்ஸாக எடுத்துக்கொள்ள

வேண்டுமாம் ! இந்த அபத்தக் களஞ்சியத்தையும் அபத்த களஞ்சியத்துக்கு அபத்தக் குறிப்புக்களையும் நம்முடைய பிள்ளைகள் படித்துப் பரீட்சையில் தேறவேண்டுமாம் !

வாத்தியார்களுக்குப் பரீட்சை வைத்தாலே தேற மாட்டார்களே ? சிறுவர்களும் சிறுமியர்களும் எப்படித் தேறுவார்கள் ?

*　　　　*　　　　*

இந்தியா தேசத்து மகான்களும் அறிஞர்களும் எத்தனையோ பேர் அருமையான நல்ல ஆங்கில நடையில் எவ்வளவோ கடுமையான விஷயங்களைப் பற்றி எழுதியிருக்கிறார்கள் ; இன்னமும் எழுதிக்கொண்டு வருகிறார்கள்.

ஆங்கில நாட்டிலிருந்து வந்து இந்தியர்களுடைய வாழ்க்கையில் ஒன்றுபட்டுக் கலந்துகொண்ட சகோதரி நிவேதிதை, டாக்டர் பெஸண்ட், பூஜ்யர் ஆண்ட்ரூஸ் போன்றவர்கள் இந்திய நாகரிகத்தையும், இந்தியர் வாழ்வையும் அடிப்படையாகக்கொண்ட அற்புதமான நூல்களை எழுதியிருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட நூல்களிலிருந்து ஏதேனும் நல்ல விஷயங்களை எடுத்துப் போட்டிருக்கக்கூடாதா ?

டாக்டர் டாகூரின் சிறு கதை, ஒன்றைச் சேர்த்திருக்கக்கூடாதா? காந்தி மகானின் ஆத்ம கதையிலிருந்து ஒரு அத்தியாயத்தைப் போட்டிருக்கக் கூடாதா ? சுவாமி விவேகானந்தரின் திருவாக்குக்கு இடந் தந்திருக்கக் கூடாதா ?

ஹாஸ்யம் வேண்டும் என்றால் நம் இணையில்லாத ஆசிரியர் எஸ். வி. வி. யின் கட்டுரை இல்லையா ?

பழைய காலத்தில் இந்திய நாகரிகம் ஜாவா முதலிய தீவுகளில் பரவியதைப் பற்றி டாக்டர் கங்கூலி முதலியவர்கள் எழுதியிருக்கிருர்களே! அந்த நூல்களிலிருந்து ஒரு பகுதியை நமது பிள்ளைகள் படிக்கக்கூடாதா?

ஆங்கில நாட்டு ஆங்கில ஆசிரியர்கள் எழுதியவையாகவே இருக்கவேண்டுமென்ருல், அடிஸன் முதல் ஏ. ஜி. கார்டினர் வரையில் எத்தனேயோ நூற்றுக் கணக்கான ஆசிரியர்கள் மேலான விஷயங்களேப் பற்றி எழுதியிருக்கிருர்களே!

அப்படியிருக்க, பாக்தாத் சாக்கடைதாளு நமது பள்ளி மாணவர்களின் தலையிலே எழுதியிருக்க வேண்டும்?

இம்மாதிரி அபத்தமான விஷயங்களேப் பாடமாக வைத்துவிட்டு, அபத்தமான முறையில் குறிப்புகள் எழுதிவிட்டு, பிள்ளேகள் பரீட்சையில் தேறவில்லேயென்ருல் 'மூடர்கள்; முட்டாள்கள்' என்று திட்டுவதில் என்ன பயன்?

# பரீட்சையில் குரங்குத்தனம்

**ப**ழைய காலத்துக் கல்வி முறையில் பல குறைபாடுகள் இருந்தன. அவற்றைப் போக்கிக் கல்வி முறையைச் சீர்திருத்த வேண்டும் என்று எத்தனையோ அறிஞர்கள் கதறினர்கள்; கதறிக்கொண்டும் இருக்கிறார்கள்.

ஆனாலும், பழைய காலக் கல்வி முறையைப் பற்றிச் சாதகமாகச் சொல்லக் கூடிய சில விஷயங்கள் இருக்கத்தான் இருக்கின்றன. அக் கல்வியின் கீழ் தான் ஸர். டி. முத்துசாமி ஐயர், ஸர் எஸ். சுப்பிரமண்ய ஐயர், ஸர். வி. பாஷ்யம் ஐயங்கார், ஸ்ரீ கோபால கிருஷ்ண கோகலே, லோக மான்ய திலகர், பண்டித மதன் மோகன் மாளவியா, ஸ்ரீ பங்கிம் சந்திர சட்டர்ஜி, ஸர். ஸி. வி. ராமன்—இப்படி எத்தனையோ துறைகளில் பற்பல மேதாவிகள் தோன்றினர்கள்!

கல்வி முறையைச் சீர்திருத்தப் போகிறோம் என்று சிலர் கங்கணம் கட்டிக்கொண்டு ஆரம்பித்த பிறகு, மேற் கண்டவர்களுக்கு இணையானவர்களை அதிகமாக நாம் காண்பதில்லை.

ஆயினும், "உருசி கண்ட பூனை உறியை உறியைத் தாவுமாம்!" என்பது பழமொழி அல்லவா? எனவே, கல்விச் சீர்திருத்தத்தை நிறுத்துவதாக நமது கல்வி இலாகா நிபுணர்களுக்கு உத்தேசம் இல்லை! மேலும் மேலும் சீர்திருத்தம் செய்துகொண்டே இருக்கிறார்கள்!

கடைசியாக, இவர்கள் செய்திருக்கும் சீர்திருத்தம் என்ன தெரியுமா? பரீட்சை முறையில் சீர்திருத்தம். அதைச் சீர்திருத்தம் என்றும் சொல்லலாம்; அல்லது ஆங்கிலத்தில் '*Monkeying*' என்று சொல்வதை அனுசரித்துக் 'குரங்குத் தனம்' என்றும் சொல்லலாம்.

அறிவுள்ள மனிதர்களுக்குப் பூமாலை போட்டால், சிலர் கழுத்திலே போட்டுக்கொண்டிருப்பார்கள்; சிலர் கழட்டி வைப்பார்கள்; சிலர் ஆணியில் மாட்டுவார்கள்.

ஆனால் குரங்கின் கழுத்தில் பூமாலை போட்டால் என்ன செய்யும்? பிய்த்துப் பிய்த்து எறியும். பூவாகவும் பிய்த்து எறியும், இதழாகவும் பிய்த்து எறியும்.

பரீட்சைகளையும் அப்படிப் பிய்த்து எறிய முன் வந்து விட்டார்கள், நம் கல்விச் சீர்திருத்த நிபுணர்கள்!

ஆங்கில பாஷையில் 'குவிஸ்' புத்தகங்கள் என்று சில இப்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் பல விஷயங்களைப் பற்றியும் பல கேள்விகள் இருக்கும். ஒவ்வொன்றுக்கும் நாலு விடைகள் அல்லது ஆறு விடைகள் போட்டிருக்கும். ஒன்றுதான் சரியான விடை. நீங்கள் சரியான விடை சொல்ல முடிகிறதா என்று பார்த்து, உங்கள் மூளையைப் பரிசோதித்துக் கொள்ள வேண்டும் என்பது மேற்படி புத்தகக்காரர்களின் நோக்கம். 'குவிஸ்' புத்தகத்தின் மூலமாகவும் உங்கள் அறிவைச் சோதித்துக் கொள்ளலாம்; அல்லது பைத்தியக்

கார ஆஸ்பத்திரி டாக்டரிடம் சென்றும் சோதித்துக் கொள்ளலாம்.

அந்த முறையை நமது கல்வி நிபுணர்கள் இப்போது நம் பிள்ளைகளின் பரீட்சைகளில் கையாளத் தொடங்கி விட்டார்கள் !

இந்த வருஷத்து எஸ். எஸ். எல். சி. பரீட்சையில் இந்த முறையைக் கையாளப் போகிறார்களாம். இதற்காக நம் கல்வி நிபுணர்கள் தயாரித்துச் சர்க்கார் கல்வி இலாகா, சில மாதிரிக் கேள்வித்தாள்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

மாதிரிக்கு நீங்களும் சில கேள்விகளைப் பார்த்து வையுங்கள்.

### பொது விஞ்ஞானத்தில் கேள்விகள்

[கீழ்க் கண்ட கேள்விகள் ஒவ்வொன்றிற்கும் நாலு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று தான் சரியானது. அந்தப் பொருத்தமான விடையின் முன்புள்ள எழுத்தை மாத்திரம் குறிப்பிட்ட இடத்தில் எழுது.]

1. வாயில் ஸ்டார்ச்சைச் சர்க்கரையாக மாற்றும் என்ஸைம்—(*a*) டிரிப்சின் (*b*) எரிப்சின் (*c*) லைபேஸ் (*d*) டயலின்.

2. கீழ்க்கண்ட உணவுகளில் எதில் குறைவான கொழுப்புச் சத்துக்கள் உள்ளன ? (*a*) அரை பவுண்டு பால், (*b*) வெள்ளை அரை ரொட்டி (*c*) ஒரு பவுண்டு கத்தரிக்காய். (*d*) ஒரு பைண்ட் பால் ஏடு.

3. ஹைடிரஜன் குளோரைடு வாயுவைத் தயாரிக்கக் கீழ்க்கண்ட பொருள்களில் எதை அடர் கந்தக அமிலத்

துடன் சேர்க்கவேண்டும்? (*a*) சுண்ணும்புக் கல் (*b*) மக்னீசியம் ஸல்பேட்டு (*c*) பொட்டாசியம் நைட்டிரேட்டு (*d*) பொட்டாசியம் குளோரைட்.

4. தமனிகளில் (*a*) பிராணவாயு கலந்த ரத்தம் மாத்திரம் ஓடுகிறது (*b*) பிராணவாயு அற்ற ரத்தம் ஓடுகிறது. (*c*) பிராணவாயு கலந்த ரத்தத்தை அல்லது பிராணவாயு அற்ற ரத்தத்தை இதயத்தின் வெண்டிரிக் கிளிலிருந்து வெளியே எடுத்துச் செல்கிறது, (*d*) ஜீரணமடைந்த உணவை உட்கிரகிக்கிறது.

இவற்றில் நாலாவது கேள்வியில் (*c*) விடையில் 'அல்லது' என்பதற்கு என்ன பொருள் என்று யோசியுங்கள்! (*d*) விடையின் முழு அமைப்பை அதாவது 'தமனிகளில் ஜீரண மடைந்த உணவை உட்கிரகிக்கிறது! என்பதைப் படித்து மூளையைச் சிறிது குழப்பிக் கொள்ளுங்கள்.

பிறகு, மூளை தெளிவடைந்த பிறகு இதெல்லாம் பரீட்சை முறையில் சீர்திருத்தமா அல்லது குரங்குத் தனமா என்று சொல்லுங்கள்.

இம்மாதிரி முப்பது கேள்விகள் கொடுப்பார்களாம். எல்லாவற்றையும் படித்துப் பதில் குறிக்க வேண்டுமாம். சரியான பதிலுக்கு மார்க்கு உண்டு. பிழையான பதிலுக்கு மார்க்குக் குறைக்கப்படுமாம்!

பரீட்சைத் தாளில் இது ஒரு பாதிதான். பாக்கிப் பாதியில் நீள நெடுக விடை எழுத வேண்டிய கேள்விகள் கேட்பார்கள்.

இம்மாதிரி சர்க்கார் கல்வி இலாகா மாதிரிக் கேள்வித் தாள்கள் பிரசுரித்த உடனே ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் பிள்ளைகள் பரீட்சை தேற வேண்டிய கவலையினால்

மாதிரிக் கேள்விகள் தயாரித்து அச்சிட்டுப் பிள்ளைகளுக்கு வழங்கியிருக்கிறார்கள்.

'நோட்ஸ்' புத்தகங்கள் போட்டுப் பிள்ளைகளைக் கரையேற்றும் புத்தகக் கம்பெனிக்காரர்கள் சும்மா இருப்பார்களா? அவர்களும் இரவுக் கிரவே நூற்றுக் கணக்கான கேள்விகளையும் ஒவ்வொன்றுக்கும் மூன்று பிழையான விடைகளையும் ஒரு சரியான விடையையும் தயாரித்துப் புத்தகமாக அச்சிட்டு பிரசுரித்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு புத்தகமும் எழுபது பக்கம், நூறு பக்கம்—இப்படி இருக்கின்றன!

இவ்வளவு பக்கங்களில் அடங்கியுள்ள உத்தேசக் கேள்விகளும், பிழையான விடைகளும் சரியான விடைகளும் தெரிந்திருந்து, தலைபோகிற வேகத்தில் பரீட்சையில் பதில் எழுதிவிட்டு நம் பிள்ளைகள் .உருப்படியாக வெளி வரவேண்டும்.

*　　　*　　　*

ஓர் உதாரணம் சொல்லுவோம். சங்கீதக் கலையில் பரீட்சை செய்வதற்கு "சங்கராபரண ராகத்தை ஐந்து நிமிஷம் ஸுஸ்வரமாக ராக பாவம் தோன்றும்படி பாடு!" என்று சங்கீத மாணவர்களைக் கேட்கலாம்.

அல்லது "நான் ஐந்து நிமிஷம் சங்கராபரண ராகத்தை அபஸ்வரம் கலந்து பாடுகிறேன். முக்கால்வாசி சுருதியுடன் சேராமலும் கால்வாசி சுருதியுடன் சேர்ந்தும் பாடுகிறேன். எந்த இடத்தில் சுருதி சுத்தமாக ராக பாவத்துடன் இருக்கிறது என்று சொல்லு!" என்பதாகவும் கேட்கலாம்.

இரண்டாவது முறையில் ஒரு சங்கீத மாணவனுக்குப் பயிற்சி அளித்தால் அவனுக்கு ஏழு தலைமுறை

யிலும் நல்ல சங்கீதம் சித்தியாகுமா என்று யோசித்துப் பாருங்கள் !

'குவிஸ்' முறைக் கேள்விகள் வேடிக்கை—விளை யாட்டு—தமாஷ்களில் சேர்ந்தவை. எப்போதாவது விளையாட்டாகக் கையாண்டு தமாஷ் செய்வதற்கு ஏற்பட்டவை.

இதையே முக்கியமான பரீட்சைக்குக் கையாளத் தீர்மானித்த கல்வி இலாகா பிரகஸ்பதிகளைப் பற்றி என்ன வென்று சொல்கிறது ?

நமது கல்வி முறையில் முக்கியமான குறை, '**அது வாழ்க்கையோடு ஒட்டி அமையவில்லை, கையினல் தொழில் செய்யும் பயிற்சி அளிக்கவில்லை**' என்பதுதான். காந்தி மகான் முதல் அமெரிக்கக் கல்வி நிபுணர்கள் வரையில் அனைவரும் இதை வற்புறுத்தி வந்திருக்கிருர்கள். இந்தக் குறையை நிவர்த்திக்க முயற்சி செய்யாமல், கல்விச் சீர் திருத்தம் என்ற பெயரால் மேற்கண்ட மாதிரி பரீட்சை களில் குரங்குத்தனம் செய்கின்றவர்களைப் பற்றி என்ன வென்று சொல்வது ?

அவர்களைக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும் ! இப்பேர்ப்பட்ட கல்வி நிபுணர்களிடமிருந்து நம்முடைய இளம் பிள்ளைகளையும் ஆண்டவன்தான் காத்தருள் புரிய வேண்டும் !

## தலைமை நீதிபதியின் சாட்சியம்

மாதம் எண்பது ரூபாய் சம்பளமும் பதினெட்டு ரூபாய் கிராக்கிப்படியும் பெற்று ஏதோ வாழ்க்கையை ஒருவாறு சமாளித்துக்கொண்டு வரும் தந்தையிடம் அவருடைய குமாரன் ஒருநாள் பின்வரும் ஜாபிதாவைக் கொண்டு வந்து நீட்டினான்.

| | |
|---|---|
| கணக்கு நோட்டு | 400 பக்கம் |
| இங்கிலீஷ் நோட்டு | 300 பக்கம் |
| தமிழ் நோட்டு | 300 பக்கம் |
| ஸயன்ஸ் நோட்டு | 250 பக்கம் |
| சமூக அறிவு நோட்டு | 250 பக்கம் |
| சமூக அறிவு (பிராக்டிகல்) | 250 பக்கம் |
| டிராயிங் நோட்டு | ... |
| டெஸ்ட் நோட்டுகள் தமிழ் | 200 பக்கம் |
| ,, ,, இங்கிலீஷ் | 200 பக்கம் |
| ,, ,, ஹிந்தி | 200 பக்கம் |

இந்த இடத்தில் மேற்படி தகப்பனார் மூர்ச்சை போட்டு விழுந்து விட்டார்.

பையன் நாலாவது பாரம் படிக்கிறான். முப்பது ரூபாய்க்குப் புத்தகங்கள் போன மாதம் வாங்கியாகி விட்டது. இப்போது இவ்வளவு நோட்டுப் புத்தகங்கள் வாங்க வேண்டும். விலை போட்டுக் கூட்டிப்பார்த்தால் புத்தகம் வாங்கிய செலவுக்கு வந்து விடுகிறது. அந்த ஏழைத் தகப்பனார் பணத்துக்கு எங்கே போவார்? எனவே, அவர் மூர்ச்சை யடைந்து விழுந்து விட்டதில் வியப்பு என்ன ? அவருடைய கதி அப்படியிருக்கட்டும்.

சில தினங்களுக்கு முன்பு சென்னைக்கு விஜயம் செய்திருந்த இந்தியாவின் தலைமை நீதிபதி ஸ்ரீ பதஞ்சலி சாஸ்திரியார் இக் காலத்துப் பள்ளிக்கூடங்களைப் பிடித் திருக்கும் நோட்டுப் புத்தக வியாதியைப் பற்றிக் குறிப் பிட்டுப் பேசினார். "எங்கள் காலத்தில் நாங்கள் ஸ்லேட்டுப் பலகையில் எழுதிப் படித்தோம் !'' என்றார். ஸ்ரீ பதஞ்சலி சாஸ்திரியாரின் காலத்திலும் அவருக்கு முந்திய காலத் திலும் மாணாக்கர்கள் அனைவரும் ஸ்லேட்டுப் பலகையில் எழுதித்தான் படித்தார்கள். அத்துடன் ஆசிரியர்கள் சொல்வதைத் தங்கள் மனமாகிய பலகையிலும் எழுதி வைத்துக் கொண்டார்கள். இதன் காரணமாக, அறிவுத் துறை ஒவ்வொன்றிலும் மேதாவிகளும், மகான்களும் தோன்றினார்கள். ஸர். ஸி. வி. ராமன் போன்ற விஞ்ஞான மேதைகளும், ஸர். எஸ். சுப்பிரமண்ய ஐயர் போன்ற பிரபல நீதிபதிகளும், உயர்தரப் பள்ளிக்கூடங்களில் ஸ்லேட்டுப் பலகையிலும் மனப் பலகையிலும் எழுதிக் கொண்டு பாடம் படித்தவர்கள்தான்.

இந்த நாளில் "கல்வித்தரம் குறைந்து வருகிறது'' என்ற கூக்குரலை அடிக்கடி கேட்டு வருகிறோம். நோட்டுப் புத்தகங்களும், 'நோட்ஸ்' புத்தகங்களும் பெருகப் பெருக, கல்வித் தரம் குறைந்து கொண்டு

வருவதில் வியப்பு ஒன்றுமில்லை. பிள்ளைகள் எதையும் மனத்தில் வாங்கிக் கொள்வதில்லை. பாடப் புத்தகங்களைத் தவிரச் சுமார் 12 நோட்டுப் புத்தகங்கள் வாங்கிக் கொள்கிறார்கள். பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் சொல்வதை நோட்டுப் புத்தகங்களில் எழுதுவதிலேயே அவர்களுடைய சக்தி முழுதும் செலவழிந்து விடுகிறது. பிறகு பரீட்சை எழுதும் சமயத்தில், சகல ரோக சஞ்சீவி மருந்துகளைப் போல் வெளியாகும் சகல பரீட்சை வினவிடை 'நோட்ஸ்' புத்தகங்களை எடுத்துப் படித்து மூளைகளை வறட்டிக் கொள்கிறார்கள். இந்த முறையினால் பிள்ளைகளின் தேகசுகத்துக்கு நேரும் கேட்டைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. பாடப் புத்தகங்களையும் நோட்டுப் புத்தகங்களையும் தூக்கிச் செல்வதற்கே அவர்கள் கையில் 'திராணி' இருப்பதில்லை.

ஆரம்பக் கல்வித் திட்டத்துக்கு வந்திருப்பது போன்ற புரட்சிகரமான மாறுதல் நம் ஹைஸ்கூல் கல்வித் திட்டத்துக்கும் வரவேண்டும். அந்தப் புரட்சிகரமான மாறுதலில் முதற் காரியமாக நோட்டுப் புத்தகங்களும், 'நோட்ஸ்' புத்தகங்களும் ஒழிக்கப்பட வேண்டும்.

## நான் படித்தது பச்சைப் புத்தகம்!

பட்டிக்காட்டு மாப்பிள்ளை ஒருவன் மாமனார் வீட்டுக்குப் போனான். 'மாப்பிள்ளை படித்தவர்' என்பதாக மாமனாருடைய ஊரில் ஒரு வதந்தி பரவியிருந்தது. மாப்பிள்ளைக்கு முதல் மரியாதைகள் நடந்தபிறகு மாமனார் வீட்டு ஜனங்கள் அவரைப் படிக்கச் செய்து பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். மைத்துனன் ஒரு புத்தகத்தைக் கொண்டு வந்து அவர் கையில் கொடுத்தான். "மாப்பிள்ளை! உங்களுக்குப் படிக்கத் தெரியுமாமே? இந்தப் புத்தகத்தைக் கொஞ்சம் படித்துக் காட்டுங்கள்! எல்லாரும் கேட்க ஆசைப்படுகிறார்கள்!" என்றான். "எல்லாரும்" என்பதில் முக்கியமாக மாப்பிள்ளையின் மனைவியும் சேர்ந்தவள்தான்!

மாப்பிள்ளை ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் படித்து எத்தனையோ நாள் ஆயிற்று. எழுத்துக்கள் ஏதோ பூர்வ ஜன்ம வாசனை மாதிரி பூச்சி படர்ந்தது போல் தோன்றின. "என்னடா இது தர்ம சங்கடம்?" என்று யோசித்தான். ஒரு யுக்தி கண்டு பிடித்தான். புத்தகத்தை வாங்கி முன்னாலும் பின்னாலும் திருப்பிப் பார்த்தான். "நான்

எங்களூரில் படித்தது பச்சை அட்டைபோட்ட புத்தகம்! இது நீல அட்டை புத்தகமா யிருக்கிறதே! இதைப் படிக்க இயலாது !'' என்று திருப்பிக் கொடுத்து விட்டான்.

இந்தப் பட்டிக்காட்டு மாப்பிள்ளையின் நிலைமைக்குத் தான் நமது ஆரம்பப் பள்ளிக் கூடங்களில் படிக்கும் லட்சக்கணக்கான சிறுவர்—சிறுமிகள் சில வருஷ காலத்தில் வந்து விடுவார்கள் !

* * *

கல்விக்கு வருஷத்தில் 11 கோடி ரூபாய் செலவு செய்வதாகவும், அதில் ஏழு கோடி ரூபாய் ஆரம்பக் கல்விக்காகச் செலவு செய்வதாகவும் நம் மாகாண சர்க் காரின் மந்திரிகள் அடிக்கடி பெருமை யடித்துக் கொள் வதைக் கேட்கிறோம். 'பிறந்தகத்துப் பெருமையைப் புக்ககத்தில் சொல்லிப் பீற்றிக்கொள்ளும்' மருமகளைப் போலவே அவர்கள் பேசுகிறார்கள்.

ஆரம்பக் கல்விக்குச் சர்க்கார் செலவழிக்கும் பொதுப் பணம் ஏழு கோடி ரூபாயில் பாதிக்கு மேலே படு தண்ட மாகப் போகிறது என்று சர்க்கார் இலாகா அறிக்கைகளே ஒப்புக் கொள்கின்றன.

ஆரம்பப் பள்ளிகளில் சேரும் குழந்தைகளில் பாதிப் பேருக்கு மேலே மூன்ருவது வகுப்போடு நின்று விடுகிருர்கள். இவர்கள் தாங்கள் கற்ற எழுத்தறிவை அடுத்த இரண்டு மூன்று வருஷத்தில் அடியோடு இழந்து விடுகிருர்கள். நிரட்சர குட்சிகளாகவே ஆகிவிடுகிருர்கள். இது சர்க்கார் நிபுணர்களே கூறும் உண்மை. ஆகவே, ஏழு கோடி ரூபாயில் பாதியான மூன்றரைக்கோடி ரூபாய் விழலுக்கு இறைக்கும் நீராக வீணில் படு தண்டமாகப் போகிறது என்று ஏற்படுகிறது அல்லவா ?

பாக்கிக் குழந்தைகளில் முக்கால்வாசிப்பேர் ஐந்தாவது வகுப்போடு நின்று விடுகிறார்கள். இவர்கள் தங்கள் எழுத்தறிவை அவ்வளவு சீக்கிரம் மறப்பதில்லை. கையெழுத்துப் போடவும், புகை வண்டி நிலையங்களின் பெயர்களைப் படிக்கவும் சக்தி உள்ளவர்களாயிருக்கிறார்கள். மற்றப்படி இவர்களும் ஐந்தாறு வருஷத்தில் படிக்கும் திறமையை இழந்து விடுகிறார்கள்.

ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலிருந்து உயர் நிலைப் பள்ளிகளுக்குப் போகும் சிறுவர்—சிறுமிகளுக்குத்தான் கீழே கற்ற கல்வி பயன்படுகிறது.

ஆகவே, ஏழு கோடி ரூபாயில் ஐந்து கோடி ரூபாய்க்குமேலே வீண் தண்டமாகிறது என்று சொல்வது மிகையாகாது.

* * *

சென்னை சர்க்கார் ஆரம்பக் கல்விக்குச் செலவு செய்யும் ஏழு கோடி ரூபாயும் உண்மையில் பயன் உள்ளதாவதற்குச் சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தார் ஒரு யோசனை சொல்லியிருக்கின்றனர்.

புதுமையான விஷயம் ஒன்றுமில்லை; ஆனால், வற்புறுத்தி எடுத்துக்காட்டி யிருப்பதிலேதான் விசேஷம்.

ஆரம்பப் பாடசாலை உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு புத்தக சாலை நிறுவப்பட வேண்டும். அப்படி நிறுவிய புத்தக சாலைக்குச் சர்க்காரே ஒவ்வொரு ஆண்டிலும் வெளியாகும் நல்ல தமிழ்ப் புத்தகங்களை வாங்கி அனுப்பிவைக்க வேண்டும்.

இதனால் இரண்டு விதமான பயன்கள் விளையும் என்று உறுதியாகக் கூறலாம்.

முதலாவது பயன், ஆரம்பப் பாடசாலைகளில் படித்த கிராமத்துச் சிறுவர்—சிறுமியர்கள் தாங்கள் அரிதில்பெற்ற எழுத்தறிவை மறவாமல் இருப்பார்கள்.

ஊரில் ஒரு புத்தகசாலை இருந்தால் அங்கே போய்ப் படிக்கவேண்டும் என்ற ஆசை குழந்தைகளுக்கு அவசியம் ஏற்படும். ஆகையால் புத்தக சாலைக்குப் போவார்கள். தட்டுத்தடுமாறியாவது படிக்க முயலுவார்கள். நாலுபேர் சேரும்போது படிப்பைப்பற்றியும் புத்தகத்தைப்பற்றியும் பேசுவார்கள். ஏதாவது கொஞ்சம் படிப்பார்கள்.

அவர்களில் ஓரிருவர் அமெரிக்காவின் புகழ் பெற்ற ஜனாதிபதி ஆப்ரஹாம் லிங்கனைப்போல் நல்ல படிப்பாளி களாகவும் அறிவாளிகளாகவும் ஆகி உன்னதபதவிகளுக்கு வரக்கூடும்! உலகத்துக்கே உதாரண புருஷர்களாக விளங்கக் கூடும்! யார் கண்டது?

இரண்டாவது பயன், தமிழ் முதலிய மாகாணத் தாய் மொழிகளில் நவீன இலக்கிய வளர்ச்சி துரிதமாக நடை பெறும்.

தமிழ் நாட்டில் மற்றத் துறைகளில் எவ்வளவோ முன்னேற்றம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் நூலாசிரியர் களின் நிலைமட்டும் என்றும் ஒரே படியான மாறுத லில்லாத வறுமை நிலைமையாகவே இருந்து வருகிறது.

பள்ளிக்கூட பாடப் புத்தகங்களையும், பஞ்சாங்கப் புத்தகங்களையும் காமாதுர கீழ்த்தரக் குப்பைகளையும் தவிர நல்ல புத்தகங்கள் சாதாரணமாக ஆயிரம்—அல்லது இரண்டாயிரத்துக்கு மேல் விற்பதில்லை.

ஒரு நல்ல புத்தகம் இரண்டு மூன்று பதிப்புகளில் ஐயாயிரம் பிரதிகள் விற்றால் அசுவமேத யாகம் பூர்த்தி யானது போலத்தான்.

ஜனங்களுக்கு இப்படிப்பில் ஆசை இல்லாமலில்லை. ஆனால், புத்தகம் வாங்கப் பண சௌகரியமில்லை. வாழ்க் கைச் செலவுகள் அபரிமிதமாய் மற்றத் துறைகளில்

உயர்ந்து விட்டன. புத்தகம் வாங்க, அதிலும் புதிய தமிழ்ப் புத்தகம் வாங்க ஜனங்கள் பணத்துக்கு எங்கே போவது ?

இலக்கிய வளர்ச்சியில் சிரத்தை கொண்ட ஜனநாயக சர்க்கார் இங்கேதான் தலையிட்டு உதவி செய்ய வேண்டும்.

ஒவ்வொரு மாகாணத்திலும் குறைந்த பட்சம் பதினாயிரம் புத்தக சாலைகளைத் தங்களுடைய சொந்த மேற்பார்வையில் ஸ்தாபித்து நடத்த வேண்டும்.

வருஷந்தோறும் வெளியாகும் நல்ல புத்தகங்களில் பதினாயிரம் பிரதிகள் மாகாண சர்க்காரே வாங்கி மேற்படி புத்தக சாலைகளுக்கு விநியோகிக்க வேண்டும்.

இவ்விதம் சென்னை மாகாண சர்க்கார் செய்வதற்கு முன் வந்தால், ஆரம்பக் கல்விக்கு அவர்கள் செலவு செய்யும் ஏழு கோடி ரூபாய் உண்மையில் பயன்பட்ட தாகும்.

பேராசிரியர் வ. ரா. ஆசிரியர் வெங்கட்ரமணி போன்ற அறிஞர்களுக்கு நிதி வசூலித்துக் கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்படாது. புதுமைப் பித்தனுடைய குடும்பத் தார் போன்றவர்கள் நிர்க்கதியான நிலைமையை அடைய மாட்டார்கள். அவர்களுக்காகப் பொது மக்களின் உதவி கேட்க வேண்டியிராது.

சென்னை எழுத்தாளர் சங்கத்தின் யோசனைக்குச் சென்னை சர்க்கார் செவிசாய்த்து அதைப்பற்றிச் சிந்திப் பார்கள் என்று நம்புகிறோம்.

## வேடிக்கை! ஆனால் வெட்கக்கேடு!

ஏழு வருஷங்களுக்குமுன்பு அமெரிக்கர் வெண்டல் வில்க்கி என்பவரின் பெயர் பிரபலமாயிருந்தது. 1942-ல் மகா யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது அவர் ஆகாச விமானத்தில் உலகத்தைச் சுற்றிவந்தார்! ஊர் திரும்பியதும் "ஒரு உலகம்" என்னும் புத்தகத்தை எழுதினார். 1943-ம் ஆண்டில் பிரசுரமான அப்புத்தகம் அந்த ஒரு ஆண்டிற்குள் 26 பதிப்புகள் வெளியாகி பல லட்சம் பிரதிகள் விற்பனை ஆயின.

வெண்டல் வில்க்கி அவரது யாத்திரையின் போது ஸோவியத் ருஷியாவில் பிரயாணம் செய்தார். ஸோவியத் ருஷியாவுக்கு உட்பட்ட ஸைபீரியாவுக்கும்போயிருந்தார். ஸைபீரியாவில், உலகத்தின் வட கோடி என்று சொல்லக் கூடிய யாகுட்ஸ்கி நாட்டுக்குச் சென்றிருந்தார். வருஷத்தில் பெரும் பகுதி நாட்கள் பனிக்கட்டி மூடிக் கடுங் குளிராயிருக்கும் நாடு அது. ருஷிய ஜார் சக்கரவர்த்திகளின் ஆட்சியில் புரட்சிக்காரர்களை அந்த நாட்டுக்கு அனுப்புவது வழக்கம். அத்தகைய நாட்டின் தலைநகரான யாகுட்ஸ்கி பட்டணத்தில் போய் வெண்டல் வில்க்கி

இறங்கினார். உடனே, அவருக்கு அந்நகரைச் சுற்றிக் காட்ட நியமிக்கப்பட்ட தோழர் முரடாவ் வந்தார்.

"மிஸ்டர் வில்க்கி! இந்தப் பட்டணத்தில் உமக்கு என்ன பார்க்கவேண்டும்?" என்று முரடாவ் கேட்டார்.

அங்கே அப்படிப் பார்க்கவேண்டிய இடம் எதுவும் இருப்பதாக வில்க்கிக்குத் தோன்றவில்லை. மரக்கட்டைகளால் கட்டப்பட்ட சாதாரண வீடுகளே அப் பட்டணத்தில் இருந்தன. மொத்தம் ஜனத்தொகை ஐம்பதினாயிரம்தான்! பட்டணத்தில் இருந்த ஹோட்டல் ஒன்றே ஒன்றுதான்! அங்கே பார்ப்பதற்கு என்ன இருக்க முடியும்?

"இந்த ஊரில் லைப்ரரி ஏதாவது இருக்கிறதா?" என்று வில்க்கி கேட்டார்.

"ஓ! பேஷாக இருக்கிறது" என்றார் தோழர் முரடாவ்.

"அப்படியானால் அங்கே போகலாம்!" என்று சொன்னார் வெண்டல் வில்க்கி.

போனார்கள். அந்த யாகுட்ஸ்கி பட்டணத்திலேயே புத்தகசாலைக் கட்டிடந்தான் பெரிதாயும், வெளிச்சமாயும், சுத்தமாயும் இருந்தது. ஐம்பதினாயிரம் மக்களே உள்ள அந்தப் பட்டணத்துப் புத்தகசாலையில் எத்தனை புத்தகங்கள் இருந்தன, தெரியுமா? மொத்தம் ஐந்து லட்சத்து ஐம்பதினாயிரம் புத்தகங்கள்! (இது கட்டுக்கதையன்று; கற்பனையன்று. "ஒரு உலகம்" என்னும் புத்தகத்தில் 77-ம் பக்கத்தைப் பார்க்கவும்) முந்தைய ஒன்பது மாதத்தில் ஒரு லட்சம் பேருக்கு மேல் அந்தப் புத்தகசாலையிலிருந்து புத்தகம் எடுத்துப் படித்திருப்பதாக ரிஜிஸ்டர்களிலிருந்து தெரிந்தது! இவர்களில் பலர் பக்கத்து கிராமப்புறங்களிலிருந்து வந்தவர்கள்.

" 1917-ம் வருஷத்துக்கு முன்னால் இங்கே படிக்கத் தெரிந்தவர்கள் 100-க்கு 2 பேர்; இப்போது படிக்கத் தெரிந்தவர்கள் 100-க்கு 98 பேர். பாக்கியுள்ள இருவரையும் இவ் வருஷத்துக்குள் படிப்பித்தாக வேண்டும் என்று மாஸ்கோவிலிருந்து கட்டளை வந்திருக்கிறது !" என்றார் தோழர் முரடாவ்.

இதையெல்லாம் பார்த்தும் கேட்டும் வியந்த வெண்டல் வில்க்கி தமது புத்தகத்தில் "ருஷியா இவ்வளவு மகத்தான வலிமை பெற்றிருப்பதின் ரகசியம் இதோ இருக்கிறது !" என்று முடிவு கட்டிக் கூறுகிறார்.

* * *

மற்ற ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளிலும் புத்தக சாலைகளின் பெருக்கத்தைக் கேட்டால் நமக்குப் பிரமிப்புத்தான் உண்டாகும்.

1950-ம் ஆண்டில் இங்கிலாந்தில் புத்தகசாலை இயக்கத்தின் நூறு ஆண்டு விழாக் கொண்டாடினார்கள். அப்போது சில புள்ளி விவரங்கள் வெளியிடப்பட்டன. ஆங்கில நாட்டு லைப்ரரிகளில் பதிவு செய்துகொண்டு ஒழுங்காகப் புத்தகம் வாங்கிப் படித்தவர்கள் 1949-ல் ஒருகோடி இருபது லட்சம் பேர். மொத்தம் 31 கோடி 12 லட்சம் புத்தகங்களை அவர்கள் அந்த ஆண்டில் வாங்கிப் படித்திருக்கிறார்கள். அந்த ஒரு வருஷத்தில்மட்டும் பதினெட்டு லட்சம் பவுன் புதிய புத்தகங்கள் வாங்குவதில் புத்தக சாலைகள் செலவு செய்தன.

மக்கள் சொந்தத்திலேயே கணக்கற்ற புத்தகங்கள் வாங்கிப்படிக்கும் வழக்கமுள்ள ஆங்கில நாட்டில் புத்தக சாலைகள் இவ்வளவு அபிவிருத்தி யடைந்திருக்கின்றன.

* * *

ருஷியாவையும் இங்கிலாந்தையும் இவ்வாறு பார்த்த பிறகு நம் அருமைச் செந்தமிழ் நாட்டுக்கு வருவோம்.

இங்கேயும் சென்ற இருபது வருஷத்துக்கு மேலாகப் புத்தகசாலை இயக்கம் நடந்து வருகிறது. புதிய சுதந்திர சர்க்கார் வந்த பிறகு மக்களிடையே கல்வியைப் பரப்புவதில் முனைந்து முனைந்து வேலை செய்கிறார்கள். இவற்றின் பலனாக இன்று சென்னை மாகாணத்தில் மொத்தம் 2202 புத்தக சாலைகள் இருக்கின்றன. சென்னை நகரைச் சேர்த்துத் தமிழ் நாட்டுப் பன்னிரண்டு ஜில்லாக்களிலும் 925 புத்தகசாலைகள் நடைபெறுகின்றன. இவற்றின் நிர்வாகம் பற்றிய விவரம் வருமாறு: யுனிவர்ஸிடி 1, சர்க்கார் 5, ஜில்லா போர்டுகள் 15, நகர சபைகள் 54, பஞ்சாயத்துக்கள் 614, தனிப்பட்ட சங்கங்கள் 73, கூட்டுறவு—கிராம சங்கங்கள் 163.

மேற்படி புத்தக சாலைகளில் உள்ள புத்தகங்களைப் பற்றியும், படிப்பவர்களைப்பற்றியும் கொஞ்சம் தெரிந்து கொள்ள வேண்டாமா? சில உதாரணங்களைப் பார்க்கலாம்:

1. வலகையூர் (சேலம் ஜில்லா) கிராம சங்க புத்தக சாலை. புத்தகங்கள் 74 (வெறும் எழுபத்து நாலுதான்) படிப்பவர்கள் மாதம் சராசரி 24 பேர். சர்க்கார் மானியம் வருஷம் ரூ. 40.

2. அம்பா சமுத்திரம் பஞ்சாயத்து போர்டு வாசக சாலை. புத்தகம் 1153. (தமிழ் 612) படிப்பவர்கள் மாதம் சராசரி 2000. சர்க்கார் மானியம் வருஷத்திற்கு ரூ. 65.

3. கேனூர் பஞ்சாயத்து போர்டு புத்தகசாலை புத்தகங்களின் தொகை 110. சராசரி படிப்பவர்கள் 30. சர்க்கார் மானியம் ரூ. 50.

4. நடராஜா கல்விக் கழகம் நூல் நிலையம். (சென்னை) புத்தகங்கள் 1739 (தமிழ் 1619) சராசரி படிப்பவர்கள் 320. சர்க்கார் மானியம் ரூ. 98-4-0.

5. கோயமுத்தூர் முனிசிபல் இலவச வாசகசாலை. புத்தகம் 3187. (தமிழ் 1620) சராசரி படிப்பவர்கள் மாதம் 2374 பேர். சர்க்கார் மானியம் ரூ. 150.

6. முருகூர் (திருச்சி) ராஜாஜி வாசகசாலை. புத்தகங்கள் 300. (தமிழ் 290) மாதம் சராசரி படிப்பவர்கள் 290 பேர். சர்க்கார் மானியம் கிட்டவில்லை.

மேலே சில உதாரணங்கள் மட்டும் கொடுத்திருக்கிறோம். அநேக வாசக சாலைகளின் நிர்வாகிகள் "சர்க்கார் மானியம் முயன்றும் கிட்டவில்லை" என்ற பல்லவியைப் படித்திருக்கிறார்கள்.

[illegible] ஐம்பதினாயிரம் பேருள்ள யாகுட்ஸ்கி பட்டணத்துப் புத்தக சாலையையும் இரண்டு லட்சம் ஜனத்தொகையுள்ள கோயமுத்தூர் நகரத்தின் புத்தக சாலையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் வேடிக்கையாக யிருக்கும்.

யாகுட்ஸ்கி புத்தகசாலையில் மொத்தம் உள்ள புத்தகங்கள் 5லட்சத்து 50 ஆயிரம். கோவைப் புத்தகசாலையில் புத்தகங்களின் தொகை 3187.

எப்படியிருக்கிறது வேடிக்கை! ஆம்; ஒரு பக்கம் வேடிக்கைதான். இன்னொரு பக்கம் வெட்கக்கேடு! கோயமுத்தூர் நகரத்துக்கு ரோஸம் இருந்தால் அது நீலகிரி மலைக்குப் பின்னால் ஒளிந்து கொண்டுவிடும்.

கோயமுத்தூர் மட்டும் என்ன? தமிழ்நாடு முழுவதும் இதே கதைதான்.

இந்த வெட்கக்கேடான நிலைமை மாறவேண்டும். தமிழ் நாட்டில் பதினாயிரம் புத்தக சாலைகளாவது கூடிய வரையில் ஏற்பட வேண்டும். ஒவ்வொன்றிலும் பதினாயிரம் தமிழ்ப் புத்தகங்களாவது இருக்க வேண்டும்.

இதற்கு வேண்டிய முயற்சிகளைப் பொது மக்களும் ஸ்தலஸ்தாபனங்களும் மாகாண சர்க்காரும் கைக்கொள்ள வேண்டும்.

# ஹிந்தி ஏகாதிபத்தியம்

"மெள்ள மெள்ள வந்தாலும்—மிளகு என்றாலும் சுக்கு என்றாலும்" என்பதாக ஒரு பழமொழி உண்டு. "இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்கினான்" என்பதாக இன்னொரு பழமொழியும் கேட்டிருக்கிறோம்.

ஹிந்தி பாஷையைத் தேசீய பாஷையாக்கும் விஷயம் ஏறக்குறைய அம்மாதிரி நிலைமைக்கு இப்போது வந்திருக்கிறது.

அதிகார ஆசையும் ஏகாதிபத்திய வெறியும் ஒரு தேசத்தார்—ஒரு இனத்தாருக்குத்தான் உண்டு என்பது இல்லை. உலகமெங்கும் சர்வ வியாபகமாக நிறைந்திருக்கின்றன. அந்த ஆசையும் வெறியும் இப்போது வட நாட்டிலுள்ள ஹிந்தி பாஷைப் பண்டிதர்களையும் அரசியல் வாதிகளையும் பிடித்து ஆட்டுகின்றன.

ஹிந்தி பாஷை இந்தியாவின் தேசீய பாஷை யாவதோடு அவர்கள் திருப்தியடையத் தயாராயில்லை.

இந்தியாவில் ஹிந்தி ஏகாதிபத்தியத்தையே நிலைநாட்டி விடப் பிரியப்படுகிறார்கள். மற்ற பாஷைகளையும், மற்ற

பாஷைக்காரர்களையும் ஹிந்தி பாஷைக்கு அடிமையாக்கி விடவே எண்ணுகிறார்கள்.

அதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. தாய் மொழிப் பற்றுள்ள யாருமே ஒப்புக்கொள்ள முடியாதுதான்.

* * *

சில நாளைக்கு முன்பு தினப் பத்திரிகைகளில் திடுக்கிடும் செய்தி ஒன்று வெளியாயிற்று. அகில இந்தியக் கல்வி மகாநாடு ஒன்று கூடியதாம். அதில் இந்தியாவின் பற்பல மாகாணங்களையும் சேர்ந்த கல்வி மந்திரிகளும் சர்வ கலாசாலை வைஸ் சான்ஸலர்களும் வந்திருந்தார்களாம். பற்பல யோசனைகள் சொல்லப்பட்டனவாம்; பற்பல விஷயங்களைப்பற்றி விவாதித்தார்களாம்.

அந்த அபூர்வமான யோசனைகளில் ஒன்று—மகாநாட்டில் விவாதிக்கப்பட்ட விஷயங்களில் ஒன்று, இந்தியாவில் உள்ள எல்லா காலேஜ் வகுப்புகளிலும் எல்லா விஷயங்களையும் ஹிந்தி பாஷையில் போதிக்க வேண்டும் என்பதுதான்!

எப்படி இருக்கிறது கதை? அதாவது "இத்தனை நாளும் நமது கல்வி முறையில் இங்கிலீஷ் வகித்த ஸ்தானத்தை இனி மேல் ஹிந்தி வகிக்கட்டும்!" என்கிறார்கள் ஹிந்தி ஏகாதிபத்தியவாதிகள்.

இவ்வளவு நாளும் கழுத்தில்புல்லைக் கட்டிக்கொண்டு மென்று நின்றீர்களே! அதற்குப் பதிலாக இனிமேல் கல்லைக் கட்டிக் கொள்ளுங்கள் என்கிறார்கள்.

சென்னை மாகாணத்துக் கல்வி மந்திரி கனம் மாதவ மேனன் மேற்படி யோசனையை எதிர்த்தாராம். "இப்படி நீங்கள் விதி செய்தால் அதை எங்கள் மாகாணத்தில் மீறும்படியாகவே இருக்கும்!" என்று எச்சரித்தாராம்.

அத்துடன் மேற்படி யோசனை கைவிடப் பட்டதாம். "முடிவாகக் கைவிடப்பட்டது" என்று சொல்வதற்கில்லை. மறுபடியும் சந்தர்ப்பம் வரும்போது அதே யோசனையை ஹிந்தி ஏகாதிபத்திய வாதிகள் கிளப்பிக் கொண்டுதானிருப்பார்கள். மற்ற பாஷைக்காரர்கள் விழிப்புடனிருந்து அத்தகைய முயற்சிகளை எதிர்க்கும் படிதானிருக்கும்.

ஏன் இப்படிச் சொல்கிறேமென்றால், மேற் கண்ட யோசனையானது ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சி அல்ல. ஒரு பெரிய ஹிந்தி ஏகாதிபத்தியப் பிரசார திட்டத்தின் சிறிய அறிகுறியேயாகும்.

ஹிந்தி ஏகாதிபத்தியப் பிரயத்தனம் தற்சமயம் பல இடங்களில் பல உருவங்களில் தலைதூக்கித் திருவிளையாடல் புரிவதைப் பார்த்து வருகிறோம்.

காசி சர்வகலாசாலையில் முன்னெல்லாம் வெளி மாகாணங்களிலிருந்து வரும் மாணாக்கர்களுக்கு இடங் கொடுத்து வந்தார்கள். வகுப்புகளுக்குரிய தகுதியை மட்டும் கவனித்தார்கள்.

பிறகு ஹிந்தி, தெரிந்த மாணாக்கர்களை மட்டும் எடுத்துக் கொள்வோம் என்று சொன்னார்கள்.

அதற்குப் பிறகு, ஹிந்தியை நன்றாய்ப் படித்துத் தேறியவர்களையே எடுத்துக் கொள்வோம் என்றார்கள்.

இப்போது ஹிந்தியைத் தாய் பாஷையாகக் கொண்டவர்களையே சேர்த்துக் கொள்வோம் என்று சொல்லத் தொடங்கி யிருக்கிறார்கள்.

இன்னும் சில தினங்கள் போனால், "போன ஜன்மத்திலும் ஹிந்தியைத் தாய் பாஷையாகக் கொண்டவர்களையே எடுத்துக் கொள்வோம்!" என்று நிபந்தனை போடுவார்கள்போலும்!

இம்மாதிரி வடநாட்டுக் கல்வி ஸ்தாபனங்களில் ஏற்படும் முட்டுக்கட்டைகள் ஒருபுறமிருக்க, இந்திய சர்க்கார் உத்தியோகங்களிலும் ஹிந்தியின் ஏகாதிபத்தியம் கொடுமையுடன் ஆட்சி செலுத்தத் தொடங்கியிருக்கிறது.

எவ்வளவு நன்ருகத் தென்னிந்தியர்கள் ஹிந்தியைக் கற்றுக் கொண்டாலும் ஹிந்தியைத் தாய் பாஷையாகக் கொண்டவர்களைப் போல் அந்தப் பாஷையை லாவகமாக வழங்க முடியுமா ?

ஏதோ ஆங்கிலேயர்களாவது "இண்டியன் இங்கிலீஷ்' என்று தங்களுக்குள் சிரித்து விட்டு, ஏதோ காரியம் நடந்தால் சரி என்று இருந்தார்கள். ஆனால் ஹிந்தி ஏகாதி பத்தியவாதிகளோ ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மற்ற பாஷைக்காரர்களை மட்டந் தட்டவும் அதைக் காரண மாகக் கொண்டு கீழே அமுக்கி வைக்கவும் பார்க்கிருர்கள். இந்த நிலைமை கொஞ்சமும் நல்லதல்ல ; நியாயமும் அல்ல.

* * *

தாய் மொழியையன்றி வேறொரு மொழியின் உதவி நமக்கு அவசியம் என்று ஏற்படும் பட்சத்தில், ஹிந்தியைக் காட்டிலும் ஆங்கிலத்தையே நாம் ஒப்புக் கொள்ளலாம். ஆங்கிலத்தை ஒப்புக்கொள்வதில் பலன் அதிகம் உண்டு. காலேஜ் வகுப்புகளில் தமிழ் மொழியில் பாடங்கள் கற்பிப்பதற்குக் காலம் வரும் வரையில் ஆங்கிலத்தில் கற்பிப்பதே உண்மையில் பயனுள்ளதாயிருக்கும்.

ஆங்கில மொழியிலுள்ள அறிவுக் களஞ்சியங்களுக்கு அளவு சொல்ல முடியாது. ஆங்கில மொழியில் உள்ள இலக்கியச் செல்வம் ஏழு சமுத்திரங்களையும் விடப் பெரியது. அந்தப் பாஷையிலேயே எழுதப்படும் நூல்களை யல்லாமல் உலகில் எந்த மூலையில் எந்தப் பாஷையில்

ஒரு உபயோகமுள்ள புதிய நூல் எழுதப்பட்டாலும் அது அக்கணமே ஆங்கிலத்தில் வந்து விடுகிறது.

தமிழ் நாட்டைப் பற்றிய விவரங்களைச் சொல்லும் புத்தகங்கள் தமிழில் உள்ளவற்றைக் காட்டிலும் ஆங்கிலத்தில் அதிகம் என்பது உங்களுக்குத் தெரியுமா ?

எழும்பூரில் மியூஸியத்தை அடுத்துள்ள 'கனிமரா லைப்ரரி' என்று சொல்லப்படுகிற புத்தகசாலைக்குச் சென்று பாருங்கள். அதில் தமிழ் நாட்டுப் பிராணிகள், பட்சிகள், விருட்சங்கள், முதலியவற்றைக் குறித்து எழுதப்பட்டிருக்கும் ஆங்கிலப் புத்தகங்களைக் கேட்டு வாங்கிக் கொஞ்சம் பாருங்கள்.

தமிழ்நாட்டில் எத்தனை விதமான மரங்களும் செடி கொடிகளும் இருக்கின்றன. அவற்றிற்குத் தமிழ்ப் பெயர் என்ன ? தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆங்கிலம் லத்தீன் ஆகிய மொழிப் பெயர்கள் என்ன ஆகிய விவரங்கள் அப்புத்தகங்களில் அடங்கி யிருக்கின்றன. ஆகா ! எத்தனை ஆயிரம் வகை மரஞ் செடி கொடிகளும் பிராணிகளும், பறவைகளும் நம் தென்னாட்டில் இருக் கின்றன என்று ஆச்சரியப்பட்டுப் போவோம். ஒவ்வொரு வகை மரஞ் செடி கொடிக்கும் இலை எப்படி யிருக்கும் என்று சித்திரம் போட்டும் காட்டியிருக்கிறது.

இவ்வாறே உலகத்தில் எந்த மூலையில் எந்தப் பகுதியில் எந்த விதமான விசேஷம் இருந்தாலும் அதைப் பற்றி ஆங்கில பாஷை மூலம் தெரிந்து கொள்ளலாம்.

ஆஸ்திரேலியா தேசத்தை யடுத்த கடல்களில் எத்தனை ஆயிரம் வகை மீன்கள் இருக்கின்றன என்பதைப் படங் களுடன் விவரமாகக் கூறும் பெரிய புத்தகங்கள் ஒன்பது இருக்கின்றன.

இன்னும் ஆங்கில பாஷையில் இது வரை அச்சாகி வெளியாகி யிருக்கும் புத்தகங்களைப் பற்றி ஒரு கணக்குச் சொல்லுகிறார்கள். இரண்டு (2) என்னும் இலக்கத்தைப் போடுங்கள். அதற்குப் பின்னால் இருபது பூஜ்யங்களைப் போடுங்கள். இப்படிப்பட்ட எண்ணிக்கை எவ்வளவு என்று சொல்வதற்குச் சாதனம் ஒன்றும் கிடையாது. கற்பனை செய்து பார்த்துக்கொள்ள வேண்டியதுதான்! அத்தனை புத்தகங்கள் ஆங்கில பாஷையில் வெளிவந்திருக்கின்றன! வேறொரு பாஷையின்மூலம் நமது பிள்ளைகள் காலேஜ் படிப்புக் கற்றுக் கொள்வது என்று ஏற்பட்டால், அதற்குரிய பாஷை உலக பாஷையாகிய ஆங்கிலமேயாகும்.

ஹிந்தி பாஷையை வளர்ப்பதற்கென்று இன்றைக்கு ஆரம்பித்துப் பெரும் பிரயத்தனம் செய்தால் ஒரு வேளை இன்னும் நூறு வருஷங்களில் ஆங்கில பாஷைக்கு நிகரான அறிவுச் செல்வங்களையும் இலக்கியச் செல்வங்களையும் உண்டாக்கலாம். ஆனால் அதற்குள்ளே ஆங்கில பாஷை இன்னும் எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்குமோ தெரியாது!

நம்முடைய காலேஜுகளில் ஆங்கில மொழியை அகற்றிவிட்டுத் தமிழைக் கொண்டுவருவதென்றால், தாய் மொழி அபிமானம் காரணமாக அதை நாம் ஒப்புக் கொள்ளலாம். தமிழை வளர்ப்பதற்கு அது ஒரு சாதனமாகும் என்று எண்ணித் திருப்தி யடையலாம்.

ஆனால் ஆங்கிலத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக ஹிந்தியை உபயோகிப்பது என்பது முழு மடமையேயாகும்.

* * *

இந்தியாவுக்கு ஒரு தேசிய பாஷை வேண்டும் என்பதை நாம் ஒத்துக் கொள்கிறோம். அந்தத் தேசீய பாஷை ஹிந்தி பாஷையாகத்தான் இருக்க முடியும் என்பதையும் ஒத்துக் கொள்கிறோம்.

தேசீய பாஷை எந்தெந்தக் காரியத்துக்கு அவசியமோ அந்தக் காரியங்களுக்கு மட்டுமே அதை வைத்துக் கொள்வோம். அரசியல் வாழ்க்கையில் ஈடுபடுவதற்கு ஹிந்தி தெரிந்திருக்க வேண்டும். இந்திய சர்க்காரில் உத்தியோகம் பார்ப்பதற்கு ஹிந்தி தெரிந்திருக்க வேண்டும். வியாபாரிகளுக்கும் யாத்ரீகர்களுக்கும் ஹிந்தி தெரிந்திருக்க வேண்டும். சில சமயம் வரும் நல்ல ஹிந்தி சினிமாக்களைப் பார்ப்பதற்கும் ஹிந்தி தெரிந்திருக்கலாம். இதற்கெல்லாம் தெரிந்திருக்க வேண்டிய ஹிந்தி மிகவும் சொற்பம்.

மற்றப்படி அறிவைத் தேடுவதற்கோ இலக்கியச் சுவையை அநுபவிப்பதற்கோ பண்பாட்டை வளர்ப்பதற்கோ ஹிந்தி பாஷையினால் பயன் ஒன்றும் இல்லை.

தமிழிலும் ஸமஸ்கிருதத்திலும் உள்ளவை போன்ற பழம் பெரும் இலக்கியங்களை ஹிந்தியில் காண முடியாது.

தற்காலத்தில் வெளியாகும் சுமாரான ஹிந்தி இலக்கியங்கள் தமிழில் வெகு சீக்கிரத்திலேயே வந்து விடுகின்றன.

* * *

ஹிந்தி பாஷைக்காரர்கள் அந்தப் பாஷையின் ஏகாதிபத்தியத்தை ஸ்தாபிக்க விரும்புகிறார்கள் என்று நாம் சொல்லுவது விளையாட்டல்ல; வெறும் பயமுறுத்தலும் அல்ல. வடநாட்டு அரசியல் வாதிகள்— ஹிந்தியின் பண்டிதர்களுக்கிடையே இத்தகைய ஏகாதிபத்திய வெறி வளர்ந்துவருகிற தென்பதற்குப் பல அறிகுறிகள் காணப்பட்டு வருகின்றன. வடநாட்டுக்குச் சென்று வரும்

தமிழ் நாட்டுப் பிரதிநிதிகள் பலரும், வடநாட்டில் வாழ்க்கை நடத்தி வரும் தமிழர்கள் பலரும் ஏற்கெனவே இதைப் பற்றிப் புகார் செய்து வந்திருக்கிறார்கள்.

அதற்கெல்லாம் சிகரம் வைத்தது போல, "காலேஜுகளில் ஹிந்தி மூலம் பாடம் போதிக்க வேண்டும்" என்ற யோசனை வெளியாகியிருக்கிறது.

எனவே, ஹிந்தி பாஷையின் ஏகாதிபத்தியத்தை ஸ்தாபிக்கும் முயற்சி வெறும் பூச்சாண்டி அல்ல; நமக்கு ஏற்பட்டுள்ள உண்மையான அபாயம் என்றே முடிவு கட்ட வேண்டி யிருக்கிறது.

தமிழ் நாட்டில் ஒரு கூட்டத்தார் சில காலத்துக்கு முன்பு "ஹிந்தி ஒழிக!" என்ற கூச்சலைக் கிளப்பினார்கள். இந்தக் குறுகிய துவேஷ மனப்பான்மை கொண்ட கூச்சலைத் தமிழ்ப் பெருமக்கள் எதிர்த்து ஒழித்துக் கட்டினார்கள்.

அது போலவே ஹிந்தி பாஷையின் ஏகாதிபத்தியத்தை ஸ்தாபிக்கும் முயற்சியையும் தமிழ்ப் பெருமக்கள் எதிர்த்து ஒழிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

* * *

"இந்தியாவின் தேசீய பாஷையாக ஹிந்தியைக் கொள்ளுங்கள்" என்று காந்தி மகாத்மா கூறிய உபதேசத்தை நாம் என்றும் சிரமேற்கொண்டு நடக்கச் சித்தமா யிருக்கிறோம்.

அதே மாதிரி "தாய் மொழியைப் போற்றி வளருங்கள்" என்று காந்தி மகான் அருளிய உபதேசத்தையும் நமது இதயத்தில் பதித்து வைத்துக்கொண்டு அதன்படியே நடப்போம்.

## தமிழ் உயர்க !

தமிழ் நாட்டில் தமிழ் மொழி தழைத்து வளர்வது மட்டும் போதாது; உயர்ந்து ஓங்கவும் வேண்டும். தமிழ் தழைப்பதற்குரிய முயற்சிகளோடு தமிழை உயர்த்து வதற்குரிய முறைகளையும் தமிழ் மக்கள் தெரிந்து கடைப் பிடிக்க வேண்டும்.

"தமிழ் உயர்ந்திராமல் இப்போது மட்டும் தாழ்ந்தா கிடக்கிறது? தமிழ் உயர் தனிச் செம்மொழி அல்லவா? குன்றங்கொண்ட முருகனுக்கு உகந்த மொழியல்லவா? பொதிகை மலைமேல் குறுமுனிவர் வீற்றிருந்து வளர்த்த மொழியல்லவா? தமிழை இன்னும் உயர்த்துவது எப்படி? தமிழ் தாழ்ந்திருக்கிறது என்றுதான் எப்படிச் சொல்லலாம்?" என்று தமிழ் அன்பர்கள் சண்டைக்கு வரவேண்டாம்!

தமிழ் உயர்ந்து சிறந்த ஒப்பற்ற மொழிதான்; ஐயமே இல்லை.

ஆயினும் சிற்சில விதங்களில் சிற்சில இடங்களில் தமிழை உயர்த்துவதற்கு இடமிருக்கத்தான் செய்கிறது.

உதாரணமாக, தமிழ் நாட்டுப் பள்ளிக்கூடங்களையும் கலாசாலைகளையும் குறிப்பிடலாம். தமிழ் நாட்டுக் கல்வி நிலையங்களில் இன்னமும் தமிழ் மகள் தாழ்வுற்றுத் தானிருக்கிறாள் !

தமிழ் ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் சம்பளத்தையும் மற்ற ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் சம்பளத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து, மேலே நாம் கூறியதின் உண்மையை நேயர்கள் தெரிந்து கொள்ளலாம்.

* * *

தமிழ் நாட்டில் ஆங்கிலத்தை முதன்மை மொழியாகக் கொண்ட பள்ளிக்கூடங்களைப் பிரிட்டிஷார் ஏற்படுத்திய காலத்திலிருந்து தமிழ்ப் பண்டிதர்கள் அசட்டை செய்யப் படுவதும், ஏளனத்துக்கு உள்ளாவதும் வழக்கமாயிருந்து வருகிறது.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் "கமலாம்பாள் சரித்திரம்" என்னும் புதுக் கதை எழுதிய ஆசிரியர் ராஜமய்யர், பள்ளிக்கூடங்களில் தமிழ்ப் பண்டிதர்களின் நிலைமையை நன்கு விவரித்திருக்கிறார். அந்தக் கதையில் வரும் தமிழ்ப் பண்டிதர் அம்மையப்பப்பிள்ளை நம் மனக் கண்முன் வரும்போதெல்லாம் நமக்குச் சிரிப்புங்கூட வருகிறது ! அதோடு அவமானமும் தொடர்ந்து வரத்தான் செய்கிறது.

ஸ்ரீ ராஜமய்யர் "கமலாம்பாள் சரித்திரம்" எழுதிய காலத்துக்குப் பிறகு, தமிழ் நாடும், தமிழும் எத்தனையோ முன்னேற்றம் அடைந்திருக்கின்றன. தமிழாசிரியர்களும் வெகுவாக முன்னேறி யிருக்கிறார்கள். 'தமிழுண்டு, தாமுண்டு, பள்ளிக்கூட மாணவர் உண்டு' என்று தமிழ் ஆசிரியர்கள் இருந்த காலம் மாறி "தமிழ் நாட்டுக்குத் தனிச் சுதந்திர அரசியல் வேண்டும் !" என்று கேட்கும்

அளவுக்கு அவர்கள் உலக விவகாரங்களில் முன்னேறியிருக்கிறார்கள்.

ஆனால், தமிழாசிரியர்களுடைய சம்பளம் மட்டும் முன்னேற்றம் இன்றி முன்போலவேதான் இருக்கிறது.

மற்றப் பாடங்கள் போதிக்கும் ஆசிரியர்களின் சம்பளத்தைக் காட்டிலும் தமிழ் ஆசிரியர்களின் சம்பளம் நமது கல்விகூடங்களில் குறைவாகவே இருந்துவருகிறது!

இது நியாயம் ஆகுமா ? தமிழ் மொழியைக் குறைவுபடுத்துவது ஆகாதா ?

புண்ணியம் செய்த நாளது 1947-ம் ஆண்டில் தமிழ் நாட்டு உயர்தரப் பள்ளிகளில் ஆங்கில ராணி இதுவரை அமர்ந்திருந்த முதன்மைப் பீடத்திலிருந்து அவளை இறக்கி விட்டோம். அந்தப் பீடத்தில் இப்போது தமிழ்த்தாய் கம்பீரமாக வீற்றிருக்கக் காண்கிறோம்.

இது ஆனந்தமான காட்சி; தமிழ் மக்கள் மகிழ்ந்து பூரிப்பதற்குரிய காட்சி.

ஆனால் தங்கச் சிங்காதனத்தில் தமிழ்த்தாயை அமரச் செய்து விட்டு, அவள் பழைய கந்தல் துணிகளையே உடுத்தியிருக்கும்படி விடலாமா ?

தமிழ்த்தாய்க்குத்தொண்டுசெய்யும் தமிழ் ஆசிரியர்களை ஏழைமைக்கும் எளனத்துக்கும் ஆளாக விட்டிருக்கலாமா ?

பொதுவாக, ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் சம்பளம் இப்போது மிகக் குறைவு என்றும், அதிகமாக்க வேண்டும் என்றும் கிளர்ச்சி நடந்து வருகிறது.

அப்படிக் குறைந்த சம்பளம் வாங்கும் ஆசிரியர்களுக்குள்ளேயும் தமிழாசிரியர்களை மட்டும் தனியே பிரித்துத் தாழ்வுபடுத்த வேண்டுமா ?

இது தமிழ் மொழியையே தாழ்வுபடுத்துவது ஆகாதா? தமிழ்த் தாய்க்கும் தமிழ் மக்களுக்கும் அவமானம் அல்லவா ?

எனவே, நாளது மார்ச்சு ஆரம்பத்தில் சென்னையில் திருவாளர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் தலைமையில் கூடிய மாகாணத் தமிழாசிரியர் மகாநாடு மேற்படி சம்பள வேற்றுமையை நீக்கவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றியிருப்பது மிகவும் நியாயமான கோரிக்கையாகும்.

*　　　　*　　　　*

தமிழாசிரியர் மகாநாட்டின் மற்றத் தீர்மானங்களைப் பார்க்கும் போது, காலப் போக்கை யொட்டித் தமிழாசிரியர்கள் எவ்வளவு முன்னேற்ற மடைந்திருக்கிறார்கள் என்பது நன்கு புலனாகிறது. முக்கியமாக, மேற்படி மகாநாட்டின் நாலாவது தீர்மானம் நமது கவனத்தைக் கவருகிறது.

" தமிழ் நாட்டுக் கலாசாலைகளிலும் பள்ளிக்கூடங்களிலும் தற்போது வழங்கும் தமிழ்ப் பாடதிட்டங்களைப் பரிசீலனை செய்வதற்கும், தமிழ் அன்பும் தமிழ்ச்சுவையும் மாணாக்கர்களுக்கு உண்டாகும் முறையில் மேற்படி பாட திட்டங்களை மாற்றி அமைக்க யோசனைகளைச் சொல்வதற்கும் பின் வரும் எழுவர் அடங்கிய குழு அமைக்கப்படுகிறது."

தீர்மானத்தைப் படித்ததும் முதலில் வாசகர்களுக்கு, முக்கியமாக மாணவர்களுக்கு,—ஒரு வகை அச்சம் ஏற்படக்கூடும். " ஏற்கெனவே தமிழ்ப் பாடங்கள் மிகக் கடினமாக இருக்கின்றன. தமிழாசிரியர்கள் பரிசீலனை செய்து அப் பாடங்களை மேலும் கடினமாகச் செய்து தொலைக்கப் போகிறார்களே !" என்ற திகிலே ஏற்படக்கூடும்.

ஆனால் தமிழாசிரியர் மகாநாட்டு வரவேற்புத் தலைவர் திரு. மு. வரதராசனாரின் வரவேற்பு உரையைப் படித்தால் அத்தகைய அச்சத்துக்கு இடமில்லையென்று தெரிந்துகொள்ளலாம்.

“பாட நூல்களில் பழைய இலக்கிய இலக்கணங்களுள் பயன் குறைந்தவை சிலவற்றைத் தயங்காமல் நீக்கி விடவேண்டும். அவற்றை வேண்டியவர் வேண்டியபோது வேண்டிய அளவு கற்றுக்கொள்ளலாம் என ஒதுக்கிவிட வேண்டும். அவற்றிற்கு ஈடாக அறிவியல் அரசியல் நூல்கள் சிலவற்றைக் கற்குமாறு பாடதிட்டங்களை மாற்றி அமைக்க வேண்டும்” என்றும்,

“வித்வான் தேர்வும், மற்றத் தமிழ் தேர்வுகளும் நினைவாற்றலை மட்டும் தேர்ந்தறிவனவாக இருக்கின்றன... எழுத்து எழுத்தாகக் கற்று, வரி வரியாகப் படித்து, வாக்கிய வாக்கியமாக விடை எழுதிவிட்டு நினைவாற்றலை மட்டும் புலப்படுத்தும் முறையே இப்போது உள்ளது. ‘இது என்றது எதனை?’ ‘அது என்றால் என்ன?’ ‘கோடிட்ட சொல் எவரைக் குறிக்கும்?’ என்பதைப் போன்று நினைவை ஆராயும் சிறு பிள்ளைக் கேள்விகளை உயர்ந்த வகுப்புக்களில் கேட்கும் “முறை மாறிப் போக வேண்டும்” என்றும் திரு வரதராசனார் கூறியுள்ளார்.

தமிழ்பாட திட்டத்தின் கேடுகளைப்பற்றித் தமிழாசிரியர் ஒருவர் தமிழாசிரியர் கூட்டத்தில் இவ்வளவு தெளிவாக மனம் விட்டுப் பேசுவது இதுவே முதல் தடவை.

திரு. மு. வரதராசனாரின் மேற்படி கூற்றில் ‘சிறு பிள்ளைக் கேள்விகள்’ என்னும் தொடரை மட்டும் நாம் ஆட்சேபிக்கிறோம். ஏனெனில் அத்தகைய பயனற்ற அசட்டுக் கேள்விகளை உயர்ந்த வகுப்புகளிலேதான் கேட்கக் கூடாது. சிறு பிள்ளைகளின் தலையிலே தாராள